FREE COPY
Registered as a News Paper in Sri Lanka
දිනමුරසු වාරමලර්
பக்கம் 24 ரூபா 30.00
ஜூலை 09 - 15, 2015

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 1126



## களத்தில் மகிந்த



## கலக்கத்தில் கட்சிகள்



மத்தியதரைக் கடலில் இராணுவத் தலையீடு





வேற்றுக் கிரகவாசிகளின் கதை

உள்ளே

இனவாதத்தை முறியடிக்குமா இந்த தேர்தல்

## ௐ பாவங்களைப் போக்கும் விரதங்கள்

*ஆன்மீகம்*

பாவத்தினால் உண்டான பிணியை தலைதூக்கவிடாமல் செய்வதற்கு நோன்பு முறைகள் பலவற்றை தந்திருக்கிறது ஹிந்து தர்ம சாஸ்திரங்கள். நாள், திதி, நட்சத்திரம் முதலானவற்றை மையமாக வைத்து, கிருத்திகை, ஏகாதசி, சஷ்டி என்பன போன்ற விரதங்களை பரிந்துரைத்தது.

உணவுக் கட்டுப்பாட்டுடன் தெய்வத்தை மனதில் நிறுத்தி வழிபட, பாவம் அகலும். சிறுவர்கள், பெண்கள், முதியோர்கள் ஆகியோருக்கு விரதமே வேள்விக்குச் சமம் என பரிந்துரைக்கப்பட்டுள்ளது. வரலட்சுமி நோன்பு, காரடையான் நோன்பு, துளசி பூஜை, பஞ்சாட்சர ஜபம் முதலான விரதங்கள் ஒட்டிக் கொண்டிருக்கும் பாவங்களைத் துடைக்கவல்லது.

பிணியின் உச்சக்கட்டம்தான் பாவத்தின் அடையாளம். தற்கால சூழலில், மருத்துவர்களால் கைவிடப்பட்ட நோய்களும் ஏராளம். பாவம் கண்ணுக்குப் புலப்படாது. ஆனால் நோயைக் கொண்டு பாவத்தை அறிய முடியும்.

இதனால்தான், பன்னிரண்டு மாதத்தில் உள்ள விரதங்களை கடைப்பிடிக்க வலியுறுத்துகிறது தர்மசாஸ்திரங்கள். தினமும் நீராடி, கோயிலுக்குச் சென்று வணங்கி வந்தால் போதுமா? இதில் மனநிறைவு ஏற்படலாம். பாவம் போகாது. இதற்கு விரதங்களே வழிகாட்டுகின்றன.

## கடவுள் நம்பிக்கை

இயேசு தனது சொந்த ஊருக்கு வந்தபோது, அவரால் வல்ல செயல் எதையும் செய்யமுடியவில்லை. அதற்கான காரணம், இயேசுவை அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. அடிப்படையில் இயேசுவிடத்தில் அவர்களுக்கு நம்பிக்கை இல்லை. இயேசு ஒரு சாதாரண தச்சருடைய மகன். இவரைப்பற்றித் தெரியாதா? இவரால் எப்படி வல்ல செயல்கள் செய்யமுடியும்? நம்மோடு வாழ்ந்தவர், சாதாரண தச்சுத்தொழிலைச் செய்தவர், ஏழைப் பிண்ணனியிலிருந்து வந்தவர். இவரிடத்திலே எப்படி கடவுளின் அருள் அதிகமாக இருக்கமுடியும்? இவரிடத்திலிருந்து நான் என்ன பெரிதாகப் பெற்றுக்கொள்ள முடியும்? என்கிற அந்த எண்ணம்தான், புதுமைகள் செய்வதற்கு இயேசுவால் முடியாமல் போனதற்கான காரணம்.

முடியும் என்ற நம்பிக்கை இல்லையென்றால், நிச்சயமாக செய்யக்கூடிய காரியம் முடியாமல்தான் போகும். அடிப்படையில் நம்பிக்கை இருந்தால் தான் எதையும் செய்யமுடியும் என்பதை இது காட்டுவதாக அமைகிறது. முடியும் என்ற நம்பிக்கை . கடவுள்மேல் நாம் வைத்திருக்கிற நம்பிக்கையை அடிப்படையாக வைத்து அமைகிறது. எந்த ஒரு மனிதர் கடவுள் பக்தியோடு இருக்கிறாரோ, கடவுள் நம்பிக்கையோடு வாழ்கிறாரோ, அவர், தனது வாழ்வில் எல்லாம் முடியும் என்று நம்புகிறார். கடவுளின் வல்ல செயல்களில் முழுநம்பிக்கை வைத்து, தன்னையே அர்ப்பணிக்கிறார்.

## ரமழான் நோன்பில் நமது பணிகள்

புனித ரமழான் மாதத்திற்கு அல்லாஹ்வுடைய வேதத்துடன் அதிவிசேஷ தொடர்புண்டு. அல்குர்ஆன் 'லவ்ஹுல் மஹ்பூல்' என்ற பலகையில் இருந்து முதல் வானத்தின் பக்கம் முழுமையாக இம்மாதத்தில்தான் இறங்கியது. பின்னர் இது கொஞ்சங்கொஞ்சமாக இருபத்தி மூன்றாண்டுகளில் இவ்வுலகிற்கு இறங்கியது. எனவே நாம் இம்மாதத்தில் அல்குர்ஆனை அதிகம் அதிகம் ஓதவேண்டும்.

பொதுவாக அல்குர் ஆனை ஓதுவதற்கு இம்மாதத்தில் எந்தளவு எம்மால் முடியுமோ அந்தளவுக்கு அதற்கு முக்கியத்துவம் கொடுத்து அதனை ஓதிவிடவேண்டும். இதுதவிர இவ் ரமழான் மாத நோன்பில் நாம் நான்கு விஷயங்களில் அதிக கவனம் செலுத்தவேண்டுமென அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். அவைகள் லாஇலாஹ இல்லல்லாஹ் என்ற கலிமாவை திக்ரு செய்தல், பாவ மன்னிப்புத் தேடல், சொர்க்கத்தை வேண்டுதல், நரகத்தைவிட்டு பாதுகாப்புத் தேடல். இவைகளே ரமழான் நோன்பில் நமது பணிகள்.

எம்.சி.கலீல், கல்முனை - 05

## கவிதைப்போட்டி 1123



● பாராட்டுக்குரியது ●

### மன்றாட்டம்

தாகத்தின் வேகம்
தலைகீழாக நின்றேனும்
தண்ணீர் பருகவேண்டும்
இரு உயிரினங்களுக்கும்
இப்படி ஒரு நிலை
இது ஏன்!
மனிதக் கொடுமையால்
மழை பெய்யவில்லை
மழை கேட்கும்
மன்றாட்டம் இப்படி.

எம்.சி.கலீல்,
கல்முனை - 05

## கவிதைப் போட்டி இல 1126



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவுசெய்து அனுப்பிவையுங்கள்.
அனுப்பவேண்டிய கடைசித் திகதி 20. 07. 2015

கவிதைப் போட்டி இல. 1126 தினமுரசு வாரமலர்,
த.பெ.இல. 167, யாழ்ப்பாணம்.
இல. 373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

### குரங்குப் புத்தி

நீருக்குள் குப்புறப்
பாயும் குரங்கும்
மனிதனும் சொல்வது
இன்னும் குரங்குப்புத்தி
மனிதனை விட்டு
மறையவில்லை
என்பதே.

அ.சந்தியாகோ,
கண்டி.

### தட்டுப்பாடு

தண்ணீருக்குத் தட்டுப்பாடு
தரணியிலே தலைதூக்கி
விட்டால்
தாகத்தைத்
தணித்துக்கொள்ள
இப்படித்தான் இந்த
உயிர்களும்
தாவத் தொடங்கிவிடுமோ.

இளம்பிறை,
புத்தளம்.

### பூரிப்பு

நீரோடையில்
நீரருந்தும் ஜீவன்களே
உங்கள் தாகம் தீர்வதை
எண்ணி நம் உள்ளம்
பூரிக்கின்றது.

சு.ஜெயரூபன்,
பருத்தித்துறை.



### டார்வின் இல்லை?

நூற்றாண்டுகள்
பல கடந்தாலும்
இன்னும் மாறவில்லை எதுவும்
குரங்கிலிருந்துதான்
மனித வந்தான்
என்பது உண்மையே...

ஜெ.சிந்து, வேலணை -02




## உங்கள் பக்கம்

### சனிக்கிழமைகளில் வங்கி திறக்கப்பட வேண்டும்

கடந்த கால யுத்தத்தினால் அழிந்து சுக்குநூறாகிய நகரங்களுள் புதுக்குடியிருப்பும் ஒன்றாகும்.

யுத்தம் முடிவடைந்ததைத் தொடர்ந்து நலன்புரி முகாம்களில் தங்கவைக்கப்பட்டிருந்த மக்கள் தங்கள் சொந்த இடங்களுக்கு மீள அனுப்பப்பட்டபோது புதுக்குடியிருப்பு மக்கள் உருக்குலைந்த கற்குவியல்களாய் கிடந்த நகரையே காணநேரிட்டது. இந்நிலையில் படிப்படியாக மீளக் கட்டியெழுப்பப்பட்டு வருகின்ற புதுக்குடியிருப்பு நகரத்தை நம்பி அப்பிரதேசத்தைச் சூழ வாழுகின்ற ஆயிரக்கணக்கான மக்கள் வாழ்ந்து வருகின்றனர். அவர்கள் தங்களுடைய அத்தியாவசியத் தேவைகளை நிவர்த்தி செய்துகொள்வதற்கு புதுக்குடியிருப்பு நகரையே நம்பி இருக்கின்றனர்.

இப்படியான மக்களின் தேவைகளை பூர்த்தி செய்வதற்குத் தேவையானவகையில் அங்கு அமைந்துள்ள சில காரியாலயங்கள் கரிசனையுடன் செயற்படுவதில்லை என்பது அப்பிரதேச மக்களின் குறையாக இருக்கின்றது குறிப்பாக வங்கிச் சேவை.

நாட்டில் ஏராளமான வங்கிகள் இருக்கின்றபோதிலும் புதுக்குடியிருப்பில் குறிப்பிட்ட சில அரச வங்கிகள் மட்டுமே இயங்கிவருகின்றன. ஆனால் அவற்றின் சேவை தொடர்பில் மக்கள் திருப்திகொள்ள முடியாத நிலையே காணப்படுகின்றது.

உதாரணமாக, இவ்வங்கிகள் சனிக்கிழமைகளில் மூடப்படுவதால் அவசர தேவை நிமித்தம் வங்கிச் சேவையை நாடுகின்ற மக்கள் பல மைல்களுக்கப்பால் உள்ள முல்லைத்தீவுக்கே செல்லவேண்டியுள்ளது.

இதனால் தேவையற்ற அலைச்சல்களையும் பணவிரயங்களையும் எதிர்கொள்ள வேண்டியுள்ளது. இதனால் அப்பிரதேச மக்களின் நன்மை கருதி உரிய அதிகாரிகள் தமது கவனத்தைச் செலுத்தவேண்டும் என்பதை முரசு உங்கள் பக்கம் ஊடாகக் கேட்டுக்கொள்கின்றோம்.

என்.கவின், புதுக்குடியிருப்பு.


மடல்கள் மற்றும்
ஆக்கங்கள் உட்பட சகல
தொடர்புகளுக்கும்
தினமுரசு வாரமலர்
த.பெ.இல:- 167,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி :-0212223628
தொலைநகல்
(Fax): 0212221811
ஈமெயில்: (E-mail):-
thinamurasu@live.com


### அமைதியின் சொற்கள்

விஞ்ஞானிகள் விண்ணிலே உயிர்கள் இருக்கின்றனவா?, இல்லையா? என்று தேடிக் கொண்டிருக்கின்றார்கள். இருக்கின்றனவா? இல்லையா என்று நான் சொல்லவில்லை. இதுவரை அவர்கள் ஒருவரையும் கண்டுபிடிக்கவில்லை. கோடான கோடி மைல்களுக்கு எம்மைத் தவிர எவருமில்லை. அமைதி ஒவ்வொரு மனிதரிலும் ஏற்படும்போது பூமியிலும் சொர்க்கம் ஏற்படக்கூடும்.

இணையத்தளம்: www.wopg.org
- பிரேம் ராவத்

## வாசகர்சாலை வளர்க முரசு!!!

### பக்கத்தில் மாற்றம் வேண்டும்

முரசு எம்மை வியாழன்தோறும் உற்சாகமூட்டுகிறது. சில பக்கங்கள் சலிப்பூட்டக்கூடியனவாகவும் இருக்கின்றது. அந்தவகையில் 2ஆம் பக்கத்தை பார்ப்பதற்கு வசீகரமானதாக இல்லை. அந்தப் பக்கத்தில் முரசு மாற்றத்தைக் கொண்டுவரவேண்டும். அதேபோல் 23 ஆம் பக்கத்தில் இடம்பெறும் வரலாற்றுத் தலைவர்களின் தகவலை கொஞ்சம் கொஞ்சமாகப் பிரசுரிப்பதால் அது வாசிப்பதற்கு கனதியாக இல்லை. அதை கூடுத லாகப் பிரசுரிக்குமா முரசு. எனது கருத்தையும் முரசு கவனத்தில் கொள்ளவேண்டுமென் கேட்டுக் கொள்கின்றேன்.

முரசு நல்ல பல செய்திகளை எமக்கு எடுத்துக்கூறுகிறது. அறிவை வளர்க்கக்கூடிய பலவற்றை நீ வாரி வழங்குகிறாய்.

குறுக்கெழுத்துப் போட்டி அருமை. மூளைக்கு வேலையாகவும், விசேடமான நல்ல கேள்விகளையும் வழங்குகின்றாய். குறுக்கெழுத்துப் போட்டிக்கு ஆயிரம் ரூபாய் ஆக்கியமைக்கு வரவேற்கிறேன். வாழ்க முரசு!! வளர்க முரசு!!!

கே.அச்சுதன், மன்னார்.

### சூப்பர்

தினமுரசு வணக்கம், முரசின் அத்தனை அம்சங்களும் அருமையாக உள்ளது. வாராவாரம் உலாவந்து எம் உள்ளங்களில் நீங்கா இடம்பெற்றுவிட்டாய். அரசியல் தொடர் எங்களை சிந்திக்கவைக்கிறது. லேடீஸ் ஸ்பெசல், பாப்பா முரசு, சினிமா, 2ஆம் பக்கம் என்பவை சூப்பர். முரசு மென்மேலும் வளர வாழ்த்துக்கள்.

ஆர்.தினேஸ், வவுனியா.

### விமர்சனம்

முரசு ஆயிரமாவது இதழையும் தாண்டி வெற்றி நடை போடுகிறதெனில், அதற்கு விடாமுயற்சியும் கடின உழைப்பும்தான் காரணம். பல சவால்களுக்கு முகங்கொடுத்து சாதனை படைத்துக் கொண்டிருக்கிறாய். வெளிநாட்டு அரசியலை கண்முன்னே கொண்டுவரும் வேணு கிருஸ்ணாவின் கட்டுரையைப் பாராட்டுகிறேன். இருந்தும் இரு பக்கங்களில் அதன் பிரசுரம் எவ்வளவு தூரம் வாசகர்களைச் சென்றடையும் என்பது தெரியவில்லை. எனது சக நண்பர்கள் இது பற்றிய ஒரு விமர்சனத்தை என்னிடம் முன்வைத்தார்கள்.

எஸ்.சஜந்தன், கிளிநொச்சி.

# நாங்கள் நடத்தியது கூட்டாட்சி கூட்டமைப்பு நடத்தியது குள்ளநரி ஆட்சி

## ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா



**மாற்றம் என்பது தென்னிலங்கை அரசியலில் மாத்திரம் வந்தால் போதாது. வட - கிழக்கு தமிழ் மக்களுடைய தலைமைகளிலும் அந்த மாற்றம் ஏற்படவேண்டும். வட-கிழக்கு தமிழ் தலைமைகளில் மாற்றம் ஏற்[illegible]தான் கிடைக்கின்ற வாய்ப்புகள் சரியாகப் பயன்படுத்தப்பட்டு தமிழ் மக்களுடைய பிரச்சி[illegible]களை இலகுவாகவும் விரைவாகவும் தீர்க்கமுடியும் என்று தெரிவித்த ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா தமிழ்த் தலைமைகளில் மாற்றம் ஒன்று நிகழாத வரை தமிழ் மக்களின் தலைவிதி மாறாது என்பதுதான் எங்களுடைய தேர்தல் கள பிரதான கோஷம் எனவும் தெரிவித்தார்.**

யாழ்ப்பாணத்தில் பொதுமக்களை சந்தித்த ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் கட்சியின் சின்னமான வீணைச் சின்னத்தில் போட்டியிடுவது தொடர்பாகவும், மக்களின் அபிப்பிராயங்களை தெரிந்துகொள்வது தொடர்பாகவும் நடைபெற்ற கூட்டத்திலே இவ்வாறு கூறினார்.

தொடர்ந்தும் அவர் கூறுகையில், மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி எக்காலத்திலும் வட - கிழக்கு பிரிக்கமுடியாத அலகு என்பவைதான் எங்களுடைய ஆரம்பகால கோசமாக இருநதது. அந்தவகையில்தான் நடைபெறவுள்ள பொதுத் தேர்தலிலும் வடக்கு, கிழக்கில் போட்டியிடத் தீர்மானித்துள்ளோம். எங்களுடைய நீண்டகால அரசியல் அனுபவத்தையும் எமது மக்களுடைய நீண்ட காலக் கோரிக்கையாக இருந்து வந்த ஈ.பி.டி.பி தனித்துப் போட்டியிட வேண்டுமென்ற கோரிக்கைகளையும் கணக்கிலெடுத்தே நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் தனித்துப் போட்டியிடும் முடிவை எடுத்துள்ளோம்.

பொதுத்தேர்தல் ஒன்று இடம்பெறவுள்ள நிலையில், அத்தேர்தலில் தங்களுடன் இணைந்து போட்டிபிடுமாறு ஜனாதிபதி எம்மிடம் இச்சந்திப்பில் கேட்டிருந்தார். அதற்கு நாம் எடுத்துள்ள தனித்துப் போட்டியிடும் முடிவை அவரிடம் தெளிவுபடுத்தியுள்ளேன்.

இத்தேர்தலில் தமிழ்த் தலைமைகளில் மாற்றம் ஏற்படாதபட்சத்தில் எமது மக்களுக்கு எதுவும் கிடைக்கப் போவதில்லை என்ற கோசமே பிரதான அம்சமாக அமையவுள்ளது.

கடந்த அறுபது வருடங்களில் தமிழ் மக்களுடைய பிரச்சினைகளை தமிழ்த் தலைமைகள் சரியான முறையில் கையாளவில்லை என்பது தான் என்னுடைய கவலை. கிடைத்த வாய்ப்புகளைக்கூட சரியாகப் பயன்படுத்தாது பல தவறுகளை இழைத்துள்ளார்கள். இவற்றுக்கு கடந்த காலங்களில் பல உதாரணங்களைக் கூறலாம்.

இந்தத் தவறுகள் மாறி மாறி ஆட்சிக்கு வந்த அரசுகளின் தவறா? அல்லது அரசியல் பேரம்பேசும் பலத்துடன் இதுகாலம்வரை இருந்து வந்த தமிழ்பேசும் தலைமைகளின் தவறா என்பதை நாம் ஆராய வேண்டியிருக்கிறது.

எனவே, இந்தத் தேர்தல் பல கேள்விகளுக்கும் பலருடைய தில்லுமுல்லுகளுக்கும் சிறந்த ஒரு களமாக அமையும் என நான் நம்புகின்றேன்.

நீண்டகாலமாக நாம் எடுத்து வந்த நடைமுறை சாத்தியமான நிலைப்பாடு காரணமாக அந்த நிலைப்பாட்டின் வெற்றிகாரணமாக முன்னேற்றம் காரணமாக எங்கள் மீது சேறுவாரி பூசப்பட்டுவந்தது. பாராளுமன்ற ஜனநாயகத்தின் ஊடாக தமிழ் மக்களுடைய பிரச்சினைகளுக்கு தீர்வு காணமுடியாது என்ற அழுத்தங்கள் இருந்த சூழ்நிலையில் அதனை மறுதலித்து இல்லை ஜனநாயகத் தேர்தலுக்கூடாக, பாராளுமன்றத்தின் ஊடாகத்தான் தீர்வைக் காணலாம் என்று நாம் கடந்த காலங்களில் முன்னெடுத்து வந்திருந்த சூழ்நிலையில், இன்று பலர் எங்களுடைய நிலைப்பாட்டை ஒத்த செயற்பாடுகளில் இறங்குவதைக் காணக்கூடியதாக இருக்கிறது என்று கூறிய செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா அவர்கள்,

நாம் மக்களிடம் பேசுவதை மத்தியிலும் மத்தியில் பேசுவதை மக்களிடம் பேசுவதுதான் எங்களுடைய வெளிப்படையான அரசியல். அதனைத்தான் நாம் செய்து வந்திருக்கிறோம். இனி வரும் காலத்திலும் செய்வோம். அதைவிடுத்து வட - கிழக்கில் தமிழ் மக்களுடைய தலைமைகள் என்று கூறிக்கொண்ட குள்ளநரி ஆட்சி நடத்துவோரைப் போன்றது அல்ல எங்களுடைய அரசியல் பயணம் என்றும் கூறினார்.

## ஹஜ் யாத்திரிகர்களுக்காக புதிய விமான நிலையம்

சவூதி அரேபியாவின் மதீனா நகரில் அமைக்கப்பட்டுள்ள புதிய விமான நிலையம் அந்நாட்டு மன்னர் சல்மானினால் திறந்துவைக்கப்பட்டுள்ளது.

உலகம் முழுவதிலுமிருந்து ஹஜ் யாத்திரையை மேற்கொள்ள வருடாவருடம் கோடிக்கணக்கான மக்கள் மக்கா மற்றும் மதீனாவுக்கு செல்கின்றனர். அவர்களுக்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்காகவே இந்த புதிய விமான நிலையம் திறக்கப்பட்டுள்ளதாக சவூதி அரசு தெரிவித்துள்ளது.

இந்த ஆண்டிற்கான ஹஜ் யாத்திரைகள் அடுத்த மாதம் முதல் ஆரம்பிக்கப்படவுள்ளது. இந்நிலையில் மதினா நகரில் விமான நிலையம் இல்லாத குறையை போக்க புதிய விமான நிலையத்தை கட்டவும், கட்டுமானம் மற்றும் பராமரிப்பு பணியை கட்டுமான நிறுவனத்திடம் ஒப்படைப்பதற்கு சவூதி அரசு அண்மையில் ஒப்பந்தம் செய்து கொண்டது.

இதையடுத்து, மிகவும் வேகமாக இடம்பெற்ற விமான நிலையத்தின் கட்டுமானப் பணிகள் நிறைவடைந்த நிலையில் தற்பொழுது குறித்த விமான நிலையம் திறக்கப்பட்டுள்ளது. இளவரசர் முஹம்மது பின் அப்துல் அஜீஸ் சர்வதேச விமான நிலையம் என பெயரிடப்பட்டுள்ள இந்த விமான நிலையத்தை அமைப்பதற்கு சுமார் 120 பில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வணிக உறவுகளைப் பெருக்கும்

# மோடியின் இராஜதந்திரம்



வங்கதேசத்துடன் இந்தியா சமீபத்தில் செய்துகொண்டுள்ள உடன்படிக்கை வரலாற்றுச் சிறப்பு வாய்ந்தது. காஷ்மீர் பிரச்சினைக்கு இணையான நில எல்லைப் பிரச்சினைக்குத் தீர்வுகாண முடிந்ததுடன், இந்தியத் துணைக் கண்டம் முழுவதையும் ஒரே வர்த்தக மண்டலமாக்கும் நோக்கம் கொண்டது. வணிகமும் முதலீடும் பிரதமர் நரேந்திர மோடியின் இராஜதந்திரத்தின் முக்கிய நோக்கங்களாகும்.

நம்முடைய பக்கத்து நாடுகளின் தேவைகள் என்ன என்று பதவியேற்ற முதல் நாளிலிருந்தே அவர் செலுத்தி வரும் அக்கறையால் நல்ல பலன்கள் விளைகின்றன. "துப்பாக்கிமுனையில் அதிகாரம் பிறப்பதில்லை, அரிசிக் கலயத்திலிருந்துதான் பிறக்கிறது" என்பதை நன்கு புரிந்துவைத்திருக்கிறார். இந்திய மரக்கலங்களும் வாணிபப் பெருங்குடிகளும் இந்தியாவுக்கு ஏற்படுத்தி வைத்த செல்வாக்கைப் புரிந்துகொண்டு அந்தப் பாணியில் பயணிக்கிறார் மோடி.

இந்தியாவுக்குத் தொடர்ச்சியாக 5,000 மைல்கள் நீளக் கடற்கரை இருக்கிறது என்பதை மறந்த நிலையிலேயே நாம் இருக்கிறோம். ஒரு சமயத்தில் உலக வர்த்தகத்தில் 25வீதம் இந்தியாவால் மேற்கொள்ளப்பட்டது. இன்றோ உலக வர்த்தகத்தில் நம்முடைய பங்களிப்பு வெறும் 2வீதம் தான். அந்நாளில் ஏற்றுமதிமூலம் அதிக இலாபம் அடைந்த நாடு இந்தியாதான். சேரநாட்டிலிருந்த (கேரளம்) முசிறி துறைமுகம் 2,000 ஆண்டுகளுக்கு முன்னால் உலகளவில் பிரபலமாக இருந்தது. உரோமப் பேரரசிலிருந்து துறைந்தபட்சம் அன்றாடம் ஒரு கப்பலாவது தமிழகக் கடற்கரைக்கு வந்து நங்கூரம் பாய்ச்சும். தமிழகத்திலும் கேரளத்திலும் விளையும் அகில், சந்தனம், மிளகு, ஏலக்காய், பருத்தியாடைகள் போன்றவற்றை வாங்கிக் கொள்ளும். தமிழர்களோ ரோமானியப் பேரரசிடமிருந்து எதையும் அதிசயமாகக் கருதி வாங்காமல் தங்கம் அல்லது வெள்ளியை வாங்கிக் கொண்டு வாணிபக் கணக்கை முடிப்பார்கள்.

சர்வதேச அரங்கில் இந்தியாவின் அதிகாரம் எப்போதும் வன்மையாக இருந்ததில்லை, மென்மையாகவே இருந்திருக்கிறது. இராணுவ பலத்தினால் அல்ல, ஏற்றுமதி வளத்தினால் தான் இந்தியா செல்வாக்கு பெற்றிருந்தது. நாலாவது நூற்றாண்டு தொடங்கி 12ஆவது நூற்றாண்டுவரையில் இந்தியாவின் செல்வாக்கு தெற்கிழக்கு ஆசியாவிலிருந்து மத்திய ஆசியாவரை பரவியிருந்தது என்கிறார் ஷெல்டன் பொல்லாக் என்ற சமஸ்கிருத அறிஞர்.

இப்பகுதிகளில் இருந்த அரசுகளிலும் நீதிமன்றங்களிலும் ஆட்சிமன்றங்களிலும் உயர் குடிமக்கள் தங்களுக்குள் பேசிக்கொள்ளும் மொழிகளில் ஒன்றாக சமஸ்கிருதமும் இருந்தது. மத்திய கால ஐரோப்பாவில் லத்தீன் இருந்ததைப்போல் அக்காலத்தில் எல்லா நாடுகளிலும் உயர் குடிமக்கள் பல மொழிகளைக் கற்றுப் பேசிவந்தனர். சமஸ்கிருதம் என்பது எல்லைகடந்த தகவல் தொடர்புமொழியாக இருந்தது.

இந்தியக் கலாசாரம் எப்படி கீழைநாடுகளுக்கும் மத்திய ஆசியாவுக்கும் பரவியது என்று தெரியாவிட்டாலும் வாணிபத்தின் மூலமாகப் பரவியிருக்கும் என்று ஊகிக்க இடம் இருக்கிறது. யாழ்ப்பாணம், சாவகம், சுமத்திரா போன்ற தீவுகளுக்கு இந்திய நாவாய்கள் தங்கம் பெற்றுவருவதற்காகப் போனதைத் தமிழின் சங்க இலக்கியங்கள் தெரிவிக்கின்றன. அந்த கப்பல் பயணங்கள் மிக நீண்டவை. கப்பலில் சென்றவர்களுக்கு சடங்குகளைச் செய்ய உதவியாக இருப்பதற்காக பிராமணர்களும் பௌத்த பிட்சு களும் சென்றதாக சில குறிப்புகள் தெரிவிக் கின்றன. "உலக வரலாறு என்பது வாள்களின் வீரம் தொடர்பான வரலாறுதான், இந்தியா மட்டுமே ஆன்மீகம்மூலம் சாம்ராஜ்ஜியத்தை விரிவுபடுத்திக்கொண்டது" என்கிறார் மைக்கேல் உட் என்ற வரலாற்று ஆசிரியர்.

நம் நாடு சுதந்திரம் அடைந்த 68 ஆண்டுகளில் நம்முடைய பக்கத்து நாட்டவர்கள் நம்மை வெறுத்ததுதான் அதிகம். நம்முடைய வெளியுறவுத்துறை அதிகாரிகளும் அவர்களை ஒன்றுக்கும் லாயக்கற்றவர்கள் என்றே பார்க்கப் பழகியிருந்தனர். "இந்தியாவுக்கு அருகிலும், கடவுளுக்கு தொலைவிலும் இருக்கின்றோம்" என்றே கூறிவந்தனர்.

மோடியின் வித்தியாசமான அணுகுமுறை அவர்களைக் கவர்ந்துள்ளது. அவருடைய பொருளாதார ராஜதந்திரம் வங்கதேசத்தில் முதல் வெற்றியைப் பெற்றுத்தந்திருக்கிறது. அது புதிய வாய்ப்புகளுக்கு வாயில் கதவைத் திறந்துவிட்டிருக்கிறது. இதே அணுகுமுறையை மோடி தொடரும்போது அதிகாரிகளும் ஒத்துழைத்தால் பக்கத்து நாடுகளுடனான உறவு நிச்சயம் மேம்படும்.

# தினமுரசு

த.பெ.இல:- 167. யாழ்ப்பாணம்.
தொலைபேசி: -021 222 3628
தொலைநகல் (Fax):- 021 222 1811
ஈ-மெயில் (E-mail):-
thinamurasu@live.com


## முரசம்

வாசகர்களுக்கு வணக்கம்!

### கூட்டமைப்பின் சாயம் வெளுக்கும்!!

தவறுகள், முரண்பாடுகள், விமர்சனங்கள், எரிச்சல்கள் என அத்தனையையும் கடந்தும் தமிழனுக்கா?, சிங்களவனுக்கா? வாக்களிப்பது என்ற கேள்வியை சீர்தூக்கிப் பார்த்து கூட்டமைப்புக்கு வாக்களித்து வந்த தமிழ் மக்களுக்கு நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தல் சிறந்த பாடத்தை புகட்டியுள்ளது.

இம்முறை கூட்டமைப்பினர் தமிழரா? சிங்களவரா? என்று கேட்கமுடியாது. ஏன் என்றால் நாட்டின் அரசியல் சூழல் தேவைக்கு அதிகமான மாற்றத்தைக் கண்டுள்ளது. அதன் உச்சமாக கூட்டமைப்பே மத்திய அரசோடு பங்காளிகளாக ஆட்சிபுரிகின்ற அளவுக்கு மாறியுள்ளது.

ஒரு காலத்தில் முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா. தமிழ்த் தலைமைகள் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்டு 13ஆவது திருத்தச் சட்டத்தை கட்டம் கட்டமாக அமுல்படுத்தி மாகாண சபையை நமது நிர்வாக அலகாக மாற்றியிருக்க வேண்டுமென்று கூறியபோது. அதை தும்புத்தடியாலும் தொட்டுப்பார்க்க முடியாது. தனிநாடுதான் தீர்வு என்று தூற்றியவர்கள் பின்னர் மாகாண சபை தேர்தலில் போட்டியிட்டு இன்று முதலமைச்சர்களாகவும். உறுப்பினர்களாகவும் வலம்வருகின்றார்கள்.

பின்னர் மாறியுள்ள பூலோக அரசியல் மாற்றத்தை தமிழ்த் தலைமைகள் புரிந்துகொண்டு மத்திய அரசுகளுடன் பேரம்பேசும் அணுகுமுறையை கொண்டதான இணக்க அரசியல் வழி-முறையை முன்னெடுப்பதன் ஊடாகவே அரசியல் தீர்வை பெற்றுக்கொள்வதோடு. மாகாண சபையையும் பலப்படுத்த முடியும். யுத்த அழிவுகளுக்குள்ளான நமது தேசத்தை மீண்டும் எழுச்சியோடு தூக்கி நிறுத்தமுடியும். அபிவிருத்தியால் நமது தாயகதேசத்தையும். அழிவுகளை சந்தித்த மக்களின் வாழ்வையும் நம்பிக்கையோடு கட்டியெழுப்ப முடியும் என்று கூறியதோடு தானும் அவ்வழியில் பயணித்தார்.

அதை துரோகம் என்றும். அடிமை அரசியல் என்றும். சலுகை அரசியல் என்றும் கூறிய கூட்டமைப்பினர் இப்போது அரசின் பங்காளிகளாகவும். அரசின் முகவர்களாகவும் கூச்சமில்லாமல் வளம் வருவதோடு. பெருந்தொகைப் பணத்தைப் பெற்றுக்கொண்டு தமிழ் மக்கள் காட்டிக் கொடுத்திருக்கின்றார்கள்.

அதுமட்டுமல்லாமல். தமக்குள்ளே ஒற்றுமைப்பட்டு கூட்டமைப்பை தனிக் கட்சியாக பதிவு செய்யமுடியாதவர்கள். பதவிகளுக்காக ஆசனப்பங்கீடுகளில் முரண்பட்டவர்கள். தமிழ் மக்களிடையே ஏனைய தமிழ் கட்சிகள் அமைப்புக்களின் இருப்பை மறுக்கும் ஜனநாயக விரோதிகள். தமிழ் மக்களை தொடர்ந்து ஏமாற்றுவதற்கு இடமளிக்கவிடக்கூடாது.

இவ்வாறான பிற்போக்குத்தனங்களைக் கொண்டுள்ள கூட்டமைப்பினர் தொடர்ந்தும் தமிழர் தேசியம் எனும் போர்வைக்குள் ஒழிந்துகொள்ளவும். புனிதர்களாகக் காட்டிக் கொள்ளவும் முடியாது என்ற தமிழ் மக்களின் விழிப்புணர்வானது.

போட்டிக் களத்தில் மக்களுக்காக உழைத்தவர்கள் மற்றும் கிடைத்த வாய்ப்புக்களை மக்களுக்கு பலனளிக்கும் வகையில் பிரயோகித்தவர்களுக்கும் தெளிவான ஆணையை வழங்குவதற்கும் ஒரு சந்தர்ப்பமாக தமிழ் மக்களின் வாக்களிப்பு அமைவதை கூட்டமைப்பால் தடுக்க முடியாமலிருக்கும்.

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை
என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்.



# களத்தில் மகிந்த கலக்கத்தில் கட்சிகள்!



"கடந்த ஜனாதிபதித் தேர்தலில் நான் தோல்வியை சந்தித்தேன். அதை ஏற்றுக்கொண்டு பதவியை கையளித்து விட்டு வெறுங்கையுடன் வீட்டுக்குச் சென்றேன். எல்லோரும் தோல்வியை மறுத்து நான் பதவியை தக்கவைத்துக் கொள்ள சூழ்ச்சிகளைச் செய்வேன் என்று எதிர்பார்த்தார்கள். ஆனால் நான் அதைச் செய்யவில்லை. நான் தாய்நாட்டையும், மக்களையும் நேசிக்கின்றவன். என்னால் நாட்டுக்கு எதிராகவும், மக்களின் ஆணைக்கு எதிராகவும் செயற்படமுடியாது.

என்மீது இந்த நாட்டில் வாழும் ஐம்பத்தி எட்டு இலட்சம் வாக்காளர்களான மக்கள் அசைக்கமுடியாத நம்பிக்கைவைத்துள்ளார்கள். அதற்கு நான் தலைவணங்குகின்றேன். நான் அரசியலில் ஓய்வுபெற்றுவிடவே சிந்தித்தேன். ஆனால் நல்லாட்சி நடத்தியவர்கள் நாட்டை சர்வதேச சூழ்ச்சிக்காரர்களிடம் சிக்க வைத்துள்ளார்கள். அவ்வாறு சர்வதேச சூழ்ச்சியாளர்களிடம் சிக்கிய நாடுகளில் உள்நாட்டு யுத்தங்களும், அழிவுகளும் முடிவில்லாமல் தொடர்கின்றன.

அப்படி நிலைமைக்கு நாம் இடமளிக்கமுடியாது. நாம் பயங்கரவாதத்திடமிருந்து இந்த நாட்டை மீட்டிருக்கின்றோம். ஐம்பது ஆண்டுகளாக நடைபெறாதிருந்த அபிவிருத்தியை நாமே முன்னெடுத்தோம். எனவே நாட்டைக் காப்பாற்ற மீண்டும் அரசியலுக்கு வரவேண்டிய அவசியத்தை ஏற்படுத்தியிருக்கின்றார்கள்.

என்னை மீண்டும் அரசியலுக்கு வருமாறு மக்கள் இன்று எனது வீட்டுக்குவந்து உழைத்திருக்கின்றார்கள். இந்த அழைப்பை நிராகரிக்கமுடியாது. எனவே எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் நான் போட்டியிட்டு புதிய ஆட்சியை ஏற்படுத்துவேன்" இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச கடந்த முதலாம் திகதி மெதன முல்லவில் அமைந்துள்ள இல்லத்தில் கூடியிருந்த ஆயிரக்கணக்கான மக்கள் முன்னிலையில் உரையாற்றினார்.

அதுவரை மகிந்த அரசியலுக்கு வருவார், தேர்தலில் போட்டியிடுவார் என்றும் கூறப்பட்டுவந்த கதைகளுக்கு அன்று முடிவு கிடைத்தது. அதைத் தொடர்ந்து சுதந்திரக் கட்சியில் மகிந்தவுக்கு வேட்புமனு வழங்கப்படாது என்றும், அவரை பிரதமர் வேட்பாளராக நியமிக்கமுடியாது என்றும் ஜனாதிபதி மைத்திரிபால திட்டவட்டமாக கூறியிருந்தார்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்காவும் மகிந்த வீட்டில் இருக்காமல் மீண்டும் அரசியலுக்குவரத் துடிக்கின்றார். முன்னைய ஆட்சிமீதான குற்றச்சாட்டுக்களை மறைக்கவே அரசியலுக்குவர முயற்சிக்கின்றார். எனக்கு அந்த அவசியம் இல்லை. ஆகவே நான் தேர்தலில் போட்டியிடப் போவதில்லை என்று கூறியிருந்தார்.

அடுத்தநாள் மகிந்த போட்டியிடப் போவதாகச் செய்திகள் வெளியாகியதைத் தொடர்ந்து மகிந்த போட்டியிட்டால் நானும் போட்டியிடுவேன் என்று சந்திரிக்கா அம்மையார் கூறியதாகவும் செய்திகள் வெளியாகின.

இரவுபகலாக சுதந்திரக் கட்சியினரும், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு கட்சிகளுக்கும் ஜனாதிபதிக்குமிடையிலான கூட்டங்கள் நடந்தன. ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகள் நடத்திய வெளிப்படையான மற்றும் இரகசிய சந்திப்புக்களை அடுத்து ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் போட்டியிட மகிந்தவுக்கு இடமளிப்பதென்றும் அவரைப் பிரதமர் வேட்பாளராக அறிவிப்பதைத் தவிர்த்து வேட்பாளர்களின் குழுவுக்கு தலைமையாக இருப்பார் என்றும் இணக்கம் காணப்பட்டு அந்த தீர்மானத்தை ஜனாதிபதிக்கும் கையளித்திருந்தார்கள்.

அந்தக் கட்சிகளின் தீர்மானத்திற்கு ஜனாதிபதி மைத்திரிபாலவும் இணக்கம் தெரிவித்ததாக செய்திகள் கூறின. ஆனால் இப்பத்தி எழுதப்படும் வரையும், மகிந்தவுக்கு வேட்புமனு வழங்கப்படுமா? அவரை பிரதமராக அறிவிப்பார்களா என்பது நிச்சயிக்கப்பட்டதாக இல்லை.

சுதந்திரக் கட்சியில் இடம்தராவிட்டாலும், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் ஏதோ ஒரு வடிவத்தில் தேர்தலில் போட்டியிடுவதில் மகிந்த உறுதியாக இருக்கின்றார். அவரது போட்டிக்கான பிரசாரப் பணிகள் மற்றும் மக்கள் சந்திப்புக்களுக்கான ஏற்பாடுகள் என அத்தனை பணிகளும் தொடங்கப்பட்டுவிட்டன.

சுதந்திரக் கட்சியினதும், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பினதும் சிலர் மகிந்த மற்றும் ஜனாதிபதி மைத்திரிபால ஆகியோரின் புகைப்படங்களைப் பிரசுரித்து சுவரொட்டிகளையும் ஒட்டத் தொடங்கிவிட்டனர்.

இவர்கள் இருவரும் இணைந்து நாட்டை ஆட்சிசெய்வதன் ஊடாகவே நாட்டை முன்னேற்றமுடியும் என்றும், உறுதியான ஆட்சியை இருவரும் உறுதிப்படுத்த முடியும் என்றும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகள் கூறிவருகின்றன.

அமெரிக்கா, இந்தியாபோன்ற நாடுகளும் இன்னும் சில நாடுகளும் மீண்டும் மகிந்த ஆட்சிக்குவருவதை விரும்பவில்லை என்றும், அவர்களின் அழுத்தங்களும் மகிந்தவை போட்டியிடாமல் தடுப்பதில் முக்கிய பங்கை வகிப்பதாகவும் விமர்சகர்கள் கூறுகின்றனர்.

இவ்வாறான சதிகாரர்களின் விருப்பத்திற்காகவும், தேவைகளுக்காகவும் நாட்டை தோல்வியடையச் செய்ய முடியாது. அப்படியொரு அழுத்தம் மகிந்த தலைமையிலான எமது வெற்றிக்குத் தடையாக இருக்குமானால் அதற்கு எதிராக நாங்கள் செயற்படுவோம் என்றும் எமது வெற்றி பிரகாசமாக இருக்கையில் அதை சூழ்ச்சிகளால் தடுத்து ஐக்கிய தேசிய கட்சியை ஆட்சிக்குகொண்டுவர யார் முயற்சிசெய்தாலும் அவர்களை தோற்கடிப்பதற்கு நாங்கள் எந்தவொரு தீர்மானத்தக்கும் செல்வோம் என்றும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகள் கூறிவருகின்றன.

இந்தநிலையில் மகிந்த ராஜபக்ச மற்றும் முன்னாள் அமைச்சர்கள் பாராளுமன்ற உறுப்பினர்கள் என்று சுமார் 38 பேருக்கு எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்கு வேட்புமனு வழங்கப்போவதில்லை என்று ஜனாதிபதி கூறியிருப்பதாகவும் இன்னொரு செய்தி உண்டு.

அப்படி மறுக்கப்படுமானால் அவர்கள் அனைவரையும் ஓரணியாக அமைத்து போட்டியில் இறங்குவதற்கான ஏற்பாடுகளையும் மகிந்த ஆதரவு அணியினர் முன்னெடுத்துவருவதாகவும் அறிய முடிகின்றது. மறுபக்கத்தில் மகிந்த அணியினரின் வெற்றியை தடுப்பதற்காக சந்திரிக்கா அம்மையாரின் தலைமையில் புதிதாக ஒரு அணி தோற்றம் பெறுவதாகவும் கூறப்படுகின்றது.

இந்தநிலையில் சுதந்திரக் கட்சியில் மகிந்த உட்பட அனைவரும் ஓரணியாக போட்டியிட்டால் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மைக்கு அதிகமாக 116 ஆசனங்களை வெற்றிபெறக்கூடிய வாய்ப்புகள் இருப்பதாக இரகசியக் கணக்கெடுப்புத் தகவல்கள் கூறியிருப்பதாக வெளியான செய்தி ஐக்கிய தேசியக் கட்சியையும், மகிந்தவோடு இறுதிவரை இருந்து எல்லா சுகபோகங்களையும் அனுபவித்துவிட்டு அந்தர் பல்டி அடித்து எதிர்ப்புக்கள் தாவியவர்களையும் கலக்கத்தில் ஆழ்த்தியுள்ளது.

அவர்கள் மகிந்த மீண்டும் களத்துக்கு வருவதை ஒரு பயங்கரமான 'சவாலாகவே கருதுகின்றார்கள். ஒருவேளை மகிந்த பிரதமராகினால் தாங்கள் பழிவாங்கப் படலாம் என்று அஞ்சுகின்றனர். மகிந்த ஆட்சிக்கு வந்தால் சிறுபான்மை மக்களுக்கு ஆபத்து என்றும் கூறுகின்றனர்.

தவிர்க்கமுடியாத சூழ்நிலையில் மீண்டும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு மகிந்த தலைமையில் ஆட்சியமைத்தால், ஜனாதிபதி மைத்திரிபால அதை வழிநடத்தினால் உண்மையான நல்லாட்சி ஏற்படும் என்றும் இடைநடுவில் கைவிடப்பட்ட அபிவிருத்திப் பணிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படும் என்றும், தமிழ் மக்களின் அரசியல் உரிமைப் பிரச்சினைக்கும் ஒரு நியாயமான தீர்வை பெற்றுக்கொள்ள வாய்ப்புக் கிடைக்கும் என்றும் ஆய்வாளர்கள் எதிர்வுகூறுகின்றனர்.

நாட்டில் உறுதியான ஆட்சி ஏற்படுத்தப்பட்டாலே பலமாக இருக்கும். இல்லாவிட்டால் தொங்குநிலை அரசு உறுதியான செயற்பாட்டை முன்னெடுக்க முடியாது. மீண்டும் குழப்பமான நாடாளுமன்றச் சூழலே அமைந்து மக்களை ஏமாற்றமடையச் செய்யும்.

மதியூகி
எக்ஸ்ரே ரிப்போர்ட்



# புலிகளின் வதை முகாமில்

## மணியம்

### தொடர் 173

திருடிச் சென்றவர் ஏன் திருப்பிக் கொண்டு வந்து விட்டிருக்கிறார் என்பது புரியாத புதிராக இருந்தது. திருடியவருக்கு என் பொருளாதார நிலை தெரிந்து மனம் மாறி விட்டாரா என எண்ணினேன். அப்படி மனம் மாறியிருந்தால், அதை எமது சமூகத்தின் ஒரு பெரும் பிரளயமாகக் கணித்து, உலகின் எட்டாவது அதிசயமாக அறிவிக்கவேண்டும் என எனது சகாக்கள் சிலரிடம் நான் நகைச் சுவையாகக் கூறினேன்.

இது நடைபெற்று சிலநாட்களின் பின்னர் புலிகளால் பின்னர் செல்வி, மனோகரன் போன்றவர்களுடன் கடத்திக் கொலைசெய்யப்பட்ட தில்லையுடனும், அவரது நெருங்கிய சகாவும், யாழ்.பல்கலைக்கழக மாணவரும், தீப்பொறி இயக்க செயற்பாட்டாளருமான கைதடியைச் சேர்ந்த தருமலிங்கம் என்பவருடனும் சந்தித்து சந்தித்து உரையாடும் சந்தர்ப்பம் கிடைத்தது. அப்பொழுது கதையோடு கதையாக தருமலிங்கம், இந்திரகாந்தி கொல்லப்பட்ட நேரத்தில் திருட்டுப்போன எனது சைக்கிள் சம்பந்தமான புதிரை அவிழ்த்து விட்டார்.

இந்திராகாந்தி கொல்லப்பட்டதற்கு கண்டனம் தெரிவிக்கும் வகையில் சீக்கியர் ஒருவரை உருவகப்படுத்தி அவரது கொடும்பாவி ஒன்றைத் தாம் பலாலி வீதியில் பல்கலைக்கழகத்திற்கு அருகாமையில் இருந்த ஆலடிச் சந்தியில் (கெற்றப் போல் சந்தி என்றும் அழைப்பதுண்டு) கட்டத் தீர்மானித்ததாகவும், அதை எடுத்துக்கொண்டு வருகையில் நான் எனது கடையை அரைவாசி மூடி இருந்தநிலையில் எனது சைக்கிளை எனக்குத் தெரியாமல் எடுத்துச் செல்ல வசதியாக இருந்ததால், அதை எடுத்துச்சென்று தமது வேலையை முடித்துவிட்டு அதிகாலையில் மீண்டும் சைக்கிளை அங்கே நிறுத்தி வைத்துவிட்டு, அதை வேறு யாரும் எடுத்துச் சென்றுவிடாமல் பல்கலைக்கழக வளவிற்குள் இருந்து கண்காணித்துக் கொண்டிருந்ததாகவும் அவர் சொன்னார்.

அத்துடன் எனது சைக்கிளை எனது அனுமதி இன்றி எடுத்துச் சென்றதற்கான காரணத்தையும் அவர் குறிப்பிட்டார். அதாவது, நாம் இலங்கைப் பிரச்சினையில் ஆரம்பத்திலிருந்து இந்தியாவின் தலையீட்டை எதிர்த்து வந்ததால், எம்மீது இருந்த கோபம் காரணமாகவே எனது சைக்கிளை எடுத்துச் சென்றதாகவும், ஆனால் அவருடன் சென்ற சிலர் எனது நட்பைச் சொல்லி, இது தவறானதொரு நடவடிக்கை எனச் சுட்டிக்காட்டியதால், திரும்பவும் சைக்கிளைக் கொண்டு வந்துவிட்டதாகவும் கூறினார். நான் அவரது செய்கையையிட்டு எதுவித கோபமும் கொள்ளவில்லை.

அந்த தருமலிங்கம் பின்னர் புலிகளால் வேறு சில தீப்பொறி உறுப்பினர்களுடன் சேர்த்துக் கடத்தப்பட்டுக் கொலை செய்யப்பட்டார். ஆனால் பிற்காலத்தில் அவர் புலிகளால் கொல்லப்படும் வரை, எனது நம்பிக்கைக்கும் நட்புக்கும் உரிய ஒருவராகத் திகழ்ந்தார்.

அன்று இருந்த கண்மூடித்தனமான இந்திய விசுவாசத்துக்கு இன்னொரு சம்பவத்தையும் குறிப்பிட விரும்புகிறேன். ஒருமுறை மறைந்த பேராசிரியரும், யாழ். பல்கலைக்கழகத்தின் முதலாவது தலைவருமான க.கைலாசபதி அவர்களின் நினைவுச் சொற்பொழிவு ஒன்று யாழ்.பல்கலைக்கழகத்தில் நிகழ்ந்தது. “கற்க கசடற, நிற்க அதற்குத் தக” என்ற தலைப்பில், யாழ்ப்பாண இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபர் என்.சபாரத்தினம் நினைவுப்பேருரை நிகழ்த்தினார்.

இந்த நிகழ்வுக்கு நானும், அப்பொழுது யாழ்ப்பாணத்தில் ஓரளவு கவனிப்புப் பெற்ற சிற்றிதழ் ஒன்றை நடாத்திவந்த எழுத்தாளர் நண்பர் ஒருவரும், அவருக்கும் எனக்கும் அப்பொழுது நெருக்கமான நண்பராக இருந்தவரும், பல இலங்கை எழுத்தாளர்களின் நூல்களை தமிழகத்தில் பிரசுரிக்க ஏற்பாடுகள் செய்தவரும், தற்பொழுது லண்டனில் குடியேறி வாழ்ந்து வருபவருமான ஒருவரும் சென்று இருந்தோம்.

நிகழ்வு முடிந்து திரும்பி வருகையில், எமது தேசியப் பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடியபடி வந்தோம். இப்பொழுது லண்டனில் வசிப்பவரும், பிற்காலத்தில் தனது நடுநிலைமை வேடத்தை உதறித் தள்ளிவிட்டு பகிரங்கமாகவே புலி ஆதரவுநிலையை எடுத்தவருமான எனது அன்றைய அந்த நண்பர், இந்தியா எமது பிரச்சினையில் தலையிட்டு இலங்கைத் தமிழர்களுக்காக உருப்படியான செய்யும் என்ற நம்பிக்கையை வெளியிட்டார்.

(தொடரும்...)

---

“ட்ரெயினின் கூரையில் எட்வேர்ட் செல்வதை யாரும் பார்க்கமாட்டார்கள்”

“ரெட்ஹில் ஸ்டேஷனில் இருந்து ஆஷ்போர்ட் ஸ்டேஷனுக்கு இடையிலுள்ள பகுதியிலா?”

“ஏன்? அதில் ஏதாவது சிக்கல் இருக்கிறதா”

“திட்டம் போடும்போது என்னைக் கேட்டிருக்கலாமே. இந்த ட்ரெயின் மிகமிக வேகமாக ஓடுவதே இந்த இரு ஸ்டேஷன்களுக்கும் இடையில்தான். வழமையான வேகத்தைவிட ஒன்றரை மடங்கு வேகத்தில் செல்லும்” என்று கூறிய கார்ட்பேக்ஸ், தொடர்ந்தும் கூறினார். “ரெட்ஹில் ஸ்டேஷனில் ட்ரெயின் நின்றுவிட்டுப் புறப்படும்போது ட்ரெயினின் கூரையில் உங்கள் நண்பர் ஏறினால் அவரைப்போல முட்டாள் உலகத்தில் வேறு யாரும் இல்லை”

“அப்படியா”

“நான் இப்போது சொல்கிறேன். இருந்து பாருங்கள். ஆள் இந்த கடைசி பெட்டி வரை வந்து சேரமாட்டார். இடையே விழுந்துவிடுவார். ட்ரெயின் போகும் வேகத்தில் கீழே விழுந்தால் உயிர் தப்புவது கஷ்டம்” என்றார், திகிலுடன்.

1848ஆம் ஆண்டுக்கு முன்னர் பிரிட்டிஷ் ரயில்களின் வேகம் மணிக்கு 30 மைல்களாகவே இருந்தன. 1848இல் முதல் முதலாக வேகம் அதிகரிக்கப்பட்டு மணிக்கு 50 மைல்கள் வேகத்தில் ஓடலாம் என்று முடிவெடுத்தது ரெயில்வே நிர்வாகம். 50 மைல் வேகத்தில் ஓடுவது எந்தவித பிரச்சினையும் இல்லை என்று தெரியவந்தவுடன் அந்த ஆண்டு இறுதியிலேயே அடுத்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

அதன்படி, ரெயில்வே ரூட்டிலுள்ள குறிப்பிட்ட சில இடங்களில் ட்ரெயின் வேகத்தை மணிக்கு 70 மைல்கள் வேகத்தில் அதிகரிக்கலாம் என்றது இந்தப் புதிய உத்தரவு.

அதற்காக ரெயில்வே ரூட்டிலுள்ள சிலசில இடங்களைத் தெரிவு செய்து ஒரு லிஸ்ட்டைத் தயாரித்தது ரெயில்வே நிர்வேகம். அதிகளவில் ரெயில்வே கிராஸிங்கள் இல்லாத, நாட்டுப் புறப்பகுதிகளில் 70 மைல் வேகத்தில் செலுத்தலாம் என்று என்ஜின் டிரைவர்களுக்குக் கொடுக்கப்பட்ட லிஸ்ட்டில் இருந்த பகுதிகளில் ஒன்று, ரெட்ஹில் ஸ்டேஷனுக்கும் ஆஷ்போர்ட் ஸ்டேஷனுக்கும் இடையிலுள்ள பகுதி!


இப்படி வேகமாகச் செல்லும் பகுதிகளில் ட்ரெயினில் ஒரு விதமான அசைவு அவதானிக்கப்பட்டது 1851இல்.

இது என்னவென்றால் ட்ரெயின் வேகம் 70 மைல்கள் வேகத்துக்குச் செல்லும்போது ரயில் ஊஞ்சல் ஆடுவதுபோல இடப்புறமும் வலப்புறமும் ஆடத்தொடங்குகிறது. 1851இல் அவதானிக்கப்பட்ட இந்த ஊசலாட்டத்தை எப்படித் தடுத்து நிறுத்துவது என்று ரெயில்வே என்ஜினியர்கள் தலையை உடைத்து யோசித்துக் கொண்டிருந்தார்கள்.

ஆனால் ஊசலாட்டத்தை எப்படித் தடுப்பது என்பதை இந்தக் கதை நடைபெற்ற 1855 வரை அவர்களால் கண்டுபிடிக்க முடியாமல் இருந்தது. (1876இல் தான் கண்டு பிடித்தார்கள். ரெயில்வே பாதையின் அகலத்தை அதிகரிப்பதன் மூலமும் ட்ரெயினின் உயரத்தைக் குறைப்பதன் மூலமும் இந்த அசைவை மட்டுப்படுத்தப் படலாம் என்பதை)

ஊசலாட்டம் இருந்த போதிலும், மணிக்கு 70 மைல் வேகத்தில் செல்வது நிறுத்தப் படவில்லை.

இது நடந்த காலப்பகுதியில் மனிதனால் உருவாக்கப்பட்ட அசையும் பொருட்களில் மிகவேகமான அசைவை உடையது ரயில்தான் -என்ற பிரமிப்பு இருந்ததால்,






பிரிட்டிஷ்காரர்கள் வேகத்தைக் குறைக்க விரும்பவில்லை. ரயில் ஊசலாடினாலும் அதே வேகத்தில் செலுத்தினார்கள்.

சரி. இதோ ட்ரெயின் ரெட்ஹில் ஸ்டேஷனில் நின்று விட்டு புறப்படுகின்றது. பிளாட்போர்மை கடந்து வேகமெடுக்கிறது. நகரைத்தாண்டி நாட்டுப்புறத்துக்குள் ஓடத் தொடங்குகிறது.

வேகம் அதிகமாகி மணிக்கு 70 மைல் வேகத்துக்குச் செல்கிறது (அது மணிக்கு 112.7 கிலோமீற்றர் வேகத்துக்கு சமம்)

தமது பெட்டியில் இருந்த எட்வேர்ட் ட்ரெயினின் கூரையில் ஏறுவதற்காக ஜன்னலைத் திறந்தார்...

ரயில் ரெட்ஹில் ஸ்டேஷனில் இருந்து புறப்பட்டு, வேகமெடுத்தது. ரெட்ஹில் மிகச்சிறிய நகரம். இதனால் ரயில் நகருக்குள் ஓடும் நேரம் சில நிமிடங்களே. அதன்பின் கிராமப் புறத்தில் ஓடத்தொடங்கியது. ஜன்னல் வழியே வெளியே பார்த்தார் எட்வேர்ட். ரெயில்வே பாதையின் அருகே குடியிருப்புக்கள் எவையும் இல்லை. கண்ணுக்கெட்டிய தூரம் வரை வேளாண்மை நிலம். மனித நடமாட்டம் இல்லை.

இதுதான் சரியான இடம். சரியான தருணம்.

எட்வேர்ட் பயணம் செய்தது ரயிலின் இரண்டாம் வகுப்பு பெட்டி என்றாலும் அதுவும் கேபின்களாக பிரிக்கப்பட்டு இருந்தது. நீளமான எதிரெதிரான இரு ஆசனங்கள் ஒரு கேபின். அடுத்த கேபினுக்கும் இந்தக் கேபினுக்கும் தொடர்பு உட்புறமாக இல்லை. இங்கே நடப்பது அங்கே தெரியாது.

கேபினுக்கு உள்ளேயே இரண்டு சீட்களுக்கும் நடுவே கதவு இருந்தது.

(தொடரும்...)



# நிலமெல்லாம் இரத்தம்


161

**பா.ராகவன்**

07. இண்டி.:.பதா நடைபெற்றுக் கொண்டிருந்த காலத்திலெல்லாம் யசீர் அரபாத்தும் பி.எல்.ஓ.வின் மிக முக்கியத் தலைவர்களும் துனிஷியாவில் அகதி அந்தஸ்தில் வாழ்ந்துகொண்டிருந்தார்கள். (அதற்கு முன் கொஞ்சகாலம் லெபனானிலும் அங்கிருந்து துரத்தப்பட்டு சிரியாவிலும் தஞ்சம் அடைந்து வாழ்ந்துகொண்டு இருந்தார்கள்.) பலஸ்தீனில் இருக்க முடியாத அரசியல் நெருக்கடி அவர்களுக்கு இருந்தது. வெளிநாட்டில் இருந்தபடிதான் பலஸ்தீனியப் பிரச்சினைகளுக்குத் தீர்வு தேடிக் கொண்டிருந்தார்கள். இண்டிபதாவின் மகத்தான வெற்றிதான் அவர்கள் மீண்டும் தாயகம் திரும்ப

தீர்வுகளுக்கான ஆலோசனைகளை மேற்கொள்வது, பேச்சுவார்த்தைகளுக்கான கதவுகளைத் திறக்கப்பார்ப்பது. உண்மையிலேயே அதில் விருப்பமிருக்குமானால் தலைவர்களுக்கு விட்டுக் கொடுக்கும் சுபாவம் இருந்தாக வேண்டும். விமர்சனங்களுக்கு அஞ்சாத பக்குவம் வேண்டும். நீண்டநாள் நோக்கில் தேசத்துக்கும் மக்களுக்கும் நன்மை உண்டாவதற்காகக் கொள்கைகளில் சிறு மாறுதல்கள் செய்துகொள்ளத் தயங்கக்கூடாது. எல்லாவற்றைக் காட்டிலும் சுயநலமற்ற மனப்பான்மை நிரந்தரமாக இருக்க வேண்டும்.

இதெல்லாம் அனைவருக்கும் புரியக்கூடியவை அல்ல. புரியும் என்றாலும் முழுக்கப் புரிவது சாத்தியமில்லை.



வழிகோலியது. அதாவது ஒஸ்லோ ஒப்பந்தத்துக்கான ஆரம்பமே இந்த மக்கள் எழுச்சிப் பேரணிகளும் அவற்றின் விளைவுகளும்தான். ஒஸ்லோ ஒப்பந்தத்துக்கான சாத்தியங்கள் தெரிய ஆரம்பித்த பிறகுதான் பி.எல்.ஓ.வினர் பலஸ்தீன் திரும்ப முடிந்தது.

அதென்ன ஒஸ்லோ ஒப்பந்தம்? அடுத்துப் பார்க்கவேண்டியது அதுதான்.

பி.எல்.ஓ. போன்ற மாபெரும் போராளி இயக்கங்களின் தலைவர்கள் பலஸ்தீனிலேயே இருந்தபடி போராட்டங்களை நடத்துவது என்பது சற்றும் இயலாத காரியம். ஓர் இயக்கத்தை வழிநடத்துவது என்பது நூற்றுக்கணக்கான சிக்கல்களை உட்கொண்டது. முதலில் போராளிகளுக்குப் போர்ப்பயிற்சி அளிக்கவேண்டும். அதற்கு சௌகரியமான இடம், வசதிகள், உணவு, போதிய தூக்கம், பாதுகாப்பு மிகவும் அவசியம். இவற்றைவிட முக்கியம் பணம். அப்புறம் அரசு ஆதரவு. தடையற்ற ஆயுதப் பரிமாற்றங்களுக்கான வசதிகள்.

இதன் அடுத்தகட்டம், அரசியல்

பலஸ்தீனில் வசிக்கமுடியாத பி.எல்.ஓ.வினருக்கு லெபனானும் சிரியாவும் டுனிஷூம் அரசியல் அடைக் கலமும் ஆதரவும் அளித்து, அவர்கள் சுதந்திரமாகச் செயற்பட வழி செய்துகொடுத்ததில் பெரிய ஆச்சரியம் ஏதுமில்லை. ஆனால், அரபாத் யுத்தத்தைக் காட்டிலும் அரசியல் தீர்வில்தான் தமக்கு அதிக நம்பிக்கை இருக்கிறது என்பதைத் தொடக்கம் முதல் வெளிப்படையாகத் தெரிவிக்காமலேயே இருந்துவிட்டதில் தான், கொஞ்சம் பிரச்சினையாகி விட்டது..

அரசியல் தீர்வுக்கான கதவுகள் எப்போதும் திறந்தே இருக்கின்றன என்று வாய்வார்த்தையில் சொல்லுவது பெரிய விஷயமல்ல. அதை அவர் தொடக்கம் முதலே செய்துவந்திருக்கிறார் என்றபோதும், பிரதானமாக ஒரு போராளியாகவே அடையாளம் காணப்பட்டவர், இஸ்ரேலிய அதிகாரிகளுடனும் அமைச்சர்களுடனும் பேச்சுவார்த்தைகளிலும் அவ்வப்போது ஈடுபட்டுவந்திருக்கிறார் என்பது? பலருக்கு வியப்பளிக்கும் விஷயமாகவே இருந்தது.

**(தொடரும்)**



**அல்ஹாஜ் எம்.எப்.எம். இக்பால் (J.P)**
**யாழ்ப்பாணம்**

11

# விடுதலை வீரர் நெல்சன் மண்டேலா

**தென்னாபிரிக்காவின் தேசத் தந்தையாக மட்டுமல்லாமல், உலக மக்களின் உள்ளங்கவர் கள்வராகவும் வாழ்ந்து விடுதலைப் போராட்டத்தின் வெற்றியை அந்த மக்களுக்கு பெற்றுக்கொடுத்த விடுதலை வீரர் நெல்சன் மண்டேலா அவர்களின் வாழ்க்கைப் பாதையை மீண்டுமொரு தடவை புதிய சிந்தனையுடன் மீட்டுப்பார்ப்பது பொருத்தம் என்ற அனேக வாசகர்களின் வேண்டுகோளுக்கு ஏற்ப புதிய பகுதி தொடங்கப்படுகின்றது. வாசிப்பதோடு மட்டுமல்லாமல் வாசகர்கள் தமது அபிப்பிராயங்களையும் முரசுக்கு அனுப்புங்கள். அதையும் இதே பகுதியில் பிரசுரித்து அனைவரும் மகிழ்ச்சியடைவோம்.**

மண்டேலா ஹில்டன் உயர்பள்ளியில் இறுதி ஆண்டில் படித்துக் கொண்டிருக்கும்போது கலை நிகழ்ச்சி ஒன்றிற்காக கோசாவின் புகழ்பெற்ற கவிஞர் "க்ரூனே ம்காயி" என்பவர் சிறப்பு விருந்தினராக வருகை தரவிருக்கிறார் என்ற செய்தியை கேள்விப்பட்டதும் மண்டேலா சந்தோசத்தில் துள்ளிக் குதித்தான். மண்டேலா கவிஞர் "க்ரூனே ம்காயி" என்பவரின் தீவிர ரசிகன். இசையையும் வரலாறையும் ஒன்றுசேர்த்து சுவைபட கவிபாடும் க்ரூனேயை சந்திக்கவேண்டுமென மண்டேலா பலநாள் எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். அவனது பலநாள் கனவு நிறைவேறியது.

குறிப்பிட்ட தினம் வந்தது. மாணவர்கள் அனைவரும் க்ரூனேயை ஆவலுடன் எதிர் பார்த்துக் கொண்டு இருந்தனர். க்ரூனே அங்குவந்த தோரணையை மண்டேலா வால் என்றுமே மறக்க முடியவில்லை. கரிய நிறத்தில் கட்டமைப்பான உடல் வனப்பு, சிறுத்தை தோலங்கி, கையில் கூரான நீண்ட ஈட்டி, தலையில் சிறகுகளில் அமைக்கப் பட்ட தொப்பி அச்சு அசலாக ஒரு பழங்குடி மனிதனாக கோசாவின் சாம்ராஜ்ய வீரனாக மண்டேலாவுக்குத் தோன்றியது. மண்டேலா மெய்மறந்து வாய் பிளந்து க்ரூனேயை பார்த்து ரசித்துக் கொண்டிருந்தான். க்ரூனேயின் பேச்சு ஆரம்பமானதும் திகைப்பும் அபரிமிதமான உற்சாகமும் அவனை தொற்றிக் கொண்டது. மண்டேலாவுக்கு அன்றைய பொழுது க்ரூனேயின் நினைவுகளுடனே கழிந்தது.

காலங்கள் உருண்டோடின. ஹில்டன் உயர்பள்ளியில் மண்டேலா மூன்று ஆண்டுகள் படித்தபின் "யுனிவெர்சிடி கொலேஜ் ஒ.:.ப் .:.போர்ட் ஹரே" எனும் கல்லூரியில் பி.ஏ. பிரிவில் சேர்ந்து கொண்டான். அப்போது அவனுக்கு இருபத்தொரு வயது. ஹில்டன் உயர் பள்ளியில் இருந்து இந்தக் கல்லூரி கிழக்கே இருபது மைல் தொலைவில் ஆலிஸில் அமைந்துள்ளது.

மண்டேலா இதுவரை படித்த கல்லூரிகளில் இருந்து இது வேறுபட்டது. தெற்கு, மத்திய, கிழக்கு ஆபிரிக்காவிலிருந்து பல மாணவர்கள் இக்கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தபடியால் மண்டேலாவுக்கு இது சற்று அகன்ற களமாக தென்பட்டது. தெற்கு ஆபிரிக்க மாணவர்களுடன் மட்டுமே பழகி வந்த மண்டேலாவுக்கு பல்வேறு கலாசாரப் பின்புலம் கொண்ட ஆபிரிக்க மாணவர்களுடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பு கிடைத்தது.



மண்டேலா தன் வாழ்நாள் தோழரான "ஒலிவெர் டேம்போ"வை சந்தித்தது இந்தக் கல்லூரியில்தான். இருவரும் கால்பந்து மைதானத்தில் முதன் முதலாக சந்தித்து தங்கள் தோழமையை ஆரம்பித்துக் கொண்டார்கள். ட்ரான்ஸ் கியிலுள்ள போன்டோலேன்ட் எனும் பகுதியை சேர்ந்த ஒலிவெர் டேம்போ மண்டேலாவின் மனதைக் கவர்ந்து விட்டார். டேம்போவின் தனித்திறமையும், வாதத் திறமையும், புத்திசாலித்தனமும் மற்ற மாணவர்களிடமிருந்து இவரை வேறுபடுத்திக்காட்டி மண்டேலாவுடன் ஒட்ட வைத்துவிட்டது. மண்டேலா நட்புக்கு முன்னுரிமை கொடுக்கக்கூடிய ஒருவர் என்பது குறிப்பிடவேண்டிய விடயம்.

**(தொடரும்)**

# இனவாதத்தை முறியடிக்குமா இந்த தேர்தல்



**ஏ.எச்.ஏ.ஹுஸைசன்**

**சுமார்** 400 கோடி ரூபாய் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய அறிவித்துள்ளநிலையில் ஓகஸ்ட் மாதம் 17ஆம் திகதி பொதுத் தேர்தல் நடைபெறவிருக்கின்றது.

கடந்த வெள்ளிக்கிழமை (27.06.2015) நாடாளுமன்றத்தை கலைப்பதற்கான அதிவிசேட வர்த்தமானியில் ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன கைச்சாத்திட்டதன் மூலம் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டது. பொதுத் தேர்தலில் தபால்மூலம் வாக்களிப்பதற்கான விண்ணப்பங்கள் கடந்த வெள்ளிக்கிழமை (03.07.2015) முதல் ஏற்றுக்கொள்ளும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் மேலதிக ஆணையாளர் எம்.எம். முஹம்மத் அறிவித்துள்ளார்.

இம்முறைத் தேர்தலில் மாவட்ட ரீதியாக - 196 பேரும் தேசிய பட்டியல் மூலம் - 29 பேரும் என மொத்தமாக 225 உறுப்பினர்கள் தெரிவாவார்கள். இலங்கையின் சமீபகால அரசியல் வரலாற்றை கவனித்துப் பார்த்தால் அது ஒன்று மாறி ஒன்று என்று தேர்தல் நடக்கும் ஒரு களமாகவே நாடு மாறிவிட்டிருக்கின்றது.

உள்ளூராட்சி சபைகள், மாகாண சபைகள், நாடாளுமன்றம், ஜனாதிபதித் தேர்தல் என்று மாறி மாறி ஒரே தேர்தல் களம்தான். கடந்த ஜனாதிபதித் தேர்தல் விடயத்தில் மனதளவில் ஒருமித்த சிந்தனையில் சிறுபான்மை சமூகங்கள் செயற்பட்டிருந்தன. அதேபோன்று ஜனநாயகத்தை விரும்பி அராஜகத்தை வெறுக்கும் பெரும்பான்மைச் சமூகத்தவரும் விரும்பியதன்படி ஒரு சிறப்பான நல்லாட்சிக்கு வழிகோலப்பட்டது.

ஒரு நல்லாட்சிக்காக ஜனநாயக பலத்தை மாத்திரமே கடந்த ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் பயன்படுத்தி இருந்தார்கள். அதிர்ஷ்டவசமாக இராணுவப் புரட்சி, சூழ்ச்சிகள் தில்லுமுல்லுகள் என்று எதுவும் இடம்பெற்றிருக்கவில்லை. கத்தியின்றி இரத்தமின்றி ஒரு நல்ல மாற்றம் ஏற்படுவதற்கு எல்லோரும் இணைந்து பாடுபட்டிருந்தார்கள்.

30 வருட யுத்தத்தை முடித்து விடுதலை பெற்றுத் தந்ததாகக் கூறும் முன்னைய ஆட்சியாளர்கள், யுத்த சூழ்நிலையில் இருந்ததை விடவும் எந்நேரமும் கிலிகொள்ள வைக்கும் பதற்றத்திலேயே நாட்டை வைத்திருந்தார்கள் என்பதை எவரும் மறுப்பதற்கில்லை. இந்தச் சூழ்நிலையில் இருந்து விடுபட்டு, நிம்மதியாக வாழவேண்டும் என்பதே மாற்றத்தை விரும்பிய மக்களின் எதிர்பார்ப்பாக இருந்தது.

சிறுபான்மை சமூகங்கள் தேர்தலில் அளித்த வாக்குகளை வைத்துக் கொண்டு இந்த நாட்டில் நல்லாட்சிக்கு வழிவகுத்தது நாமேதான் என்று மார்தட்டுவது மட்டும் அறிவுடைமையாகாது. ஏனெனில் பெரும்பான்மை மக்களில் பெரும்பாலானோரும் சேர்ந்தேதான் இந்த ஆட்சி மாற்றத்தைக் கொண்டு வந்திருந்தார்கள். ஆனால், கடந்த ஜனாதிபதி தேர்தலில் சிறு பான்மை இனங்கள் மயிரிழையில் உயிர் தப்பியதை இலகுவில் மறந்துவிடமுடியாது. நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தல், ஜனநாயகத்தின் பலத்தையும், அதன் அர்த்தத்தையும் முழு உலகிற்கும் உணர்த்தியிருந்தது.

ஒவ்வொருவரினதும் தனித்தனியான சிந்தனையும் எதிர்பார்ப்பும் ஒட்டு மொத்தமான மகாசக்தியாக மாற்றம் பெற்று இலங்கையிலுள்ள அனைத்து மக்களுமே ஒரு மாற்றத்தை எதிர் பார்த்திருந்ததோடு அதில் வெற்றியும் கண்டுவிட்டனர். அந்த எதிர்பார்ப்பும் இலக்கும் வாக்குப்பலத்தின்மூலம் எட்டப்பட்டிருக்கின்றது. அதாவது புதிய தலைமையையும் நல்லாட்சியையும் எதிர்பார்த்த மாற்றமே மக்களின் ஆதங்கமாக இருந்தது. மாற்றம் நடந்து புதிய ஜனநாயகத் தலைமையும் உருவாகியிருந்தது. சர்வ கட்சிகளை உள்ளடக்கிய தேசிய அரசாங்கத்தையொத்த செயற்பாடுகள் அரசியல் சமூக நிலையை நாட்டில் ஏற்படுத்தியிருக்கின்றது. மாகாண மட்டத்திலும் உதாரணமாக, கிழக்கு மாகாணத்திலும் இது சாத்தியப்பட்டு இருக்கின்றது. இது ஒரு ஐக்கியப்பட்ட ஜனநாயக பணிகளுக்கு முன்மாதிரியாகத் திகழ்கிறது.

சுமூகமான ஒரு அரசியல் சூழல் நிலையை ஏற்படுத்தினால்தான் நல்லாட்சிக்கான அனைத்துத் திட்டங்களையும் சரிவர முன்னெடுக்க முடியும். ஆனால், நடந்து முடிந்த எந்தவொரு தேர்தலை 'உற்றுக் கவனித்தாலும் அதன் விஞ்ஞாபனங்களும், பிரசாரங்களும் ஏதோவொரு அடிப்படையில் இனவாதத்தை பிரதிபலிப்பதாகவே இருந்துவந்துள்ளது. காலங்காலமாக இனங்களை வைத்து அரசியல் நடத்தியதும், காய்நகர்த்தியதும் தான் நம் நாட்டில் இனமுரண்பாடுகள் கூர்மையடைந்ததற்குக் காரணம் என்பது வெளிப்படையான விடயம். சிறுபான்மையின அரசியல்வாதிகளும் பெரும்பான்மையின அரசியல்வாதிகளும் இலங்கை சுதந்திரமடைந்த பின்னர் இதனைத்தான் செய்து வந்திருக்கின்றார்கள்.

சுமூகமான ஒரு அரசியல் சூழல் நிலையை ஏற்படுத்தினால்தான் நல்லாட்சிக்கான அனைத்துத் திட்டங்களையும் சரிவர முன்னெடுக்க முடியும். ஆனால், நடந்து முடிந்த எந்தவொரு தேர்தலை உற்றுக் கவனித்தாலும் அதன் விஞ்ஞாபனங்களும், பிரசாரங்களும் ஏதோவொரு அடிப்படையில் இன வாதத்தை பிரதிபலிப்பதாகவே இருந்துவந்துள்ளது. காலங் காலமாக இனங்களை வைத்து அரசியல் நடத்தியதும், காய் நகர்த்தியதும்தான் நம் நாட்டில் இன முரண்பாடுகள் கூர்மை அடைந்ததற்குக் காரணம் என்பது வெளிப்படையான விடயம்.

ஆயுதங்களை ஏந்திப் போராடிய இயக்கங்களும் கூட இனவெறுப்பின் அடையாளத்தையே பயன்படுத்திக் கொண்டார்கள் என்பது ஒன்றும் இரகசியமல்ல. இனங்களை உணர்வு ரீதியில் உருவேற்றி, உசுப்பேற்றி முரண்பாடுகளைத் தூண்டிவிட்டு அரசியல் ஆதாயம் பெற முயற்சிப்போராகத்தான் அரசியல்வாதிகளில் அதிகம் பேர் இருந்திருக்கின்றார்கள். தற்பொழுதும் இருக்கின்றார்கள்.

அப்படிப்பட்டவர்கள் யாரென்பதை தெரிந்துகொண்டு, மிகவும் அவதானத்துடனும் நிதானத்துடனும் செயற்படுவது வாக்களிக்கும் ஒவ்வொரு பிரஜைக்கும் நாட்டுக்கும் நல்லதாக அமையும். இந்த நாட்டில் வாழும் சகல மக்களும் கடந்த 30 ஆண்டுகளாகப்பட்ட வேதனைகளும் துன்பங்களும் போதும்.

இனிமேலும் அப்படியானதொரு துயரநிலை உருவாகுவதற்கு எவரும் துணை போய்விடக் கூடாது என்பதே இந்த நாட்டில் அமைதியை விரும்பும் நல்லுள்ளங்களின் எதிர்பார்ப்பாகும்.

இந்தத் தேர்தலில் வடக்கு, கிழக்கு, மலையகம் உட்பட சிறுபான்மை மக்கள் வாழ்கின்ற அனைத்துப் பிரதேசங்களிலுமே முழுமையான மாற்றத்தை எதிர்பார்த்து வாக்களிப்பு இடம்பெறவுள்ளது.


இனத்துவ அடிப்படையில் பிரதிநிதித்துவம் கிடைத்தவுடன் எல்லாம் சரியாகிவிடுமா என்று நாம் சிந்திக்க வேண்டும். இன அடிப்படையில் நமக்கான ஒரு பிரதிநிதித்துவம் என்ற சிந்தனைப் போக்கு பல்லின மக்கள் வாழும் இந்த நாட்டுக்கு ஒருபோதும் பொருத்தமான ஒன்றாக இருக்கப் போவதில்லை.

எனவே, சிறுபான்மை சமூகங்கள் ஒற்றுமையோடும் கவனமாகவும் புத்திசாலித்தனமாகவும் இந்த விடயத்தை அணுகுவதன்மூலம் எமது எதிர்கால அரசியல்நலன்களை உத்தரவாதப்படுத்த முடியும்.

புதிய ஆட்சியில் நம்பிக்கை வைக்காமல் இனரீதியாகவே செயற்பட்டால் நல்லாட்சியில் எந்த அர்த்தமும் இல்லாமல் போய்விடும். ஆகவே, மக்களின் எதிர்பார்ப்பையும் அபிலாஷைகளையும் பூர்த்தி செய்யும் பணியில் தெரிவுசெய்யப்பட்ட மக்கள் அரசு அக்கறையுடன் ஈடுபடும்போது நல்லாட்சியின் தத்துவம் அமுலுக்கு வரும்.

இனவாத, மதவாதத்தைக் கடந்து இந்த நாடு பயணிப்பதற்கு எல்லோர் சிந்தனையிலும் இலங்கையர் என்ற உயர்ந்த எண்ணம் மலரவேண்டும். இனி வரப்போகின்ற தேர்தல்களும், அதன்பின் இடம்பெறப்போகின்ற ஆட்சியும் இனப்பிரச்சினைக்கான தீர்வை எட்டுவதற்கும் ஒரு நாடு ஒரு நீதி என்ற நல்லாட்சிக் கொள்கையை ஏற்படுத்துவதற்கும் இனவாத மதவாதத்தைக் கடப்பதற்கும் இன்னும் எவ்வளவோ தூரம் நாம் பயணிக்க வேண்டியுள்ளது.

**கிடைப்பதனை கட்டம் கட்டமாக வாங்கிக் கொண்டு நகர்ந்திருந்தால் தமிழ் மக்களின் துன்பங்கள், இழப்புகள், அழிவுகள், மரணங்களிலிருந்து விடுபட்டிருக்கலாம். எல்லாம் இழந்து மீளக்குடியமரவும், காணாமல் போனவர்களைக் கண்டுபிடிக்கவும், சிறையிலுள்ளோர்களை விடுவிக்கவும் மக்களே போராடவேண்டியுள்ளது. மக்களின் போராட்டத்தில் ஓடி வந்து அழையாவிருந்தாளியாக கலந்துகொண்டு அறிக்கைவிடுவார்கள். அவ்வளவு தான். பின்பு மக்களைப் பற்றியே எண்ணமாட்டார்கள்.**




# மாற்றப்பட வேண்டிய தமிழ் தலைமைகள்

தேர்தலுக்குரிய திகதியும் வெளியிடப்பட்டுள்ள நிலையிலே தமிழர்களின் பிரதிநிதித்துவம் எந்த நிலையிலே செயற்படப் போகின்றது எனும் எதிர்பார்ப்பு காணப்படுகின்றது. வரப்போகும் நாடாளுமன்றத் தேர்தலானது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகக் கருதப்பட வேண்டும். ஏனெனில் தெற்கின் அரசியற் களம் துண்டு துண்டாக உடையும் அபாய நிலையிலே உள்ளது! யாரை யார் ஆதரிப்பது அல்லது எதிர்ப்பது என்பது பரவலாக பேசப்படும் விடயமாகிவிட்டது. ஜனாதிபதி தேர்தலைப் போன்றதல்ல இந்த தேர்தல். இத்தேர்தல் நாடாளுமன்ற கதிரைகளுக்கான இடம்பிடிக்கும் தேர்தல். யாரை வெட்டியோ, குத்தியோ யாரை யாவது தள்ளி வீழ்த்திவிட்டோ பதவியினைப் பிடித்துவிடவேண்டும் என்பதிலேயே அரசியல் கட்சிகள் மும்மூரமடைந்து நிற்கின்றன.

இந்த நிலையிலே பேரம் பேசுதல்கள், உட்பட்ட திரைமறைவுச் சதிகளும் இப்பொழுதே தொடங்கிவிட்டன. நிலைமை இவ்வாறு தொடரும்வகையில் தெற்கின் தேசியக் கட்சிகளுடன் கூட்டுச்சேரும் நடவடிக்கைகள் தொடங்கியுள்ளன.

ஆக வென்று விடவேண்டும் என்பதிலேயே சகலரும் குறியாக இருக்கும்நிலையிலே நாங்களே தமிழர்களின் பிரதிநிதிகள் என்று மார்தட்டித் திரியும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைமைகள் என்ன செய்யப் போகின்றது? என்ன முடிவை எடுக்கப் போகின்றது என்பதெல்லாம் கேள்விக்குறியாகவே உள்ளன.

தெற்கிலே அமையப்போகும் நாடாளுமன்றம் ஒரு தொங்கு நாடாளுமன்றமே அமைய வாய்ப்புகள் உள்ளன. எனவே எமது உரிமைகள் பிரச்சினை சம்பந்தமாகப் பேரம் பேசும் பேசக்கூடிய தலைமையே இப்போதைக்கு தமிழ் மக்களுக்கு அவசியம் தேவை. கடந்த அறுபது ஆண்டுகளாக எதையுமே செய்யாத. சாதிக்காத தலைமைகளால் ஒருபோதுமே தமிழர்களுக்கு விடிவு வரப்போவதில்லை.

இப்போதைய கட்டத்தையும் சரிவரப் பயன்படுத்தாது முகத்துக்காக நாம் தேசியக் கட்சி ஒன்றுக்கு மீண்டும் தமிழ் மக்களின் வாக்குகளை வழங்கினால், இன்னுமொரு ஐந்து, ஆறு ஆண்டுகளுக்கு தமிழர் பிரச்சினை தீர வாய்ப்பு வராது என்பது உண்மையான விடயம்.

கடந்த ஜனாதிபதித் தேர்தல்கூட தமிழரின் வாக்குகளே ஜனாதிபதியினைத் தீர்மானிக்கும் சக்தியாக மிளிர்ந்தது! அப்போதுகூட தமிழ்த் தலைமைகள் தேசியக் கட்சியுடன் பேரம் எதுவும் பேசவில்லை. மாறாக மாற்றம் ஒன்று வந்தால்போதும் என்று எதுவுமே கேட்காமல், பேசாமல் வாக்களித்து என்ன கண்ட மிச்சம். கடந்த ஆறு மாத கால ஆட்சியிலே தமிழர்களின் நிலங்கள் முழுமையாக விடுவிக்கப்பட்டதா?, மீள்குடியேற்ற அமைச்சர் சொல்கின்றார் நிலங்களை விடுவதற்கு இராணுவமே தடையாக உள்ளதாம் என்று புழுகி தள்ளுகின்றார்.

முப்படைகளுக்கும் தளபதியாக ஜனாதிபதியே இருக்கின்றார். தளபதி சொன்னால் படை நகராதா? உண்மையான விசுவாசம் தமிழர் மக்கள்மீது ஜனாதிபதிக்கு இருக்குமானால் படைகளை விலகிப் போகும் உத்தரவை அவரால் விடுக்கமுடியும். இது மீள்குடியேற்ற அமைச்சருக்கு தெரியாதா? அல்லது இவ்விடயம் சார்பாக கூட்டமைப்பினருக்கும் தெரியாதா? தெரியாது என்று எவருமே சொல்லமுடியாது. ஏனென்றால் அரசியல் சட்டவிதிகள் தெரியாதவர்கள் அரசியல்வாதிகளாக இருக்கமுடியாது, எல்லாமே தெரிந்தவர்கள் வேண்டுமென்றே காலம் கடத்துகின்றனர்.

இனப்பிரச்சினைப் பேச்சைக்கூட கையிலெடுப்பதாக கடந்த அரசின் கொள்கை இருக்கவில்லை. எனவே எதையுமே சிந்திக்காதவர்களுக்கு மீண்டும் வாக்களித்து காலம் கடத்துவதை ஏற்றுக் கொள்ளலாமா?, இல்லையா? என்பதனை தமிழ் மக்களே தீர்மானிக்கவேண்டும். இப்போதுள்ள தமிழ் தலைமைகள் இது வரை செய்தது என்ன?? எதையுமே செய்யாத இவர்கள் தொடர்ந்தும் தமிழர்களை ஏமாற்றிக்கொண்டு இருக்கலாமா? ஒவ்வொரு தேர்தல் காலங்களிலும் நாலு புலுடா வார்த்தைகளை அள்ளி வீசிவிட்டு வாக்குகளை சுருட்டும் இவர்கள்ால் எந்தவிதமான நன்மையும் தமிழர்களுக்கு கிடைக்கப்போவதில்லை.

கடந்த வடமாகாணசபை தேர்தலில் பல வாக்குறுதிகளை வாரி வழங்கியிருந்தனர். அவை எதுவுமே நடைபெறவில்லை. தாம் சேவை செய்ய வடக்கின் ஆளுனரும் பிரதம செயலாளருமே இடையூறாக உள்ளனர். அதனால் மாகாணசபையை நடாத்த முடியாதுள்ளது என்று சொன்னார்கள். புதிய அரசு அமைந்ததும் ஆளுனரும், செயலாளரும் மாற்றப்பட்டும் வடமாகாண சபையினால் ஒன்றுமே செய்யமுடியவில்லை.

இதே புதிய அரசு அமைந்துவிட்டதும், இவ்வருட முடிவிற்குள் இனப்பிரச்சினைக்கு தீர்வு கிடைக்கும் என்று சம்பந்தன் ஐயா கூறினார். புதிய அரசு ஆட்டங்காணத் தொடங்கியதும் அடுத்த வருடம் யூன் மாதமளவிலே பிரச்சினைக்குத் தீர்வு வந்துவிடும் என்றார்.

இப்போது புதிய அரசு அமைந்த பின்னரே பிரச்சினை பற்றி தீர்மானிக்கலாம் என்று தலைவர் சம்பந்தன் சொல்கின்றார். இது மிகப்பெரிய பம்மாத்து இப்பிடியே இன்னும் எவ்வளவு காலம் சொல்லப் போகின்றார்கள்! உண்மையாக தமிழ் மக்களின் நலன்கள்மீது அக்கறையில்லாத தமிழ் தலைமையால் இனியும் பலன்வரப்போவதில்லை. ஆகவேதான் துடிப்புடன் செயலாற்றும் தமிழ்த் தலைமைகளே இப்போது அவசியம் தேவையாக உள்ளனர்.

எப்போதுமே ஏமாற்றிக் கொண்டிருக்கும் தலைமையை நிராகரித்துப் புதிய தலைமையை நோக்கி தமிழ் மக்கள் அணி திரளவேண்டும். அரசாங்கம் தீர்வைத் தரும். அல்லது சர்வதேசம் தீர்வைப் பெற்றுத்தரும் என்று கூட்டமைப்பு இனியும் நம்பி ஏமாற்றமுனைவது மடைமைத்தனம். சர்வதேசம் இந்தத் தேர்தலை மிக உன்னிப்பாக அவதானிக்கின்றது என்று அடிக்கடி சொல்லுகின்றனர். இவர்கள் சொல்லும் சர்வதேசம் எத்தனை தடவை, எத்தனை தேர்தலை அவதானித்துவிட்டது. அவதானித்துவிட்டு என்ன செய்துள்ளனர். தமிழ் மக்களுக்கு விடிவினைப் பெற்றுத் கொடுத்தார்களா? எதுவுமே இல்லை. நடக்காத கட்டுக்கதைகளை நம்பி மக்களை எவ்வளவு காலம்தான் ஏமாற்ற முடியும்.

புலிகளின் நிர்வாகம் இங்கு செயற்பட்ட போது தனித்தமிழீழமே தீர்வு என்றும் இலங்கை இந்தியாவின் நட்புறவினால், புரிந்துணர்வினால் பிரசவமான 13ஆம் சரத்தினை ஒரு பேச்சுக்கேனும் தொடமாட்டோம் என்றெல்லாம் வீரபாண்டிய கட்டப்பொம்மன் போன்று வீரவசனம் பேசிவந்த எத்தனையோ சந்தர்ப்பங்களை நழுவவிட்டுள்ளனர். அன்றைய காலங்களில் விட்ட தவறினை காலம் கடந்து உணரும் தலைமைகள் தமிழர்களின் தலைவர்கள் என்று ஏற்றுக் கொள்ளமுடியுமா?

கிடைப்பதனை கட்டம் கட்டமாக வாங்கிக் கொண்டு நகர்ந்திருந்தால் தமிழ் மக்களின் துன்பங்கள் இழப்புகள், அழிவுகள், மரணங்களிலிருந்து விடுபட்டிருக்கலாம். எல்லாம் இழந்து மீளக்குடியமரவும், காணாமல் போனவர்களைக் கண்டுபிடிக்கவும், சிறையிலுள்ளோர்களை விடுவிக்கவும் மக்களே போராடவேண்டியுள்ளது. மக்களின் போராட்டத்தில் ஓடிவந்து அழையாவிருந்தாளியாக கலந்து கொண்டு அறிக்கைவிடுவார்கள். அவ்வளவுதான். பின்பு மக்களைப் பற்றியே எண்ணமாட்டார்கள்.

நிலைமை இவ்வாறிருக்க புதிய அரசின் பங்காளிகளாக இணக்க அரசியலின் பாதையிலே பயணிக்கும் கூட்டமைப்பினர் கடைசி காணாமல்போனவர்கள், கைதாகி சிறைகளிலுள்ளவர்களைக்கூட மீட்க முடியவில்லை. காணாமல்போய் சிறைகளில் இருப்பவர்களின் தொகையினை அரசு மிகவும் குறைத்தே சொல்கின்றது! இந்தக் கணக்கைப் பார்த்து அரசை இவர்கள் எதுவுமே கேட்கவில்லை.

ஜனாதிபதி தேர்தலின்போது ஐக்கிய தேசியக் கட்சியின் தேரதல் விஞ்ஞாபனம் தயாரிப்பதற்கு கூட்டமைப்பின் ஐக்கிய பிரமுகர் ஒருவரும் சேர்ந்தே தேர்தல் விஞ்ஞாபனத்தை தயாரித்ததாக செய்திகள் வெளியாகியிருந்தது. கூட்டமைப்பின் பிரமுகருக்குத் தமிழ் மக்களுக்கு என்ன வேண்டும் என்று தெரியாதா?, தேர்தல் விஞ்ஞாபனத்தில் தமிழ் மக்கள் தொடர்பான விடயமேயில்லை. இருந்தும் இந்த அரசுடன் உறவினைப் பேணி தமிழர்களை ஏலம்கூறி விற்கும் தமிழ்த் தலைமைகளால் இனிமேலும் விடிவு காலம் உதயமாகும் என்று எண்ணிக் கொண்டிருப்போமானால் எங்களை மாதிரி முட்டாள்கள் எவருமே இருக்கமுடியாது!

அளவெட்டி
ப.உதயகுமார்

இலங்கை அரசு மேற்கொண்டதாக கூறப்படும் போர்க்குற்ற விசாரணைகளைப் புதிய அரசு தள்ளிப் போட்டபோது அரசுடன் சேர்ந்து கூட்டமைப்புத் தலைமைகளும் ஒத்துழைத்தது! இதுவா? இவர்கள் தமிழ் மக்களுக்குச் செய்யும் நன்மை!!

காலம் கடந்துதான் ஞானம் தேடும் வகையிலே கூட்டமைப்புத் தலைமைகள் செயற்பட்டுவருகின்றனர். தமிழ் மக்கள் முன்வரும்போது உணர்ச்சி பொங்கப் பேசுவார்கள்.

பின்பு சொன்னவற்றையே மறந்து விடுவார்கள். தமிழ் மக்களுடைய இனப்பிரச்சினைத் தீர்வைக் காண்பதற்கு வெளிநாடுகளிடம் சொல்லி எதுவும் நடைபெறப் போவதில்லை. உள்நாட்டிலே அரசுடன் பேசுவதனைத் தவிர்த்து சிங்கள மக்களை சூடேற்றும்விதமாக அறிக்கைகளை வழங்கி பிரச்சினைகளை ஆறாத புண்களாக்கிவருகின்றனர்.

புதிய அரசுடன் இரகசியமாகவும், அண்மையிலே லண்டனிலும் இரகசியமாய் பேசியதாகவும் கூட்டமைப்புத் தலைமைகள் சொல்லுகின்றன. அந்த இரகசியத் தன்மையை இதுவரை இவர்கள் வெளியிடவேயில்லை. எல்லாமே இரகசியமாக கொடுக்கல், வாங்கல் சேவைகள் (தமக்கு மட்டும்) பெற்றுக் கொண்டு மக்களை திரும்பியே பார்க்காதவர்கள் தமிழருக்கு என்ன இலாபம்??

எனவே தெற்கிலே மனோ கணேசனின் தலைமையில் புதிய கூட்டணி ஒன்று உருவானதுபோல வடக்கு, கிழக்கிலும் ஒரு புதிய தலைமைகள் உருவாக்கப்படல்வேண்டும். அப்போதுதான் தமிழர் பிரச்சினைக்கு நல்லதொரு தீர்ப்புக் கிடைக்க வழி கிடைக்கும். இல்லாவிட்டால் இன்னும் பல வருடங்கள் தீர்வுக்காக காத்திருக்க வேண்டியதைத்தவிர வேறு வழியில்லை.

# மத்தியதரைக் கடலில் இராணுவத் தலையீடு



டிசெம்பேர்கில் அவர்களது கூட்டத்தில், ஐரோப்பிய ஒன்றிய வெளியுறவுத்துறை மந்திரிகள் மத்திய தரைக்கடல் கடத்தல்காரர்கள் என்று இழைக்கப்படுபவர்களுக்கு எதிரான EUNAVFOR Med நடவடிக்கையைத் தொடங்க ஒப்புக்கொண்டனர். அகதிப் படகுகளை இலக்கில்கொள்ளும் இந்நடவடிக்கையின் திட்டங்கள், உளவுத்துறை மற்றும் பொலிஸ் அதிகாரங்களின் பாரியளவிலான விரிவாக்கத்தை உள்ளடக்கி உள்ளது.

இந்நடவடிக்கையின் முதல் கட்டம் ஒருசில நாட்களுக்குள் தொடங்க உள்ளது. குற்றஞ்சாட்டப்படும் கடத்தல் அமைப்புகள்மீதும் மற்றும் வட ஆபிரிக்காவில், குறிப்பாக லிபியாவில் உள்ள வலையமைப்புகளின்மீதும் உளவு அமைப்புகள் உளவுபார்ப்பதை அது உள்ளடக்கி உள்ளது.

உளவுத்துறை அதிகாரிகள் விபரங்களைக் கட்டளை மையத்திற்கு அனுப்புவதற்கு முன்னதாக, இலக்குகளைக் கண்டறிந்து, படகுகள் மற்றும் சந்தேகத்திற்குரிய சூத்திரதாரிகளை அடையாளம் காண்பார்கள். இந்த் விபரங்களைக் கொண்டு, அக்திப்படகுகள் இடைமறிக்கப்பட்டு, பறிமுதல் செய்யப்பட்டு, அந்நடவடிக்கையின் இரண்டாவது கட்டத்தில் அவை பெருங்கடலில் கொண்டுசென்று அழிக்கப்படும். மூன்றாவது கட்டமானது, குற்றகரமான விதத்தில் வேட்டையாடும் டிரோன்கள், டோர்னாடோ போர் விமானங்கள் மற்றும் கடற்கரையோரங்களிலும், லிபிய துறைமுகத்திலும் இராணுவத்தைச் சேர்ந்த கடல்நீந்துவோரைப் பயன்படுத்துவதை உள்ளடக்கி உள்ளது.

இந்த இராணுவ நடவடிக்கை, இவ்வாண்டின் தொடக்கத்தில் இத்தாலி யலம்பெடுசா தீவை ஒட்டி படகுகள் துயரகரமாக மூழ்கியதற்கு ஒரு விடையிறுப்பாகும். அச்சம்பவத்தில், மத்திய தரைக் கடலை கடந்து ஐரோப்பாவிற்கு வர முயன்றதில், ஒருசில நாட்களில் 1,200 அகதிகளுக்கு மேல்மூழ்கிப் போனார்கள். பாரிய உயிரிழப்புகளின் மனித பேரழிவுக்கு ஐரோப்பிய ஒன்றியம் மத்திய தரைக் கடலில் இராணுவமயப்படுத்துவதன் மூலமாக விடையிறுத்துள்ளது என்பது ஐரோப்பிய ஒன்றியத்தின் குணாம்சத்தைச் சுட்டிக்காட்டுகிறது. EUNAVFOR Med நடவடிக்கைக்கு அரசு நிதியுதவிவழங்கப்படுவதுடன், ஐரோப்பிய ஒன்றியம் உத்தியோகபூர்வமாக அகதிகள் மீதுபோரை அறிவித்துவருகிறது.

மொத்தம் பத்து ஐரோப்பிய ஒன்றிய அங்கத்துவ அரசுகள், ஐந்து போர்க்கப்பல்கள், இரண்டு நீர்மூழ்கி கப்பல்கள், டிரோன்கள், போர் விமானங்கள் மற்றும் ஹெலிகொப்டர்களை வழங்கி, இந்நடவடிக்கையில் பங்கெடுத்து வருகின்றன. இந்த தொகுப்புக்கு இத்தாலிய விமானந்தாங்கி போர்க்கப்பல் Cavour தலைமைகொடுக்கும், அந்நடவடிக்கை இத்தாலிய ரியல் அட்மிரல் Enrico Credendino இன் கட்டளையின்கீழ் இருக்கும்.

ஐரோப்பிய ஒன்றிய வெளியுறவுத் துறை விவகார பிரதிநிதி Federica Mogherini ஐரோப்பிய ஒன்றிய வெளியுறவு மந்திரிகள் கூட்டத்திற்குப் பின்னர் கூறுகையில், "புலம்பெயர்வோர் பிரச்சினையை ஐரோப்பிய ஒன்றியம், நாங்கள் இப்போது எடுத்துவருவதை போல, தீவிரமாக ஒருபோதும் எடுத்ததில்லை" என்றார். அகதிகள் ஐரோப்பாவிற்குள் நுழைவதைத் தடுக்க ஐரோப்பிய ஒன்றியம் இந்தளவிற்கு ஒருபோதும் நடவடிக்கை எடுத்ததில்லை என்றே அந்த பெண்மணிகூறி இருக்கலாம்.

அகதிகளைக் குறித்த ஐ.நா அமைப்பின் சமீபத்திய ஆண்டு அறிக்கை, உலகெங்கிலும் அண்மித்தளவில் 60 மில்லியன் அகதிகளைக் காண்கிறது. இவற்றில் பாதிக்கும் மேற்பட்டவர்கள் குழந்தைகள். ஆனால் இந்த மொத்த எண்ணிக்கையின் ஒரு சிறிய பகுதியை ஏற்றுக்கொள்வதற்கு பதிலாக, ஐரோப்பிய ஒன்றியம் அதன் எல்லையோரங்களைத் தடுத்து, அவர்களுக்கு எதிராக போர்க் கப்பல்களின் ஒரு கூட்டத்தை அனுப்பி வருகிறது.

ஜேர்மன் வெளியுறவுத்துறை மந்திரி பிரா்ங்க்-வோல்டர் ஸ்ரைன்மையர் இதழாளர்களுக்கு கூறுகையில், பிரச்சினை என்னவென்றால் அகதிகளின் வருகை, அவர்கள் எங்கே இருந்துவருகிறார்கள், அதில் யார் தீர்க்கமாகச் செயற்படுபவர்களாக இருக்கலாம் என்பதைக் குறித்து கண்காணிப்பதாகும்" என்றார்.

யதார்த்தத்தில், அவருக்கு இது குறித்து நன்கு தெரியும். அது பிரதானமாக, ஆப்கானிஸ்தான் மற்றும் ஈராக்கிற்கு எதிரான போர்களுக்குத் தலைமைதாங்கிய, சிரியாவில் ஒரு கோரமான உள்நாட்டு போரைத் தூண்டிவிட்ட, லிபியாவில் குழப்பங்களை விட்டுவைத்த, அமெரிக்க ஏகாதிபத்தியத்துடன் கூட்டணியில் உள்ள ஐரோப்பிய சக்திகள்தான், தப்பிப்பிழைக்க முயன்ற பாதிக்கப்பட்டவர்களின் ஒரு பெரும் அலையைக் கட்டவிழ்த்துவிட்டன. ஆபிரிக்காவில் சுரண்டலுக்கான அவர்களது நவகாலனித்துவ கொள்கைகள், தங்களின் குடும்பங்களது உயிர்பிழைப்பை ஐரோப்பாவில் பாதுகாக்கும் ஒரு முயற்சியில் கூடுதலாக நூறு ஆயிரக்கணக்கானவர்கள் அவர்களின் சொந்த நாடுகளை விட்டு வெளியேற நிர்ப்பந்தித்துவருகின்றன.

ஐரோப்பிய ஒன்றியம் இந்த உண்மைகளை ஒரு வார்த்தை மாறாமல் கொண்டு செல்கிறது. "இந்த நடவடிக்கையைக் கொண்டு, புலம்பெயர்வோரின் அவலநிலைகளில் இருந்து ஆதாயந்தேடுபவர்களின் வியாபார மாதிரியை நாங்கள் இலக்கில் வைக்கிறோம்" என்று Mogherini தெரிவித்தார். நிஜமான இலக்கு அகதிகள் அல்ல, மாறாக "அவர்கள் வாழ்விலிருந்தும், பெரும்பாலும் அவர்களின் மரணங்களில் இருந்தும் பணமீட்டுபவர்கள்தான்," என்றவர் தெரிவித்தார். அகதிகளைக் கடலிலிருந்து காப்பாற்றி, அவர்களை ஐரோப்பாவில் ஏற்றுக்கொள்வதற்கு மாறாக, குற்றஞ்சாட்டப்படும் ஒழுங்கமைக்கப்பட்ட கடத்தல் வலையமைப்புகளுக்கு எதிரான ஒரு போராட்டத்தை ஐரோப்பிய ஒன்றியம் தொடங்கி உள்ளது. என்ன விலை கொடுத்தாவது இந்த அகதிகள் வெளியே நிறுத்தப்படவேண்டும்.

**அமைப்புரீதியிலான குற்றவாளிகள் அகதிகளை மத்திய தரைக்கடல் வழியாக ஐரோப்பாவிற்கு பயணிக்க கட்டாயப்படுத்துகிறார்கள் என்று வாதிடப்படுகிறது., ஆனால் இதில் உண்மைக்குரியதாக ஒன்றும் இல்லை. பிரிட்டனை அடித்தளமாகக் கொண்ட கார்டியன், தற்போது OECD இன் (பொருளாதார அபிவிருத்திக்கும் ஒத்துழைப்பிற்குமான அமைப்பு) அகதிகள் குறித்த திட்டத்தில் வேலை செய்துவரும் ஆராய்ச்சியாளர் Reitano கூறியதை மேற்கோளிட்டது. இந்த நாடகத்தில் உள்ள முறையான குற்றகர வலையமைப்புகள் அல்லது முக்கியஸ்தர்கள் யாராவது இருக்கிறார்கள் என்றால், ஒருசிலர் இருக்கலாம். இவர்களை வெளியேற்றினாலே அந்த ஓட்டத்தில் கணிசமான தாக்கம் ஏற்படும் என்று கூறியிருந்தார்.**

இந்த கொள்கையின் செயல் விளைவில் அங்கே ஒரு நேர்மையற்ற குழப்பம் நிலவுகிறது. பழிக்கு அஞ்சாத கடத்தல்காரர்கள்தான், அசைக்கமுடியாத ஐரோப்பிய பாதுகாப்பரண் சுவர்களைக் கடப்பதற்கு அக்திகளுக்கு ஒரே வழிவகையாக இருக்கிறார்கள். இந்த பல மில்லியன் யூரோ கடத்தல் வியாபாரம், ஐரோப்பிய ஒன்றிய எல்லைகளை முன்பினும் இறுக்கமாக மூடும் கொள்கையின் நேரடி விளைவாக உள்ளது.

அதேநேரத்தில் ஐரோப்பிய ஒன்றிய சக்திகள் அவற்றின் உளவுத் துறை அமைப்புகளைப் பலப்படுத்த மற்றும் ஒருங்கிணைக்க, இராணுவ நடவடிக்கையைப் பிரயோகித்துவருகிறது. முதல்கட்டமாக உளவுத்துறை அமைப்புகள் மற்றும் இராணுவத்தை பயன்படுத்துவதற்கான உத்தியோகபூர்வ நியாயப்பாடு கேள்விக்குரியதைவிட மேலதிகமானது. ஏனென்றால் கடத்தல்காரர்களின் வேலை முறைகள், போக்குவரத்து தடங்கள், வியாபார முறை மற்றும் நிதியியல் பரிவர்த்தனைகள் ஆகியவை குறித்து சேகரிக்கவேண்டிய தகவல்கள், ஏற்கனவே Eurosur உளவு பார்ப்பு திட்டத்தால் கைப்பற்றப்பட்டுள்ளன.

உண்மையில், குற்றஞ்சாட்டப்படும் கடத்தல் வலையமைப்பை உளவுபார்ப்பதற்காக என்ற மூடிமறைப்பின்கீழ், ஐரோப்பிய ஒன்றியம் பல்வேறு பாதுகாப்பு முகாமைகளை ஒருங்கிணைக்க வேலை செய்துவருகிறது. EUNAVFOR Med என்பது வெறுமனே மத்திய தரைக்கடலில் ஒரு கடற்படை ரோந்து நடவடிக்கை அல்ல, மாறாக உளவுத்துறை முகமைகள், இராணுவம், பொலிஸ் மற்றும் ஐரோப்பிய ஒன்றிய எல்லையோர முகாமை Frontex ஆகியவற்றின் நெருக்கமான ஒருங்கிணைப்பை உள்ளடக்கி உள்ளது.

பிரெஞ்சு ஜனாதிபதி பிரான்சுவா ஹோலாண்ட், இத்தாலி மற்றும் பிரிட்டனுடன் ஒரு கூட்டு நடவடிக்கையில் பிரெஞ்சு உளவுத்துறையைப் பங்கெடுக்க செய்ய ஒப்புக்கொண்டார். ஐரோப்பிய பொலிஸ் ஆணையம் யூரோபோல் (Europol) கட்டுப்பாட்டின்கீழ் கடத்தல்காரர்களின் வலையமைப்புகளைக் கண்காணிக்க பணிக்கப்பட்ட ஒரு உளவுத்துறை முகாமை சிசிலியில் கட்டமைக்கப்பட உள்ளது. பிரிட்டனின் தேசிய குற்றவியல் முகமை ஆறு அதிகாரிகளை அனுப்புகிறது. பிரிட்டன், GCHQ இல் இருந்து அதிகாரிகளின் ஒரு குழுவுடன் மத்தியதரைக் கடலுக்கு HMS Enterprise போர்க் கப்பலை அனுப்புவதாகவும் அறிவித்துள்ளது.

ஏற்கனவே மார்ச்சில், ஜேர்மனியின் மத்திய குற்றவியல் முகமை (BKA) உள்ளடங்கலாக கூட்டு நடவடிக்கைகள் குழு ஸ்தாபிக்கப்பட்டது. இது யூரோபோல் இன் ஒரு நடவடிக்கை குழுவாகும். அது உளவுத்தகவல் சேகரிப்பு நடவடிக்கைகள் மூலமாக கடத்தல்காரர்களின் வலையமைப்புகளை புலனாய்வு செய்யவும் மற்றும் Frontex உடன் நெருக்கமாக ஒத்துழைக்கவும் உள்ளது.

அகதிகள் குறித்த ஜெனிவா தீர்மானத்தின்படி, பொலிஸ் அதிகாரிகள் அகதிகளைப் பாதுகாக்கவேண்டும். இதற்காக இராணுவ நடவடிக்கைக்குள் பொலிஸை ஒருங்கிணைப்பதற்காக, சாதுரிய நடவடிக்கைகள் பயன்படுத்தப்பட்டுள்ளது. மத்திய தரைக்கடல் ஊடாக அகதிகளைக் கடத்துவது சமீபத்தில், புரிதலுக்கு நேர்மாறாக இருந்தபோதினும், ஒழுங்கமைக்கப்பட்ட குற்றமாக அறிவிக்கப்பட்டது.

ஆனால் அகதிகளைக் கடத்துவது அமைப்புரீதியிலான குற்றமென ஐரோப்பிய ஒன்றியம் அறிவித்துள்ள நிலையில், தகவல்களை யூரோபோல் சேகரித்து ஆய்வுக்குட்படுத்த முடியும், இதைச் செய்ய புரோன்டெக்ஸ் (Frontex) அனுமதிக்கப்படாது. அதற்கு மேலதிகமாக, பொலிஸ் புலனாய்வுகளுக்கான யூரோடக் (Eurodac) தரவுக் களஞ்சியம் திறந்துவிடப்பட்டது. அகதிகளின் கைரேகைகளும் மற்றும் ஏனைய பரந்தளவிலான தகவல்களும் அங்கே சேகரிக்கப்படுகின்றன.

புரோன்டெக்ஸ், யூரோபோல் மற்றும் யூரோஜஸ்ட் (Eurojust) போன்ற இராணுவமல்லாத ஐரோப்பிய ஆணையங்கள் இராணுவத்துடன் நெருக்கமாக ஒருங்கிணைப்பது, அடிப்படை சட்ட பிரச்சினைகளை உயர்த்துகிறது. ஜேர்மனியில், சான்றாக, பொலிஸ் மற்றும் இராணுவத்திற்கு இடையிலான இடைவெளி அரசியலமைப்பு ரீதியில் உத்தரவாதமிடப்பட்டுள்ளது. சர்வதேச சட்டத்தின் நிலைப்புள்ளியில் இருந்து, அகதிகளை நாடுகடத்துவது ஒரு தனிப்பட்ட குற்றகரமான நடவடிக்கை என்பதால், அது பொலிஸ் விசாரணையின் மூலமாக மட்டுமே எதிர்கொள்ளப்பட முடியும். மத்திய தரைக்கடல் நடவடிக்கையில் ஜேர்மன் இராணுவம் பங்கெடுப்பதும் மற்றும் பொலிஸ், உளவுத்துறை முகமைகள் மற்றும் இராணுவத்தை ஒன்றோடொன்று இணைப்பதும் இவ்விதத்தில் ஓர் அடிப்படை ஜேர்மன் சட்டமீறலாகும்.

ஐரோப்பிய ஒன்றிய இராணுவ நடவடிக்கையின் திட்டமிடப்பட்ட இரண்டாம் மற்றும் மூன்றாம் கட்டங்கள், "ஒன்றோடொன்று பிணைந்த ஓர் உயர் அபாயசேதத்தை மற்றும் மனித உயிரிழப்பைக்" கொண்டிருக்கும் என்பதை EUNAVFOR திட்டங்கள் முன்வைக்கப்பட்டபோதே ஐரோப்பிய ஒன்றிய கமிஷன் ஒப்புக்கொண்டது.

அகதிகள் மரணிக்கும் சாத்தியக் கூறை ஒருவர் வெளிப்படையாக ஏற்றுக் கொள்ளவில்லை என்றால், ஒட்டு மொத்த திட்டமும் தோல்வியடைவ

**தொகுப்பு**
**வேணுகிருஸ்ணா**

தற்காகக் கண்டனத்திற்குள்ளாவார் என்று ஓர் உயர்மட்ட இத்தாலிய இராணுவ அதிகாரி EUO bserverக்கு தெரிவித்தார்.

அகதிகள் பாதுகாப்பு அமைப்பான ProAsyl அந்த நடவடிக்கையை சர்வதேச சட்டமீறலாக கருதுகிறது.

ஏனென்றால், ஐ.நா சாசனத்தின் 39ஆவது ஷரத்துப்படி, சமாதானத்திற்கு ஓர் அச்சுறுத்தல் இருக்கிறதென்றால், ஐரோப்பிய ஒன்றிய இராணுவ நடவடிக்கைக்கு தேவையான ஓர் அனுமதியைப் பெற ஐரோப்பிய ஒன்றியத்திற்கு ஐ.நா உத்தரவாணை அவசியமாகும்.





மாணவன்: இந்தக் கணக்கை முட்டாள்கூட சுலபமாய் செய்திடுவான்.

ஆசிரியர்: அதுதான் சுலபமாய் செய்திட்டே!




**இப்பகுதிக்கு சிறுவர்களிடம், மாணவர்களிடம் இருந்து தரமான ஆக்கங்கள் எதிர்பார்க்கப்படுகின்றது.**



# "விளையும் பயிரின் முளை!"

சந்திரனில் இவனுக்குத் தனி மரியாதை உண்டு. எனில் அம் மாணவனே வகுப்பிலே கெட்டிக்கார முதல் மாணவனாகவும் திகழ்ந்தான்.

வகுப்பில் கேட்கப்படும் வினாக் களுக்குப் பட்டுப்பட்டென்று பதில் கூறி விடக்கூடிய ஆற்றல்பெற்ற அம்மாண வனை பெரியோர்களின் சிந்தனை நடுவே சேகரனின் நினைவில் தோன்றியதில் வியப்பேதுமில்லை.

சந்திரன் வகுப்பிலுள்ள மாணவர்கள் எல்லோரிலும் வயதில் சிறியவன். குள்ளமான அவனது தோற்றமும், மெலிந்த உடலும் அவனை எல்லோரிலும் இருந்து சிறுவனாகவே காட்டிக்கொள்ளும்.

மிகவும் வறிய குடும்பத் தைச் சேர்ந்தவன் என்பதை சொல்லாமலே அவனுடைய தோற்றம் மற்றவர் களுக்குச் சொல்லும். குளிர்ச்சி அற்ற மேனியும், நீண்ட நாட்களாக எண் ணெயைக் கண்டி ராத கேசமும், கந்தலான உடையும் தான் சந்திரனின் தினத்தோற்றம்.

"கந்தலானாலும் கசக்கிக் கட்டு" என்னும் முதுமொழிக்கேற்ப எந்நேரமும் உடைகளில் அழுக்குப் படியாமல் கசக்கித் துவைத்து அணிந்து கொள்வான்.

பாடசாலைக்குச் சந்திரன் அணிந்து வரும் காற்சட்டையிலும், மேற்சட்டை யிலும் ஐந்தாறு இடங்களில் கிளிந்து தையல் போட்டிருக்கும் அடையாளங் களைக் காணலாம்.

அவனது குடும்பநிலைமையை வெளிச்சம் போட்டுக்காட்டுவனவாக அவை பங்கெடுத்துக் கொண்டிருந்தன. உடைகளைத் துவைத்து, பிழிந்து வெயிலில் உலர விட்டெடுத்த சுருக்கங் கள் அவற்றில் பளிச்சிடும்.


'அயன்' போட்டுக்கொள்ளும் அளவுக்கு வசதிகள் இருக்க வில்லை. சந்திரனின் தோற்றத்தையும் அவனுள் அடங்கிக் கிடக்கும் திறமை களையும் ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுதெல்லாம் சேகரனுக்குக் கூடவே விஞ்ஞானி கள், மகான்களினது எண்ணங்கள் வருவதை அவனால் தவிர்க்கவும் முடிவதில்லை.



பரமண்ணா

(தொடரும்...)

# வெப்பக்காற்று!





வெயில் காலத்தில் காற்று சூடாகவும், உலர்வாகவும் இருக்கும்போது, மேலும் நீண்டகாலத்திற்கு அதிக அழுத்தம் உள்ள சீதோஷ்ண நிலை இருக்கும்போது, வெப்பக்காற்றுகள் வீசுகின்றன. வெப்பமும், அதிகமான ஈரப்பதமும் ஒன்று சேரும்போது, வெப்பநிலை மேலும் அதிகரிக்கிறது. காற்றிலுள்ள ஈரப்பதம் ஒரு போர்வையைப்போல் செயற்பட்டு வெப்பத்தை தடுத்து நிறுத்துகிறது. அதனால், வெப்பம் இன்னும் அதிகமானது போன்ற உணர்வு ஏற்படுகிறது.

## ஆஸ்திரேலிய வெப்பக் காற்று!

டிசம்பர், 1938ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முதல் 1939ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம்வரை தெற்கு. ஆஸ்திரேலியாவில் ஏற்பட்ட வெப்பக்காற்று 438 மரணங்களை ஏற்படுத்தியது. மேலும், பல்லாயிரக் கணக்கான மக்களை கடுமையாக பாதித்தது. அங்கு மிகவும் அதிகமான பதிவு செய்யப்பட்ட வெப்பம் விக்டோரியாவில் ஏற்பட்டது. அங்கு வெப்பநிலை 118 டிகிரி பரனைட் அளவை அடைந்திருக்கிறது.

# பாண்
## எப்படி உருவாகிறது?



மாவுடன் நீர் சேரும்போது மாவிலுள்ள புரோட்டினுடனும், மூலக்கூறுடனும் கலந்து ஒருவித மீள் elastic தன்மை பெறுகிறது. இதனுடன் Yeast சேர்த்து சூட்டில் வார்க்கும்போது ஓட்சிசன், சீனியின் மூலக்கூறை சிதைத்து கார்பன்-டை ஒக்ஸைட்டை பெறுகிறது. ரொட்டி யிலுள்ள வாயு வெளியேற பஞ்சு போலாகிறது. இதனால் ரொட்டி உண்ணத் தயாராகிறது.


# மஞ்சள் சிவப்பாகும் கலர் மேஜிக்!

இந்த மேஜிக் செய்வதற்கு முன்பாக மஞ்சள் தூளை நீரில் கலந்து கலக்கி, அதில் ஒரு மஞ்சள்நிற துணியை நனைத்து ஊறவைத்து, வெளியில் உலர்த்தி வைத்துக் கொள்ளவேண்டும்.

அடுத்து தண்ணீர் பாத்திரத்தின் அடியில் ஒரு செ.மீ. அளவு சுண்ணாம்பு எடுத்துப்பூசி வைத்துக் கொள்ளவேண்டும்.

அந்த பாத்திரத்தில் தண்ணீர் ஊற்றிக் கொள்ளவேண்டும். இந்த தண்ணீரில் மஞ்சள் துணியை போட்டுவிட்டு, அதை எடுக்கும்போது சுண்ணாம்பு தண்ணீரில் கலக்கும்படி ஒரு கலக்கு கலக்கி அதில் துணியை அமுக்கி எடுத்தால் மஞ்சளும், சுண்ணாம்பும் கலந்ததும் மஞ்சள் துணி, சிவப்பாக மாறும். இதில் மேஜிக் இரகசியம் மஞ்சள், சுண்ணாம்பு.

# ரெசல்யூசன்




☛ ரெசல்யூசன்: (Resolution) மொனிட்டர் திரை அல்லது அச்சில் படம் ஒன்றில் எந்தளவிற்கு டீடெய்ல்ஸ் உள்ளன என்பதைக் குறிக்க இந்த அளவு அலகு சொல்லைப் பயன்படுத்துகிறோம். ஒரு மொனிட்டரில் இது அதன் பிக்ஸெல்களைக் குறிக்கிறது. எடுத்துக்காட்டாக 17 அங்குல மொனிட்டரில் இது 1024 x 768 பிக்ஸெல் ஆக இருக்கும். அச்சுப் படிவம் மற்றும் ஸ்கேனரில் ரெசல்யூசன் என்பது ஒரு சதுர அங்குலத்தில் எத்தனை புள்ளிகளில் (Dots per Inch - DPI) டீடெய்ல்ஸ் தரப்பட்டுள்ளது என்பதை இது குறிக்கிறது. அல்லது ஒரு சதுர அங்குல இடத்தில் எத்தனை துளி இங்க் அல்லது டோனர் தெளிக்கப்படுகிறது என்பதையும் ரெசல்யூசன் என்பதன்மூலம் சொல்லப்படுகிறது.

☛ பேண்ட்வித் (Bandwidth): இணைக்கப்பட்ட இரு வேறு சாதனங்கள் இடையே நடைபெறும் டேட்டா பரிமாற்றத்தில் அதிகபட்ச டேட்டா பரிமாற்ற வேகத்தின் அளவை இது குறிக்கிறது. இது டேட்டா பயணிக்கும்.

## வாரம் ஒரு திருக்குறள்



### கள்ளாமை

**அருள்கருதி அன்புடைய ராதல்**
**பொருள் கருதிப்**
**பொச்சாப்புப் பார்ப்பார் கண் இல்.**

அருளைப் பெரிதாகக்கருதி அன்பு உடையவராய் நடத்தல், பிறருடைய பொருளைக்கவர எண்ணி அவர் சோர்ந்திருக்கும் நிலையைப் பார்ப்பவரிடத்தில் இல்லை.

குறள் 285

## சிறந்த வர்ணத்திற்குப் பரிசு தரும் வண்ணம்



**போட்டியில் கலந்துகொள்பவர்கள் தாம் கல்வி கற்கும் தரத்தினை கட்டாயம் குறிப்பிட வேண்டும்.**

மேலே உள்ள படத்தினை வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றிற்கு புத்தகமொன்று பரிசாகக் காத்திருக்கிறது. அனுப்ப வேண்டிய கடைசித் திகதி: 20.07.2015

**வர்ணம் தீட்டும் போட்டி இல.1104**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல:167,
யாழ்ப்பாணம்.

**வர்ணம் தீட்டும் போட்டி இல: 1104**

**பரிசுக்குரியவர்: 1102**

எம்.அஸாட்,
பிரதான வீதி, வலஸ்முல்ல.

**பாராட்டுக்குரியவர்கள்**

01. ப.வந்தனா, கொள்ளுப்பிட்டி.
02. கு.பவித்ரா, கண்டி வீதி, பளை.
03. சு.அருண்விஜய், பூநகரி, கிளிநொச்சி.
04. அ.தாரணி, ஆலங்கேணி.
05. ம.சுபத்தி, கச்சாய் றோட், சாவகச்சேரி.
06. டொ.மரீசா, கடற்கரை வீதி, பருத்தித்துறை.
07. எஸ்.மிதுனா, நாவாந்துறை, யாழ்ப்பாணம்.
08. எல்.எல்.ஆரபி, மட்டுவில் தெற்கு, மட்டுவில்.

# உண்மைத் தொடர்

**அதிர் இடி 98**

தலைநகரில் தொற்றுநோய் பரவுவதைக் கட்டுப்படுத்த எத்தகைய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று ஒரு வார்த்தைகூட அமீன் கேட்காதது சியம்பாவுக்கு எரிச்சலாக இருந்தது.

இங்கேயே தகுந்த டாக்டரை ஏற்பாடு செய்கிறேன் என்று எரிச்சலை மறைத்துக்கொண்டு பதில் கூறினார்.

நம் நாட்டிலும் நல்ல டாக்டர்கள் இருக்கிறார்களா? என்றுகேட்டு அமீன் சிரித்தபோது, சியம்பாவுக்கு வாழ்க்கை வெறுத்துப் போனது.

தனது நாட்டு டாக்டர்களை இளக்காரமாகக் கருதும் ஒருவன் அதிபராக இருப்பதை எண்ணி உள்ளூர கடும் கவலையுற்றார்.

சியம்பா அமீனுடன் பேசிக் கொண்டிருந்தபோது வெளி நாட்டுக் கம்பனி முகவர் ஒருவர் அங்கு வந்தார்.

அவரது பெயர் ஸிக்லா என்று அமீன் அறிமுகம் செய்தான். இன்னுமொரு போயிங் விமானம் வாங்குவதற்கு பேரம் நடத்தவே அவர் அழைக்கப்பட்டிருந்தார். அச்செய்தி சியம்பாவுக்கு அதிர்ச்சியாக இருந்தது.

நாட்டின் பொருளாதாரம் அதலபாதாளத்திற்குச் சென்று கொண்டிருக்கையில் போயிங் விமானம் வாங்க பணத்தைக் கொட்டவேண்டுமா?

அமீன் பைத்தியம் பிடித்த ஒருவன்போல பொறுப்பற்று செயற்படத் தொடங்கிவிட்டான்.

இனி பேரழிவுதான் உகண்டா மக்களை இனி யாராலும் காப்பாற்ற முடியாதா? என்னும் அச்சமே சியம்பாவை ஆட்டிப் படைத்தது.

**இன்னுமொரு போயிங் விமானம் வாங்குவதற்கு பேரம்நடத்தவே அவர் அழைக்கப்பட்டிருந்தார். அச்செய்தி சியம்பாவுக்கு அதிர்ச்சியாக இருந்தது. நாட்டின் பொருளாதாரம் அதலபாதாளத்திற்குச் சென்று கொண்டிருக்கையில் போயிங் விமானம் வாங்க பணத்தைக் கொட்டவேண்டுமா?**



# இடி அமீன்

அந்தப் பேரம்முடிந்ததும் நிகழ்ந்த இன்னொரு சம்பவத்தில் சியம்பா அடியோடு பொறுமை இழந்தார். என்ன நடந்தாலும் பரவாயில்லை என்ற அசட்டுத் துணிச்சலோடு தனது கருத்தைக் கூறவும் செய்தார்.

நாட்டின் பொருளாதார நிலை நலிவடைந்துள்ள நிலையில் அமீன் போயிங் விமானம் வாங்கு வதற்கு முடிவு செய்திருந்தது. சியம்பாவுக்கு எரிச்சலாக இருந்தது.

ரோம் நகரம் பற்றி எரித்தபோது பிடில் வாசித்த மன்னனையும் அமீன் மிஞ்சிக் கொண்டிருக் கிறானே என்றுதான் சியம்பாவுக்கு எண்ணம் உதித்தது.

போயிங் விமான விற்பனை முகவரான ஸிக்லருக்கும், அமீனுக்கும் இடையே சியம்பா தான் மொழிபெயர்ப்பாளராக செயற்பாட்டார்.

இரண்டு மாதங்களுக்குள் விமானத்தை கொண்டு வந்துசேர்ப்பதாக ஸிக்லர் உத்தரவாதம் கொடுத்தார். ஸிக்லர் சென்றபின்னர் சியம்பாவும் தன் தனது அமைச்சின் அலுவலகத்திற்குப் புறப்பட ஆயத்தமானார்.

அப்போதுதான் அமீனின் உதவியாளர் ஒருவர் அமீனிடம் வந்தார். அந்த உதவியாளருக்கு அமீன் கூறிய வேலையைக் கேட்டதும் சியம்பாவுக்கு பற்றிக் கொண்டுவந்தது. இப்படியும் ஒரு ஜனாதிபதியா? என்று வெறுப்பாக இருந்தது.

அதையெல்லாம் உணராத அமீன், பீர்ஃப் கேசை எடுத்து திறந்தான்.

அதற்குள் இருந்தது ஒரு கத்தை அமெரிக்க டொலர்களை எடுத்து அந்த உதவியாளரிடம் கொடுத்தான்.

விரைவாகத் திரும்பி வந்து சேர். இல்லையானால் என்னை அவள் தின்றுவிடுவாள் என்று இடிச்சிரிப்பை உதிர்த்தபடி சியம்பாவைப் பார்த்து கண்டித்தான்.

மிஸ்டர் சியம்பா என் குடும்பங் களுக்கு சில பொருட்களை வாங்க இவன் இலண்டன் போகிறான்.

உமக்கு ஏதாவது தேவையாக இருந்தால் சொல்லும் வாங்கி வரச்சொல்கிறேன் என்றான்.

உள்ளே எழுந்த சினத்தை கட்டாயமாக மறைத்துக்கொண்டு நன்றி. எனக்கு எதுவும் தேவை யில்லை என்றார் சியம்பா. எப்படியாவது தன் கருத்தை அமீனிடம் கூறிவிடவேண்டும் என்று அசட்டுத்துணிச்சல் வந்துவிட்டது சியம்பாவுக்கு.

உதவியாளர் விடைபெற்றுச் சென்றதும் நாடு இன்றிருக்கும் நிலையில் இவையெல்லாம் தேவைதானா? என்று தாங்கள் சிந்தித்து பார்க்கவேண்டும். போயிங் விமானம் ஏற்கெனவே ஒன்று எம்மிடம் இருக்கிறது என்றார் சியம்பா.

அமீன் தன் குடும்பத்திற்கு பொருட்கள் வாங்குவதற்கு இலண்டனுக்கு ஆள் அனுப்பு வது பற்றி சியம்பா எதுவும் கூறவில்லை.

(தொடரும்..)

**வாசக நெஞ்சங்களே!**
**உங்கள் சிந்தனைக்குத் தீனிபோடும் வினாக்கள் அடங்கிய இப்போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.**

# முரசு குறுக்கெழுத்துப் போட்டி

## குறுக்கெழுத்துப் போட்டி - 633

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 | 17 | 18 |
| 19 | 20 | 21 | | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | 29 | 30 |
| 31 | 32 | 33 | 34 | | 36 |

## குறுக்கெழுத்துப் போட்டி 631 - விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 கீ | 2 ழ் | 3 ப | 4 டி | 5 த | 6 ல் |
| 7 மோ | 8 க | 9 ம் | | 11 வி | 12 ப |
| 13 தெ | 14 கு | 15 ங் | | 17 ப | 18 ல் |
| 19 ர | 20 த | 21 க | 22 ங் | 23 ன் | 24 பா |
| 25 பி | 26 ல | | 28 கி | 29 ர் | |
| | 32 மை | 33 க் | 34 கா | 35 ப் | 36 பு |

### மேலிருந்து கீழ்

01. கோவலனின் தந்தை.
02. சூரபர்மன் தம்பி ; காசிபன் (திரும்பியுள்ளது)
03. வேளாண்மை ; சொந்த விவசாயம்.
05. அழித்தல் ; ஒலித்தல். (குழம்பியுள்ளது)
06. புத்தன் தம்பி.

### இடமிருந்து வலம்

01. ஒரு தமிழ் சினிமாப் படம். (கலை என்பதன் பொருளும் தற்காப்புக்கலை என்பதன் பொருளும் சேர்ந்துவரும்)
07. யாழ். காரைதீவு என்னும் இடத்தை கந்தபுராணத்தில் கூறப்பட்ட பெயர்.
11. சிங்களத்தில் இன்னும் அல்லது மேலும் என்று பொருள்படும்.
13. கொழும்பு மாவட்டத்தில் ஒரு இடம். (கடைசி எழுத்து விடுபட்டு குழம்பியுள்ளது)
19. சத்தம் செய். (குழம்பியுள்ளது)
23. அருபம் ; அறிவு.
25. காய்தல். (குழம்பியுள்ளது)
31. அடையாளம். (குழம்பியுள்ளது)

### போட்டி விதிகள்:

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் ஒட்டி **20.07.2015** க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள்.
அனுப்ப வேண்டிய முகவரி: குறுக்கெழுத்துப் போட்டி இல - **633**
தினமுரசு வாரமலர்,
- த.பெ.இல. :-167, யாழ்ப்பாணம்.
தங்கள் சரியான முகவரியையும் காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக. சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 1000 ரூபா பரிசுண்டு, அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.

**குறுக்கெழுத்துப் போட்டி இல.631 இற்கான சரியான விடைகளை அனுப்பி 1000 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.**

மா.பாரதி, கண்டி றோட்,
சாவகச்சேரி.

**பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.**

01. கே.இராஜகோபால், கந்தசுவாமி கோயிலடி, வட்டுக்கோட்டை.
02. சி.பாலசுந்தரம், கல்வளை, சண்டிலிப்பாய்.
03. எஸ்.நாவிதன், சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
04. என்.இஷாட், நிந்தவூர், மட்டக்களப்பு.
05. ந.சந்தியா, முள்ளியவளை, முல்லைத்தீவு.
06. ம.தவராசா, புளியங்குளம், வவுனியா.
07. அ.மந்தாகினி, ஜின்னாநகர், திருகோணமலை.
08. ஆர்.நந்திதா, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.
09. ஜெ.பாரதன், பிரதான வீதி, தெல்லிப்பளை.
10. ம.ரஷிகா, ஹொரவப்பொத்தானை.

# பழிபோடுவதில் கமல் கில்லாடி - முன்...

கமல்ஹாசனின் முதல் மனைவியும், பிரபல கிளாஸிக்கல் டான்ஸருமானவர் வாணி கணபதி. இவர் சமீபத்தில் மிகவும் கோபமாக சில கருத்துக்களை கூறியுள்ளார். இதற்கு முக்கிய காரணம் கமலின் சமீபத்திய பேட்டி ஒன்றுதான். கமல் தன் மகள் ஸ்ருதியுடன் கலந்துகொண்ட ஒரு பேட்டியில், வாணியின் விவாகரத்திற்காக தன் சொத்து முழுவதையும் இழந்தேன், வாடகை வீட்டிற்கு குடிப்போகும் நிலைக்கு ஆளானேன் என்று கூறியுள்ளார்.

இதற்கு பதிலடி கொடுக்கும்விதமாக வாணி "கமலஹாசனை தாம் திருமணம் செய்து கொண்டது. 1978 அது முதல் அவரிடமிருந்து பிரிந்த 1988 வரை இருவருமே வாடகை வீட்டில்தான் இருந்ததாகவும், இடையில் சிறிது காலம் கமலஹாசனின் தந்தையின் வீட்டில் இருந்ததாகவும், தன்னால் வீட்டை இழந்ததாக அப்பட்டமாக பொய் உரைக்கிறார் கமல் என்றும் அவர் கூறியுள்ளார்.

மற்றவர்கள்மீது பழியை சுமத்தி ஒளி... என்பது கமலஹாசனுக்கு ஒன்றும் புதித... என்று தெரிவித்துள்ளார்.








## என் மகளை வம்புக்கு இழுக்காதீர்கள்! அபிஷேக் பச்சன் கண்டனம்!

அபிஷேக் பச்சன் நடித்துள்ள 'ஆல் இஸ் வெல்' படத்தின் ட்ரெயிலர் வெளியீட்டு விழா சமீபத்தில் மும்பையில் நடந்தது. அவ்விழாவில் அபிஷேக் பேசியபோது தனது டிவிட்டரில் ரசிகர் ஒருவர் ஆராத்தியாவைப் பற்றி எழுதியதைக் கண்டித்தார். "என்னுடைய மக்ளை உங்கள் வம்பு பேச்சுக்களுக்குள் இழுக்கவேண்டாம்" என்றார் ஜூனியர் பச்சன்.

என் குடும்பத்தில் அப்பா, மனைவி இருவரும் பெரிய நட்சத்திரங்கள் என்பது அனைவரும் அறிந்ததே. ஆனால் என் மகள் மீடியா வெளிச்சத்திற்கு வெளியில் இருப்பவள். பொதுவெளியில் அவளைப் பற்றி தங்கள் இஷ்டத்திற்குப் பேசுவது சரியில்லை.

என்னுடைய படங்கள் பிடிக்கவில்லையா? பரவாயில்லை. இன்னும் சிரத்தையுடன் கடின உழைப்புடனும் அடுத்தடுத்தப் படங்களில் திறமையாக நடிக்க முயற்சிசெய்வேன். ஆனால் என் மகளைத் தேவையின்றி உங்கள் கருத்துக் கணிப்புக்களுக்குள் இழுக்கவேண்டாம். அதை நான் விரும்பமாட்டேன் என்றார்.


சோஷியல் நெட்வொர்க் பற்றி கூறுகையில், "பொதுவெளியில் இயங்கும்போது இதுபோன்ற கல்லடிகள், சொல்லடிகள், பூங்கொத்துக்கள் புகழாரங்கள் எல்லாம் கிடைக்கத்தான் செய்யும். அது தவிர்க்கமுடியாதது. ரசிகர்களின் கருத்துக்களுக்கு முக்கியத்துவம் தருவேன். குறிப்பாக விமர்சனங்களை ஏற்று அதற்கேற்றவாறு என் நடிப்பை மெருகேற்றிக் கொள்வேன்." என்றார்

## இரண்டு குழந்தைகளுடன் நடிக்கும் சூர்யா - அனுஷ்கா

ஹரி இயக்கத்தில் சூர்யா - அனுஷ்கா நடிப்பில் வெளியாகி சூப்பர் ஹிட்டான படம் சிங்கம். அக்ஷன் கதைக்களத்தோடு வெளியான இப்படம் ரசிகர்களிடையே அதிகம் வரவேற்பு பெற்றது. இப்படத்தின் வெற்றியை தொடர்ந்து சிங்கம் - 2 உருவானது. இதிலும் அனுஷ்கா ஜோடியாக நடித்திருந்தார்.

முதல் பாகத்தில் சூர்யாவிற்கும் அனுஷ்காவிற்கும் திருமணம் நடந்ததாக கிளைமாக்சில் காண்பித்தார்கள். ஆனால் இரண்டாம் பாகத்தில் திருமணம் நடக்காத மாதிரி

கிண...
பாகமும் சூப்ப...
தற்போது ...
இந்த பாகத்தி...
வைக்கவுள்ளா...
உள்ளது போ...
வெளியாகியுள்...
தொடங்கவுள்ள...







## முதன் முறையாக காக்கி உடை அணியும் பிரியாமணி

## ...டி - முன்னாள் மனைவி

...றும் அவர் கூறியுள்ளார்.
...ர்களின்மீது பழியை சுமத்தி ஒளிந்துகொள்வது ...கமலஹாசனுக்கு ஒன்றும் புதிதல்ல" ...தெரிவித்துள்ளார்.




...ண்டு ...ன் ...ஷ்கா

...ஷ்கா ...டான ...களத்

...வரவேற்பு ...ற்றியை ...உருவானது. ...டியாக

...சூர்யாவிற்கும் ...திருமணம் ...க்சில் ...ஆனால் ...ல்

படமாக்கியிருப்பார்கள். இது ரசிகர்களிடையே கிண்டலுக்கு ஆளானது. இருந்தாலும் இந்த இரண்டு பாகமும் சூப்பர் ஹிட்டாகி வசூலிலும் சாதனை படைத்தது.

தற்போது இப்படத்தின் மூன்றாம் பாகம் உருவாகவுள்ளது. இந்த பாகத்தில் சூர்யா - அனுஷ்காவிற்கு ஹரி திருமணம்செய்து வைக்கவுள்ளாராம். மேலும் இந்த ஜோடிக்கு இரண்டு குழந்தைகள் உள்ளது போன்று படத்தை எடுக்க இருப்பதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன. இப்படத்தின் படப்பிடிப்பு விரைவில் தொடங்கவுள்ளது.






### பெண்ணாக மாறப்போகும் சிவகார்த்திகேயன்

சிவகார்த்திகேயன் ஒரு இடத்தில் இருந்தாலே கலகலப்பிற்கு பஞ்சம் இருக்காது, இவரின் மிகப்பெரிய பலமே காமெடிதான், ஆனால், அதுவே இவரின் பலவீனம் ஆகியுள்ளது.

ஏனெனில், சிவகார்த்திகேயன் என்றாலே காமெடி மட்டும்தான் செய்வார், சிரமப்பட்டுத்தான் நடிக்கமாட்டார் என ஒரு பேச்சு உள்ளது. இந்த கருத்தை முறியடிக்கும் விதத்தில் தன் அடுத்த படத்தில் பெண் கதாபாத்திரத்தில் நடிக்கவுள்ளாராம். மேலும், இதற்காகத்தான் ஐ படத்தின் மேக்கப் கலைஞரை அழைத்துவந்தார்களாம்.


### ...ம் பிரியாமணி

சாருலதா என்ற படம் வெளிவந்தது. இப்படம் கன்னடம் மொழியிலும் உருவாகியிருந்தது. இந்நிலையில், தற்போது தெலுங்கு, கன்னடம் ஆகிய இரு மொழிகளிலும் உருவாகும் ஒரு படத்தில் பிரியாமணி நடித்துவருகிறார். இப்படத்தில் பிரியாமணி காக்கி உடை அணிந்து சி.பி.ஐ அதிகாரி வேடத்தில் நடிக்கிறாராம்.

இவர் சினிமாவுக்குள் நுழைந்து 10 வருடங்களுக்கு மேலாகிவிட்டாலும், இவர் பொலிஸ் வேடத்தில் நடிப்பது இதுதான் முதல்முறை என்று கூறப்படுகிறது. இப்படத்தை பட்நாயக் என்பவர் இயக்குகிறார். சி.பி.ஐ அதிகாரி வேடத்தில் நடிப்பதற்காக நிறைய பயிற்சிகள் எடுத்துக்கொண்டு இந்த படத்தில் நடிக்கிறார். இவரது கதாபாத்திரம் முன்னாள் நடிகை விஜயசாந்தியை நினைவுபடுத்தும் எனப் படக்குழுவினர் தெரிவிக்கின்றனர். இவரது கதாபாத்திரம் ரசிகர்களுக்கு கண்டிப்பாக வியப்பைத் தரும் என்றும் கூறுகின்றனர்.

இப்படத்தை பட்நாயக் இயக்குவதோடு, தயாரிக்கவும் செய்கிறார். ஓகஸ்ட் மாதத்தில் படத்தை வெளியிட முடிவுசெய்துள்ளனர்.

# தேன் கிண்ணம்



## பார்வதி புதுவாழ்வு பரிபாலி

கற்பனைக் கெட்டாத நயினை தாயே
கடல் நடுவே உனக்கென்ன வேலை
வேலை சூழும் தீவகத்தின் நாயகியே
காலைதோறும் வந்து வணங்கும்
நாகம் தொழ நாகேஸ்வரி ஆனவளே
பாவங்கள் போக்கி தீவகத்தை கார்;
காரென கருணை பொழியும் பார்வதி
போர் அழிந்த ஈழத்தில் புதுவாழ்வு பாலி.

மண்டைதீவு மகிழ்நன்

கண்ணே! உன் காதலை என்
கண்ணுக்குள்
வைத்தால் - விழிகள்
கரிக்கும்!

காதுக்குள் போட்டால் -
செவிப்பறை அரிக்கும்!

மூக்குள் நுகர்ந்தால் -
மூளையைத் துளைக்கும்!

என் இதயத்துள் வைத்தால்
என்ன நடக்கும்?
என் இதயமே
வெடித்துச் சிதறும்! உன்
காதல் வேண்டாம்!

பாண்டியூர், பொன். நவநீதன்

## காதல் வேண்டாம்!



என்னிலே...
ஏனிந்த மாற்றம்...?
நாவு...
நொந்திருக்கிறது.
நரம்பு...
நொருங்கியிருக்கிறது

இதயம்...
இறுகியிருக்கிறது.
சதைகள்...
சிதறியிருக்கிறது.

விரல்கள்...
விறைத்திருக்கிறது.
கால்கள்...
கருகியிருக்கிறது.

உணர்வு...
உருகியிருக்கிறது.
உதிரம்...
உறைந்திருக்கிறது.
இவையெல்லாம்...
எனக்கு மட்டும்

தானாவென்று
எட்டிப் பார்த்தேன்.

வீதி...
வெறிச்சிருக்கிறது.
குளம்...
காய்ந்திருக்கிறது.
ஏன்...
ஊரே...
உறங்கித்
தானிருக்கிறது.

## எல்லாமே இருட்டியிருக்கு....



வே.முல்லைத்தீபன், ஒட்டுசுட்டான்.


## காலத்தின் கோலம்

காலம், காலம், பொல்லாத காலம்
காண்பதெல்லாம் நம்பமுடியாத காலம்
கண்டதெல்லாம் கண்ணை கவரும் காலம்
தொட்டதெல்லாம் சுடும் காலம்
நம்பவைத்து கெடுக்கும் காலம்
கப்பல் திசை மாறிப்போகும் காலம்
ஆக்கத்தை அழிக்கும் காலம்
இதுதானா உலகம் என்று
சொல்ல வைக்கும் காலம்.
வாழ்க்கையே வெறுக்கும் காலம்
செய்வதறியா தவிக்கும் காலம்.
இறைவனின் முடிவா இந்தக் காலம்
சோதனையை வெல்லமுடியாத காலம்
படைத்தவனே முடிக்கும் காலம் அழிவு காலம்
சோதனைக்கு மேல் சோதனைவரும் காலம்
இறைவனைவிட்டு விலகிப்போகும் காலம்
போகும் பாதை தெரியாமல் போகும் காலம்
கடவுளை நம்பினோர், மறுவாழ்வு வாழும் காலம்
புதிய யுகம் உண்டாகும் காலம்
எதிர் காலம் கலியுக காலம்
வரும் காலம் சாத்தானுடைய காலம்
மக்கள், வஞ்சிக்கப்படும் காலம்
இறைவனை விட்டுவிடாமல்,
பிடிக்கும் காலம் தெய்வ சித்தத்தின் காலம்.

ஏகஸ்ரா ஜேசுமணி, கண்டி.



## வாழ்வில் வளமில்லை



சட்டம் ஒழுங்கு
கெட்டுப் போச்சு - நாட்டில்
சமரச சன்மார்க்கம்
சரிந்து போச்சு!

ஊடக சுதந்திரம்
கேள்விக்குறியாச்சு - நாட்டில்
ஊழல் செயற்பாடு
உலா வரலாச்சு!

மாடாக உழைத்தாலும்
வளமில்லை வாழ்வில் - இன்று
மலைபோல பொருட்கள்
விலையேற்றம் தன்னால்!

சமாதானத் தேரிழுப்பது
கதையளவில் செயலில்
அமைதிக்கான அடிக்கல்
நிமை மூடுமளவுமில்லை!

கவிக்குயிலன், சேனையூர் - 06



# நிறைவேறட்டும்



**1990** களின் பிற்பகுதிகளில் மகளிர் ரென்னிஸ் நட்சத்திரம் என்றால் அது சுவிட்சர்லாந்தின் மார்ட்டினா ஹிங்கிஸ்தான். இவர் ஐந்து முறை கிராண்ட்ஸ்லாம் வென்றவர். 1997இல் பிரெஞ்ச் ஓப்பன் கிராண்ட்ஸ்லாம்மைத் தவறவிட்ட ஹிங்கிஸ் மற்றைய மூன்று கிராண்ட் ஸ்லாம் களையும் வென்றிருந்தார்.

இதில் என்ன கவனிக்கப்படவேண்டுமெனில் தன்னால் முடியாமல்போனதை இந்த வருடம் செரினா வில்லியம்ஸ் சாதிப்பார் என்று இவர் நம்புகிறார். செரினா 2002 - 2003 நான்கு கிராண்ட் ஸ்லாம்களையும் வென்றிருந்தார் என்பது உண்மைதான். ஆனால் ஒரு பருவகாலத்திலேயே நான்கு கிராண்ட் ஸ்லாம் களையும் வெல்லவில்லை என்பது கவனிக்கத்தக்கது. அப்படி சாதனை புரிந்தவர்கள் மூவர் மட்டுமே. ஒருவர் மொரின் கொனலி (1953) இரண்டாவது வீராங்கனை மார்கிரட் கோர்ட் (1970) மூன்றாவது நட்சத்திரம் ஸ்ரெபி கிராப் (1988). இந்த வரிசையில் இம்முறை செரினா வில்லியம்சும் இணைந்துகொள்வார் என்று ஹிங்கிஸ் நம்புகிறார். நம்பிக்கை நிறைவேறினால் அதில் ஆச்சரியப்பட ஒன்றுமே இல்லை. ஏனெனில் செரினாவால் முடியாதது எதுவும் இல்லை.

# சிறகுகள் கொடுங்கள்





**தென்** அமெரிக்க கொலம்பியா நாட்டின் கெலி நகரில் IAAF இளையோர் தடகள (18 வயதின்கீழ்) போட்டிகள் ஜூலை 15 முதல் 19 ஆம் திகதிவரை நடைபெறவிருக்கின்றன. இந்தப் போட்டிகளில் இலங்கையின் சார்பில் பதின்மூன்று வீர, வீராங்கனைகள் கலந்துகொள்ளும் தகுதிநிலையை எட்டியுள்ளார்கள். அத்தனைபேரும் கொழும்பில் இருந்து கொலம்பியா செல்வார்கள் என்று எதிர்பார்த்தால் அப்படியல்ல.

முதலாவது ஆசிய இளையோர் தடகளப் போட்டிகளில் பதக்கங்கள் வென்ற நான்கு பேரை மட்டுமே அனுப்பப்போகிறோம் என்கிறது இலங்கை தடகள சம்மேளனம். இருந்தும் எல்லோருமே தங்களுக்கும் சந்தர்ப்பம் வேண்டும் என்று கோரிக்கைகள் விடுவதால் திறமையான போட்டியாளர்களுள் இன்னும் இரண்டு பேரைத் தெரிவு செய்ய உத்தேசித்துள்ளோம் என்றும் கூறியுள்ளனர். ஒருவகையில் தகுதியுள்ள எல்லோரையும் அனுப்ப பின்நிற்பதற்கு முதற்காரணம் நிதிப் பிரச்சினையாக இருக்கக்கூடும். ஒவ்வொருக்கும் விமான டிக்கெட், தங்குமிட வசதிகள் என்று இலட்சக்கணக்கில் பணம் தேவைப்படும். இதனை ஈடுசெய்ய தடகள சம்மேளனத்தினால் முடியாமல் இருக்கும் என்பதையும் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். தடகள வீரர்களாலும் அத்தகைய சுமையை தாங்கமுடியாமல்தான் இருக்கும் என்பதும் துயரத்துடன் மனம்கொள்ளவேண்டும். இந்த விடயம் பற்றி மனத்துயரத்துடன் பதிவு செய்வதைத்தவிர வேறெதும் சொல்லத் தோன்றவில்லை. பதின்மவயது எங்கள் பறவைகள் அவை பறப்பதற்கு சிறகு கொடுப்போர் யார்?

# சாம்பலின் மகிமை

**அனைவரும்** ஆவலுடன் எதிர்பார்த்திருந்த ஆஷஸ் தொடர் இங்கிலாந்தில் ஆரம்பித்துவிட்டது. இங்கிலாந்தின் புதிய பயிற்றுனர் டிரெவர் பெய்லிஸ் இங்கிலாந்து டெஸ்ட் அணிக்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ள பதின்மூன்று பேருடன் ஸ்பானியாவில் நடைபெற்ற பயிற்சி மற்றும் ஒன்றுகூடலில் இணைந்துள்ளார்.

இழந்த ஆஷஸ் கிண்ணத்தை மீண்டும் பெறத்துடிக்கும் அலிஸ்ரர் குக் மிகுந்த அழுத்தத்திற்குள்ளான . வராகவே தெரிகிறார். இம்முறை சாதிக்காத பட்சத்தில் அணியில் குக் இல்லை என்பது துலாம்பரமாகத் தெளிவாகும்.

இதேவேளை யோர்க்ஷயர் வீரரும் சுழல் பந்துவீச்சாளருமான அடில் ரஷீட் அணிக்குள் உள்வாங்கப்பட்டு உள்ளார். மேலும் இரண்டு வருட இடைவெளியின்பின் வேகப் பந்து வீச்சாளர் ஸ்ரீபன் பின் அணிக்குள் வருகிறார். மொயின் அலி இங்கிலாந்தின் முதற்தெரிவான சுழல் பந்துவீச்சாளராக இருக்கும்நிலையில் அடில் ரஷீட் அணிக்குள்



வந்திருப்பது ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

மேலும் இங்கிலாந்தின் பிரதான வேகப் பந்து வீச்சாளராக ஜேக்ஸ் அன்டர்சன், ஸ்டுவட் புரோட் மற்றும் மார்க்வூட் ஆகியோரே திகழ்கிறார்கள். இவர்களுக்கு மாற்றுவீரராக மட்டுமே ஸ்ரீபன் பின் அணிக்குள் உள்வாங்கப்பட்டுள்ளார். 2013 - 2014 அவுஸ்திரேலியாவிடம் 5 - 0 என்று ஆஷஸ் டெஸ்ட் தொடரை இழந்தவர்கள் இங்கிலாந்து அணியினர். இம்முறை தமது மண்ணில் வைத்து அவுஸ்தி ரேலியாவை வீழ்த்துவார்களா?

**இங்கிலாந்து அணி :**
அலிஸ்ரர் குக், அடம் லித், கெரி பலன்ஸ் இயன் பெல், ஜோ ரூட், பென் ஸ்ரோக்ஸ், ஜொஸ் பட்லர், மொயின் அலி, ஸ்ரூவட் புரோட், மார்க்வூட், ஜேம்ஸ் அன்டர்சன், ஸ்ரீபன் பின், அடில் ரஷீட்.

# மிரட்டிய பறவை

**தென்** ஆபிரிக்க கிரிக்கெட் அணியினர் தற்போது பங்களாதேஷில் நிற்கிறார்கள். இவர்கள் தமது முதலாவது வலைப்பயிற்சியை மேற்கொண்டிருந்தபோது ஒரு சம்பவம் நடந்துள்ளது. தங்களது பயிற்சியின் போது, அவர்களது பயிற்சிக் காட்சி களை யூடியூபில் பதிவேற்றம் செய் வதற்காக DRONE எனும் மிகச்சிறிய ஆளில்லா குட்டி விமானம்மூலம் படங்களை எடுத்துள்ளார்கள்.

மைதானத்துக்குமேல் வட்டமிட்ட இதனைக் கண்ட மைதான ஊழியர்கள் திகைத்துவிட்டனர்.



ஏதும் அசம்பாவிதம் நடந்துவிடுமோ எனப் பயந்து விட்டனர். மேலும் பங்களாதேஷ் பாதுகாப்புச் சட்ட விதிகளின்படி அனுமதியற்ற எந்த ஆளில்லா விமானமும் வானத்தில் பறக்கமுடியாது. உண்மையில் இந்த விடயம் தென் ஆபிரிக்க அணி சார்ந்த எவருக்கும் தெரிந்திருக்க வில்லை. இந்த விடயத்தின் பாரதூரம் தெரிந்ததும் தென் ஆபிரிக்க அணியின் குரல்தரவல்ல அதிகாரிகள், பங்களா தேஷ் இராணுவத்திடம் நடந்துவிட்ட தவறுக்கு மன்னிப்புக் கேட்டுக் கொண்டுள்ளனர். பதிலுக்கு, நாங்கள் எடுத்துக்கூறியதை மிகச் சரியாக தெ.ஆபிரிக்க அணிசார்ந்தவர்கள் புரிந்துகொண்டமை எங்களுக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது என்று பங்களாதேஷ் கிரிக்கெட் சார்ந்தவர்கள் கூறியுள்ளார்கள்.

கடந்த டிசெம்பரில்தான் எந்த ஆளில்லா கலங்களும் பங்களாதேஷ் வான்வெளியில் பறக்கக்கூடாதென்ற அறிவிப்பு வெளியாகி இருந்தது. மேலும் தென் ஆபிரிக்கா ஜூலை 5ஆம் திகதி இருபதுக்கு இருபது ஆட்டத்துடன் தனது கிரிக்கெட் சுற்றுப் போட்டியை பங்களாதேஷில் ஆரம்பிக்கிறது.

# சிங்கங்கள் சங்கமம்

**ஆபிரிக்கச்** சிங்கங்கள், வங்களாதேசத்துக்குள் புகுந்துள்ளன. தென் ஆபிரிக்க கிரிக்கெட் அணி இரண்டு இருபதுக்கு இருபது போட்டிகள் மூன்று ஒருநாள் போட்டிகள், இரண்டு டெஸ்ட் போட்டிகள் என்று கனதியான சுற்றுப் பயணமொன்றில் வங்கத்தின் சிங்கங்களைச் சந்திக்கவுள்ளன. தென் ஆபிரிக்கா உலகக் கிண்ணப்போட்டிகளில் அரையிறுதியில் வெளியேறிய அணி.

ஆனால் பங்களாதேஷ் தமது மண்ணில் நியூசிலாந்து, இலங்கை, இந்தியா என்று ஒருநாள் போட்டிகளில் வரிசையாக கவிழ்ந்த நாடு. பெரும் எழுச்சியுடன் தற்போதுள்ள பங்களாதேஷ் அணியுடன் போட்டிபோடவே தென். ஆபிரிக்கா வங்களாதேசம் வந்திருக்கிறது. ஒரு பொதுப்பார்வையின் பார்க்கையில், பங்களாதேஸ் அணியைவிட தென் ஆபிரிக்க அணி பலம் நிறைந்ததாகவே கொள்ளப்படும்.

அதேவேளை தெ.ஆபிரிக்காவிற்கு ஆசிய ஆடுகளங்களின் தன்மை என்ற விடயம் சிறிது அச்சுறுத்தலாகவே இருக்கும். மேலும் பங்களாதேஸ் அண்மைக் காலத்தில் எழுச்சி பெற்றுக் காணப்படுவதுடன் தமது சொந்த மண்ணிலேயே தெ.ஆபிரிக்க அணியைச் சந்திக்கப்போகிறது என்பது இன்னொன்று. அதோடு ஆச்சரியமான முறையில் பங்களாதேஷ் சுழற்பந்து வீச்சைவிட, வேகப் பந்துவீச்சை நம்பும் நிலைக்கும் மாறிக் கொண்டிருக்கிறது. தென் ஆபிரிக்க அணி வேகப் பந்து வீச்சாளர்களை அதிகம் நம்பும் அணி. பங்களாதேஷ் அணியும் அந்தப் பாதையில் செல்வது தமக்கு ஆச்சரியமாக இருக்கிறது என்று தென் ஆபிரிக்க வீரர்கள் கூறியுள்ளனர். எது எவ்வாறாயினும்



தமது சொந்த மண்ணாக இருந்தாலும்கூட தென் ஆபிரிக்க அணி பங்களாதேஷ் அணிக்கு பாரிய அச்சுறுத்தலாகவே இருப்பார்கள்.

- ஜோசப் கிருஷ்ணா -




பெண்கள் பக்கத்திற்குரிய தரமான ஆக்கங்கள் வாசகர்களிடமிருந்து வரவேற்கப் படுகின்றன.

## கோபக்கார மாமியாரை வழிப்படுத்த மருமகளுக்கு அறிவுரைகள்

திருமணத்திற்கு பின்னர் புகுந்த வீட்டிற்கு காலடி எடுத்துவைக்கும் பெண்கள் ஒருவித எதிர்பார்ப்போடுதான் செல்வார்கள். தாய்வீட்டில் செல்லமகளாக வளர்ந்துவிட்டு, புகுந்த வீட்டிற்கு செல்லும்போது, சந்திக்கும் புது உறவு-களை எவ்வாறு எதிர்கொள்ளப்போகிறோம் என்ற தயக்கம் இருக்கும்.

கணவன்மார்களுக்கும் தங்கள் துணையின்மேல் ஒருவித எதிர்பார்ப்பு இருக்கும். அதேபோன்று, வீட்டிற்குவரும் மருமகள் புகுந்த வீட்டில் நல்லுறவை ஏற்படுத்துவாள் என்று ஒவ்வொரு மாமியாரும் நம்புவார்கள். ஆனால், ஒரு சில வீட்டில் ஒற்றுமை இருந்தாலும், பலரது வீட்டில் வேற்றுமையே மேலோங்கும்.

ஒரு நல்ல மருமகள் வீட்டை சரிசமமாக கையாண்டு சிறந்த வழியில் கொண்டுசெல்லலாம். வேறொரு குடும்பத்தில் இருந்துவந்து, புதிய மனிதர்களிடமும், புதிய குடும்பத்திலும் அனுசரித்துப்போவதற்கு சில காலம் தேவைப்படும். நமது குடும்பத்தை சரிசமமாகவும், நல்முறையில் வழிநடத்தவும், நாம் புகுந்த வீட்டில் சண்டைகளை தவிர்க்கவேண்டும்.

அதனால் அந்த சந்தர்ப்பத்தை புரிந்துகொண்டு நடப்பதால், வாழ்க்கையை நல்ல முறையில் வாழலாம். சந்தர்ப்பங்களை புரிந்துகொள்ளாமல், கோபமாக கையாண்டால் மாமியார், மருமகள் உறவில் விரிசல் ஏற்படலாம். உங்கள் கணவரை நல்ல ஒரு மனிதராக வளர்த்ததற்காக அவரது பெற்றோர்களை பாராட்டுங்கள். அவர்கள் உங்கள் கணவரை வளர்ப்பதற்காக பட்ட கஷ்டங்களை ஏற்றுக்கொள்ளுங்கள்.



இது அவர்களுக்கு நிச்சயமாக ஒரு இனிமையான உணர்வை கொண்டுவரலாம். திருமண வாழ்க்கையில் சண்டைகள் வருவது பொதுவான ஒன்றாகும். உங்கள் கணவரிடம் சண்டை ஏற்பட்டால் தேவ்வை இல்லாமல் அவர்களது பெற்றோரை இழுக்கக்கூடாது. இதுவே அவர்களோடு சண்டை ஏற்படுவதை தவிர்க்கும்.

ஒரு நல்ல மருமகளாக அவர்களின் உணர்ச்சிகளையும் பாதுகாப்பையும் புரிந்து கொள்ளவேண்டும். ஒரு நல்ல மருமகள் தனது மாமியாருக்கு எப்பொழுதுமே நல்ல தோழியாகவே இருப்பார். எனவே உங்கள் மாமியாரை தோழியாக ஏற்றுக்கொண்டு வாழ்க்கையை சந்தோசமாக வாழுங்கள்.

# பெண் விடுதலை எது?

வீட்டிற்குள்ளே அடங்கிக் கிடந்த பெண் சமுதாயம், வெளி உலகிற்கு அடி எடுத்து வைக்கும்போது ஏற்பட்ட பல்வேறு இன்னல்களை எதிர்கொண்டு சவால்களில் வெற்றிபெற்றதன் விளைவாக இப்போது வெளி உலகிற்கு வந்து அவள் சாதிக்கும் விடயங்கள் ஏராளம்.

பெண்கள் பெண்களாக இருந்து தமது பிரச்சனைகளை தீர்க்கவேண்டும். பெண்களுக்கு எதிரி பெண்களாகவே இருக்கிறார்கள். அதுவும் ஒரு பிரச்சினையாக உள்ளது. மாமியார், மருமகள் சண்டை என பத்திரிகைகளில் தினம் ஒரு தகவல் படிக்கின்றோம். அவர்களுக்கு இடையிலான பிரச்சினைகளை களையவேண்டும்.



சர்வதேசப் பெண்கள் தினம் சாதாரண பெண்ணிற்கு தைரியம் அளித்து சாதனை படைக்கும் பெண்ணாக வரலாற்றில் உரிமை கோரும் பெண்ணாக உயர்த்தியது என்பது ஓரவுக்கு ஏற்றுக்கொள்ள முடிந்த போதிலும்கூட பெண்களில் அனேகமானோர் நினைக்கிறார்கள் வேலைக்குப்போகவும், கடையில் பொருட்கள் வாங்கவும் கணவனிடமிருந்து அனுமதி கிடைத்து விட்டால் அதுதான் பெண் விடுதலை என்று: இந்த அறியாமை மாறவேண்டும். இதனை மாற்றவேண்டும்.

பெண் விடுதலை என்பது: சம உரிமை, வேலை நேரம், சம்பளம், தொழில் வாய்ப்பில் பாரபட்சமின்மை. இவைகளில் தொடங்கி சமையலறை, படுக்கையறை, மனஉணர்வுகள்... வரையிலான அனைத்தையும் உள்ளடக்கிய ஒரு விஷயம் என்பதை முதலில் பெண்களே புரிந்து கொள்ளவேண்டும். இவற்றை ஆண்களும் விளங்கி கொள்ளவேண்டும்.

அடுப்பூதும் பெண்ணுக்கு படிப்பெதற்கு என்ற காலம்போய் இன்று பல பட்டங்களையும், பதவி களையும் வாங்குகிறார்கள் பெண்கள். பல முன்னணி நிறுவனங்களில் முகாமையாளராகவும், பாடசாலை களில் அதிபராகவும் இருக்கிறார்கள் என்றால் பெண் களின் கல்வி நிலையில் ஏற்பட்ட முன்னேற்றம்தான்.

பல வெற்றி பெண்மணிகள் இருக்கிறார்கள். டயானா, கல்பனா, சானியாமிர்சா, சுசந்திகா, சந்திரிகா, சோனியா, பிரதீபா பட்டேல், ஹிலாரி கிளிண்டன் என்று வெற்றி பெண்மணிகளை சொல்லி கொண்டேபோகலாம். விளையாட்டிலும் சரி, அரசியலிலும் சரி, விண்வெளியிலும் சரி எல்லா வற்றிலும் பெண்கள் கால்பதிக்காத துறை இல்லை என்னும் அளவுக்கு பெண்களின் முன்னேற்றம் உயர்ந்துகொண்டு போகின்றது.

சில பெண்கள் செய்யும் தவறினால் மொத்த பெண் சமுதாயமும் அல்லவா பழியை சுமக்கிறது. இது தவிர்க்கப்படவேண்டியது. சமுதாயத்தின் முன்னேற்றத்துக்கு பெண்களின் பங்களிப்பு மிகவும் அவசியம். நாம் அனைவரும் சிறந்த பெண்மணியாக வாழ்வோம், சிறப்புடன் வாழ்வோம் என்று சத்தியம் செய்வோம், உறுதிசெய்வோம், தவறுகள் செய்யாது இருப்போம், நேர்மையுடன் இருப்போம் என இருக்கவேண்டியது பெண்கள் எல்லோரினதும் கடமையாகும்.

## வாரம் ஒரு சமையல்

## முருங்கைப்பூ முட்டை சாதம்

**தேவையான பொருட்கள்:**

முருங்கைப்பூ - ஒரு கைபிடி கொழுந்து, முருங்கைக்கீரை - ஒரு கைப்பிடி, வெங்காயம் - 1, பூண்டு - 3, நாட்டுக் கோழி முட்டை - 1, முழுச்சீரகம் - 1 தேக்கரண்டி, நல்லெண்ணெய் -



2 மேசைக்கரண்டி, வேகவைத்த சாதம் - பாதி கோப்பை, உப்பு, மிளகுத்தூள் - தேவைக்கு.

**செய்முறை:** வெங்காயம், பூண்டை பொடியாக நறுக்கிக்கொள்ளவும். ஒரு வாணலியில் எண்ணெய்விட்டு சிறிது காய்ந்தவுடன் சீரகம்போட்டு தாளித்து நறுக்கிய வெங்காயம், பூண்டு சேர்த்துவதக்கவும். மிதமான தீயில் நன்குவதக்கவும். அத்துடன் சுத்தம்செய்து கழுவிய முருங்கைப்பூ, கொழுந்து முருங்கைக்கீரை சேர்த்து நன்கு வதக்கவும். நாட்டு முட்டை ஒன்றை தேவைக்கு மிளகு, உப்பு சேர்த்து அடித்துக்கொள்ளவும். கலந்த முட்டையை சேர்க்கவும். குறைவான தணலில் வேகவிடவும். வெந்துவரும் பொழுது பிரட்டிவிடவும். வடித்த அரைக்கோப்பை சாதத்தை சேர்த்து நன்கு கலந்துவைக்கவும். உப்பு தேவைப்பட்டால் சிறித்து சேர்த்து பிரட்டிகொள்ளவும். சுவையான சத்தான முருங்கைப்பூ முட்டை சாதம் தயார். அப்படியே சூடாக எடுத்து பரிமாறவும்.

## அழகை அழகூட்டும் பப்பாளி

* தினமும் காலை, மாலைவேளைகளில் 5 நிமிடம் மூச்சுப்பயிற்சி செய்துவந்தால் அன்றைய தினம் முழுவதும் குளிர்மையாக காணப்படுவீர்கள்.

* தினமும் காலையில் எழுந்ததும் ஒரு லீற்றடர் தண்ணீர் குடித்துவந்தால் அன்றையநாள் முழுவதும் சுறுசுறுப்பாக வலம்வருவீர்கள். சோர்வு என்பதே எட்டிப்பார்க்காது.

* தினமும் காலையில் எழுந்ததும் பழங்கள் சாப்பிடுவது இளமையை அதிகரிக்கும். குறிப்பாக, அப்பிள், ஒரேஞ்சு, பப்பாளிப் பழங்கள் சாப்பிடுவது நல்லது.

* தினமும் காலையில் ஒன்று அல்லது இரண்டு கேரட்டை பச்சையாக சாப்பிட்டுவந்தால் உடலில் ஒருவித மினுமினுப்பை பெறலாம்.

* கறிவேப்பிலையின் இளம் தளிர்களை காயவைத்து பொடியாக்கி, அதை தேங்காய் எண்ணெயில் கலந்து தலையில் தேய்த்துவந்தால் முடி கருகருவென்று வளரும்.

* 2 கரண்டி தேனுடன் எலுமிச்சம் பழச்சாறு 4 சொட்டு கலந்து குடித்துவந்தால் உடலில் தேவையற்ற கொழுப்பு சேர்வது தடுக்கப்படும்.

* பப்பாளி வயிற்றுக்கோளாறுக்கு மருந்தாகப் பயன்படுகிறது. செரிமானத்தை ஊக்குவிக்கிறது, பப்பாளிக்காயின் பர்ல் வயிற்றில் உள்ள பூச்சிகளை அகற்றுகிறது.

* பப்பாளி தோலில் உள்ள மருக்கள் மற்றும் கரும்புள்ளிகளை நீக்குகிறது. இதன் விதைகளும் பூச்சிகளை அகற்றும் மருந்து தயாரிக்கப் பயன்படுகிறது.

* பப்பாளி இலைகளின் சாறு காய்ச்சலைப் போக்கும் மருந்தாகப் பயன்படுகிறது. இதய நோயைக் குணப்படுத்தவும் இது உதவுகிறது.

## 250/= பரிசு வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி

பரிசுப் போட்டி இல :-478

**கேள்வி: பெண் விடுதலையில் எவ்வாறான விடயங்கள் உள்ளடக்கப்படுகின்றன?**

அனுப்ப வேண்டிய கடைசித் திகதி:- 20. 07. 2015

பரிசுப் போட்டி இல :- 476 இற்கான விடை :- மார்த்தா வியாராத சில்வா.

பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி :- விக்கினஜெயம் டினேஸ், அராலி வடக்கு, வட்டுக்கோட்டை.

விடையை கீழுள்ள கூப்பனில் எழுதி, தபாலட்டையில் அனுப்பிவைக்கவும். அனுப்பி வைக்கவேண்டிய முகவரி:

வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி,
பரிசுப் போட்டி இல : 478
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல - 167,
யாழ்ப்பாணம்.

சரியான விடையை எழுதியவர்களில் ஒருவர் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்படுவர்.

478

பெயர் : ..........................
முகவரி : ..........................
தே.அ. அட்டை இல : ..........................
விடை : ..........................
கையொப்பம் : ..........................



## “கூரையேறி கோழி பிடிக்க முடியாதவன் வானமேறி வைகுண்டம் போக ஆசைப்படலாமா?

*மொக்கன் கேட்கிறான்*

எலக்ஷனும் வந்திட்டுது. கூட்டமைப்புக்காரரும் உசார்ப்பட்டு நிக்கினம். அனந்திப் பெடிச்சிக்கும் இடம் குடுக்கலயாம். மாகாண சபைத் தேர்தலில் பெடிச்சியை பாவிச்சினம். அவளுக்குக் கிடைச்ச அனுதாபத்தில வாக்குகளையும் அள்ளிச்சினம். அண்டைக்கு அந்த பெடிச்சியைப் பாவிச்சவ இண்டைக்குக் கைகழுவி விட்டிட்டினம். மொக்கனுக்கு இது முந்தியே தெரியும். அவை நெடுக இப்படித்தான். தேவைக்கு பாவிப்பினம். தேவை முடிஞ்சால் கைவிட்டுவிடுவினம். அவை பெரிய மட்டத்து ஆக்கள்தானே. சின்னச் சின்ன ஆக்களை யெல்லாம் பெரிசா தூக்கி வைச்சிருக்கமாட்டினம். ஆனால் எலக்சனில இந்த சரி, பிழை தெரியவரும். இந்த முறை வேற யாரோ பொம்பிளை யளுக்கு குடுக்கப்போயினம் எண்டு கதை அடிபடுகுது. கொழும்பில சாக்கொல்லப்பட்ட ரவிராஜ் பெடியன்ர மனிசிக்குத்தான் குடுப்பினம் எண்டு அரசல்புரசலாகக் கதை அடிபடுகுது. யாருக்கெண்டாலும் பசை யுள்ள இடமா பாத்துக் குடுப்பினம். ஆருக்கு என்னத்தைக் குடுத்தாலும் இந்த முறை இவைக்கு ஏழுக்கு மூண்டுதான் கிடைக்கும்.

மாவை சேனாதிராசா, சுரேஸ் தம்பி, பண்டைப் பெருமை தலைவர் மாரெல்லாம் தல குப்புற இந்த முறை விழுவினம். தளபதி அமுதலிங்கம், நாகநாதன் ஐயா விழுந்த மாதிரி இவையும் இந்த முறை மண்ணைக் கவ்வுவினம். ஒன்பது இடம் ஏழா குறைஞ்சுது. கூட்டமைப்புக்காரருக்கு இப்ப இருக்கிற சீற்று பாதியாப் போகப்போகுது. அவரவர் பாவ புண்ணியத்தின்படி வெல்லுவினம். தோப்பினம். கீரைக் கடைக்கும் எதிர்க்கடை வேணுமாம் எண்ட எண்ணம் எங்கட சனத்திற்கு இறுக்கமா வந்திட்டுது. கூட்டமைப்பாற்ற குத்துவெட்டுக்களைப் பாத்துப் புளிச்சுப் போன எங்கட சனத்திற்கு ஆவணி 17 ஒரு அருமையான நாளா அமையுமெண்டு பக்கத்து வீட்டு பெரியவரும் சொல்லுறார். இருக்கிற எம்.பிமார் எல்லாருக்கும் எலக்சன் அடிவயித்தக் கலக்குது. இனி செத்துப்போன பிரபாகரன் மற்ற தளபதிகள், போராளிகள் எல்லாரும் கூட்டமைப்பாற்ற மேடைவழிய உயிர்பெற்று நிப்பினம். இவை அவைய முற்றா சாகவிடமாட்டினம்.

அவங்களின்ர சாவிலதான் இவையின்ர வாழ்வு வந்து வாய்ச்சுது. அவங்கள் செத்துக்கெட்டது பெரும் புண்ணியம் எண்டு முள்ளி வாய்க்கால் நேரத்தில நிம்மதியா மூச்சுவிட்ட கூட்டமைப்புப் பெரியவையெல்லாம் மேடையில கண்ணீரும், கம்பளையுமாய் நிப்பினம். ஒருத்தருக்கொருத்தர் உள்ளுக்குள்ளால அறுப்பு வேலை செய்வினம். பழைய வீட்டு பெருமைக்காரர் வீட்டுக்கட்சிக்காரருக்கு எண்டுதான் வோட்டுக் கேப்பினம். வெளியில நாங்கள் எல்லாரும் ஒண்டு எண்டு சொன்னாலும் உள்ளுக்குள்ள இரண்டு மூண்டாய் நிக்கினம் எண்டது ஊர்ச்சனத்துக்கு வெட்டவெளிச்சம்.


இவ்வளவு காலமும் அரசாங்கத்தைத் தாக்கி ஆவேசமா மேடையில பேசி பழகின ஆக்கள் இந்த முறை அடக்கி வாசிக்கவேண்டிய கட்டத்தில நிக்கினம். சர்வதேசமும் இந்த எலக்சனை உன்னிப்பாக கவனிக்குதெண்டு சம்பந்தன் ஐயா இப்பவே பழைய பல்லவியைப் பாடத்தொடங்கீட்டார். அந்தக் காலத்தில மொக்கன் கூத்துப் பார்க்கப் போறவன். அப்ப, அங்க, வங்க, கலிங்க எண்டு ஐம்பத்தாறு தேச ராசாக்களும் அடங்கி நிண்ட பெரிய ராசா எண்டு கோமாளி சொல்லுறது வழக்கம். இப்ப ஐம்பத்தாறு தேசமும் போய் இந்த கூட்டமைப்புக் கூத்துக்காரரால சர்வதேசமும் எண்ட வசனம் பாவனைக்கு வந்து நிக்குது.

உலகத்தில இப்ப கிட்டத்தட்ட 200 தேசங்கள் இருக்கெண்டு மொக்கனுக்கு சொல்லக் கேள்வி. இதில இலங்கை எண்ட ஒரு நாடு இருக்கெண்டு அரைவாசித் தேச மக்கள் அறியமாட்டினம். இதில சர்வதேசம் எண்டு சம்மந்தர் சொல்லேக்குள்ள சம்மந்தர் ஐயாவை அவை எவை? எவை? எண்டு சொல்லச்சொல்லி மொக்கன் கேக்கிறான். சீனாவோ?, ரஷ்யாவோ?, பர்மாவோ? பாகிஸ்தானோ? ஒஸ்திரேலியாவோ? ஆயன்ரீனாவோ?. இவைய எவை உன்னிப்பா பாக்கினம் எண்டு படிச்ச நாலஞ்சு பெரிய மனுசரும் கேக்கினம். சர்வதேசம் சர்வதேசம் எண்டு எங்கட சனத்த ஒண்டுமறியாத சனம் எண்டு நினைச்சு கதை விடினமாம் கதை.

இப்ப என்னடாவெண்டா இருபத்யொன்பது நாடுகள் சேர்ந்து புலியள முடிச்சு விட்டுட்டுதுகள் எண்டு மூக்கால அழுகினம். இனிமேலும் கூட்டமைப்பாற்ற சர்வதேச புழுகுகள் புரளிகளையெல்லாம் சனம் காது குடுத்துக் கேளாது. ஒரு செப்புச் சதத்துக்கும் நம்பாது. எலக்சனுக்குள்ள மேடைல நிண்டு புழுகிப்போட்டு ஆவணி 17 சனத்தின்ர வாக்கால அடிபட்டு, உடைபட்டு வீட்டை போய்ப் படுக்கேக்குள்ளதான் சனத்தை ஏமாத்தினதுக்குக் காலம் குடுத்த தண்டனை எண்டு நினைச்சுப் புலம்புவினம் எண்டு மொக்கன் உறுதியாச் சொல்லுறான். இந்த கூட்டமைப்புக்காரரால எந்தெந்தக் கட்சிக்கு எவ்வளவு இடம் எண்டு இன்னும் ஒற்றுமையா ஒதுக்கி முடியேல்லை. இதுக்குள்ள எல்லாரும் ஒண்டு சேந்து எங்களுக்கு உரிமை எடுத்துதரப்போயினமாம். மைத்திரியும் ஓம் எண்டுட்டாராம் இனி என்ன எலக்சன் முடிய மைத்திரி குடுக்க சம்மந்தர் உரிமையை பெற்று எங்களுக்கு தருவாராம். இதெல்லாம் எங்கட சனத்தை விசரர் பைத்தியக் காரர் எண்டெண்ணி கதைக்கிற கதையில்லையோ.



எங்களுக்கோ குடுமி கட்டப் பாக்கினம். “கூரையேறி கோழி பிடிக்க முடியாதவன் வானமேறி வைகுண்டம் போப்போறானாம். எண்ட பழமொழிதான் மொக்கனுக்கு நினைவுக்கு வருகுது. வயதுபோய் அறளை பேந்தால் சம்மந்தர் ஐயா இப்பிடியும் கதைக்கலாமோ? என்று மொக்கன் கேக்கிறான், மொக்கியும் கேக்கிறாள்.



# 02 ஆம் உலகப் போரும் வெளிவாராத 12 உண்மைகளும்

உலகப் போர் என்றாலே ஐரோப்பிய நாடுகளின் போர்க்கள நெடுங்குழிகளில் நடந்த இரத்தக்களரிகள்தான் நம் நினைவுக்கு வரும். அதுதான் உண்மையும். இதுதவிர, உலகப் போர்குறித்து நமக்குத் தெரியாத எவ்வளவோ விஷயங்கள் இருக்கின்றன. உலகப் போர் சீனா வரை ஊடுருவியது என்பது உங்களுக்குத் தெரியுமா? ஆசியா, வடக்கு அமெரிக்கா, கரீபியத் தீவுகள், ஆஸ்திரேலியா, ஆபிரிக்கா போன்ற பகுதிகளிலிருந்தும் வந்த வீரர்கள் இந்தப் போரில் ஈடுபட்டது உங்களுக்குத் தெரியுமா? முதலாம் உலகப் போர் தொடர்பாக நீங்கள் அறிந்திராத, ஆச்சரியமளிக்கும் 12 தகவல்களை பி.பி.சி. வெளியிட்டிருக்கிறது.

### 1. பிரான்ஸில் வெடித்த குண்டுச் சத்தம் லண்டன் வரை கேட்டது

போர்க்களத்தின் நெடுங்குழிகளிலும் சகதியிலும் மூர்க்கமாகப் போர் நடந்துகொண்டிருந்தபோது, போர் வீரர்களின் கால்களுக்கு அடியில் . வேறு வகையான போர் ஒன்று நடந்துகொண்டிருந்தது. கண்ணிவெடி புதைப்பவர்களின் குழு ஒன்று, எதிரிகளின் நெடுங்குழிகளில் கண்ணிவெடி களைப் புதைத்து வைப்பதற்காக 100 அடிவரை குழிதோண்டியது. பெல்ஜியத்தில் உள்ள மெஸேன் ரிட்ஜ் என்ற பகுதியில் 19 சுரங்க வழிகளில் 4,08,233 கிலோ எடையுள்ள வெடிபொருட்கள் ஒரே நேரத்தில் வெடிக்கச் செய்யப்பட்டன. இதனால், ஜெர்மனியின் முன்வரிசைப் படையினரில் பெரும்பாலானோர் இறந்துபோனார்கள். 225 கிலோமீற்றர் தொலைவில், பிரிட்டிஷ் பிரதமரின் இல்லம் இருந்த டௌனிங் தெரு வரை வெடிச்சத்தம் கேட்டிருக்கிறது.

### 2. மரண தண்டனையை எதிர்கொண்ட பத்திரிகையாளர்கள்

போரின் நடப்புகள் குறித்துச் செய்தி சேகரிப்பதற்காகச் சில பத்திரிகை யாளர்கள் தங்கள் உயிரையே பணயம் வைத்தனர். போரின் தொடக்கத் தில் அதிகார மட்டத்திலிருந்து தகவல்கள் கசிவதைத் தடுக்கும் வகை யில் பத்திரிகையாளர்களுக்கு அரசாங்கங்கள் தடைவிதித்தன. ராணுவத் தலைமையைப் பொறுத்தவரை, போர் குறித்துச் செய்திகள் வெளியிடுவ தென்பது எதிரிகளுக்கு உதவுவதே. எனவே, பிடிபடும் பத்திரிகை யாளர்கள் மரணதண்டனையை எதிர்கொண்டார்கள்.

### 3. பிரிட்டிஷ் படையினருக்கு ஒவ்வொரு வாரமும் வந்த கடிதங்களின் எண்ணிக்கை: 1.2 கோடி

பிரிட்டனிலிருந்து அனுப்பப்பட்ட கடிதம் பிரான்ஸில் உள்ள போர் முனையை அடைவதற்கு எடுத்துக்கொண்ட காலம் வெறும் இரண்டு நாட்கள்தான் என்பது நமக்கு வியப்பளிக்கிறதல்லவா? இந்தக் கடிதங்க ளின் பயணம் தொடங்கிய இடம் ரீஜெண்ட் பார்க் என்ற பணியகம்தான். போர்முனையில் உள்ள நெடுங்குழிகளை எட்டும் முன் இந்த இடத்தில் தான் கடிதங்கள் வகைவகையாகப் பிரிக்கப்பட்டன. போர் முடிவதற்குள் 200 கோடி கடிதங்களும் 11 கோடியே 40 லட்சம் பொதிகளும் போர் முனையில் இருந்த பிரிட்டிஷ் வீரர்களுக்குப் பட்டுவாடா செய்யப்பட்டன.

### 4. போர் பூசிய மஞ்சள்

ஒரு தலைமுறை ஆண்கள் போருக்குச் சென்றுவிட்டதால், வேலை களைச் செய்யவேண்டிய ஆண்கள் இல்லாததாலும், வறுமையின் காரணமாகவும், அதுவரை ஆண்கள் மட்டுமே செய்துவந்த வேலை களைச் செய்யப் பெண்களும் பணிக்கப்பட்டனர். டி.என்.டி. வெடிமருந்து தொழிற்சாலைகளில் வேலைபார்த்த பெண்கள் மஞ்சள் பறவைகள் என்று அழைக்கப்பட்டனர். நச்சு மஞ்சட்காமாலை காரணமாக அவர் களுடைய தோலின் நிறம் மஞ்சளானதால் அவர்களுக்கு இந்தப் பெயர்.

### 5. சீரமைப்பு அறுவைச் சிகிச்சையைத் தந்தது முதல் உலகப் போர்

முதல் உலகப் போரில் பலருடைய முகங்களிலும் காயமேற்படு வதற்கு முக்கிய காரணம் குண்டுச் சிதறல்கள்தான். தோட்டாக்கள் நேராகத் துளைத்துச் செல்பவை. ஆனால், குண்டுச் சிதறல்களில் வெளிப்பட்ட உலோகச்சில்லுகளோ முகத்தையே அலங்கோலமாகக் கிழிக்கக்கூடியவையாக இருந்தன. ஹேரல்டு கிலஸ் என்ற அறுவைச் சிகிச்சை மருத்துவர் இதையெல்லாம் பார்த்து அதிர்ச்சியுற்று, பாதிக்கப் பட்டவர்களுக்கு உதவும் நடவடிக்கைகளில் இறங்கினார். இதன் விளைவாக, முகச்சீரமைப்புத் துறையின் முன்னோடித் தொழில் நுட்பங்களை அவர் கொண்டுவந்தார்.

### 6. போரின் முடிவில் அநாமதேயமாக இறந்துபோன வில்ஃப்ரெட் ஓவன்

வில்ஃப்ரெட் ஓவன், முதல் உலகப் போர் காலகட்டத்தைச் சேர்ந்த, தற்போது பிரபலமடைந்த கவிஞர்களில் ஒருவர். போர் முடிவதற்கு ஒரு வாரத்துக்கு முன்பு போரில் அவர் மரணமடைந்தார். கருணை, பயங்கரம் ஆகிய இரண்டும் கலந்த ஒரு பார்வையைப் போர்மீது கொண்டிருந்த சிலரில் அவரும் ஒருவர். ஆனாலும், முதலாம் உலகப் போர்குறித்த மிகவும் அசலான பார்வை ஓவனுடையது என்பதை 1960-களில்தான் இலக்கிய முகாம்களைச் சேர்ந்தவர்கள் முடிவுசெய்தனர். அதன் விளை வாக, போர் தொடர்பான இரண்டு பெரும் கவிதைத் தொகுப்புகளை பெருமளவில் ஓவனின் கவிதைகளைக் கொண்டு வெளியிட்டனர்.

### 7. பிரிட்டனின் மிக இளம் வீரருக்கு வயது 12

முதல் உலகப் போரின்போது தன்னுடைய வயது 12 என்பதை மறைத்து, பொய்யான வயதைச் சொல்லி சிட்னி லூயிஸ் என்னும் சிறுவன் இராணுவத்தில் சேர்ந்தான். ஆர்வத்தின் காரணமாக, பெரியவர் களுடன் சேர்ந்துகொண்டு போரிட்ட சிறுவர்களில் அவனும் ஒருவன். தேசப்பற்றினால் உந்தப்பட்டும், மந்தமான தினசரி வாழ்க்கையிலிருந்து தப்பிக்கவும்தான் அந்தக் காலத்துச் சிறுவர்கள் அப்படிச் செய்தார்கள்.

### 8. கிட்டத்தட்ட பிரிட்டனில் பொருளாதாரச் சரிவையே ஏற்படுத்திவிட்டது முதல் உலகப் போர்

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பொருளாதார வல்லரசாக இருந்தது பிரிட்டன். எந்த நாடும் எதிர்கொள்ளாத அளவுக்குப் பொருளாதார இழப்பை முதலாம் உலகப் போர் பிரிட்ட னுக்கு ஏற்படுத்தியது. எடுத்துக் காட்டாக, 1918, செப்டம்பர் மாதத் தின் ஒரு நாளில் மட்டும் சுடப்பட்ட துப்பாக்கிக் குண்டுகளுக்குச் செலவான தொகை அப்போதைய மதிப்பில் 4 இலட்சம் பவுண்டுகள். ஆக, மற்ற செலவுகளையெல்லாம் கற்பனை செய்துபாருங்கள்!

### 9. முதல் உலகப் போரின் நன்மைகளில் ஒன்று ரத்த வங்கிகள்

போரில் பலத்த காயமுற்ற வீரர்களுக்கு இரத்தம் செலுத்திச் சிகிச்சை அளிப்பதை பிரிட்டிஷ் இராணுவம் ஆரம்பித்துவைத்தது. ஒருவரிடமிருந்து இன்னொருவருக்கு என்று நேரடியாகவே ரத்தப் பரிமாற் றம் செய்யப்பட்டது. அமெரிக்க மருத்துவர் ஆஸ்வால்டு ரொபேர்ட்சன் தான் முதல் இரத்தவங்கியை நிறு வினார். இரத்தம் உறைவதையும், வீணாகப்போவதையும் தடுப்பதற்கு சோடியம் சைட்ரேட்டைப் பயன் படுத்தினார். ஐஸ்கட்டிகளின் அர வணைப்பில் 28 நாட்கள்வரை இரத்தம் பாதுகாக்கப்பட்டு. உயிர் காக்கும் நடவடிக்கைகளின்போது பயன்படுத்தப்பட்டன.

### 10. கண்ணை ஏமாற்றிய கப்பல்கள்

போரின்போது உணவையும் இராணுவத் தளவாடங்களையும் சுமந்துவந்த கப்பல்களை எதிரிகளின் நீர்மூழ்கி ஏவுகணைத் தாக்குதல்களி லிருந்து பாதுகாப்பது அத்தியாவசி யமாக இருந்தது. நார்மன் வில்கின் சன் என்ற ஓவியர் வித்தியாசமான ஒரு யோசனையை முன்வைத்தார். கண்ணைக் கூசவைப்பது போன்ற வடிவங்களாலும், ஒன்றுக்கொன்று தீவிரமாக வேறுபடும் வண்ணங்க ளாலும் கப்பலுக்கு ஒரு மாயத் தோற்றத்தைக் கொடுப்பது என்பது தான் அவரது யோசனை. உரு மறைப்பு என்பதற்கு நேரெதிர் இது. கண்ணைப் பறிக்கும் உருமறைப்பு என்று அதற்குப் பெயரிடலாம். கப்பல்கள்ள மறைப்பதற்குப் பதிலாக எதிரிகளைக் குழப்புவதற்கு இந்த உத்தி பயன்பட்டது.

### 11. காப்பாற்றிய குழிகள்

முன்வரிசையில் நின்றுகொண்டு சுடுவது என்பது பிரிட்டிஷ் வீரர் களைப் பொறுத்தவரையில் அபூர்வ மான ஒன்று. நீளமாகக் குழிகள் வெட்டி, அவற்றிலேயே அவர்கள் நடமாடினார்கள். இது பெரும்பாலும் ஆபத்தைத் தவிர்க்கத்தான்.

### 12. போர்முனைக்குச் செல்ல இராணுவத் தளபதிகளுக்குத் தடை

முதலாம் உலகப் போரைப் பற்றி வழக்கமாகச் சொல்லப்படும் உவமைகளுள் ஒன்று இது. கழுதைகளின் தலைமையில் சிங்கங்கள் போரிட்ட போர். போரில் நேரடியாகச் சண்டை யிட்ட தளபதிகள் பெரும்பாலும் கொல்லப்பட்டதால் போர் முனைக்குச் செல்லத் தடை விதிக்கப்பட்டது. தளபதி என்ற கௌரவத்தைப் போ- ரில் ஏற்படும் வீரமரணத்துக்காக விட்டுக்கொடுக்கப் பலரும் தயாராக இல்லை என்றும் சொல்லலாம்.

# குருப்பெயர்ச்சிப் பலன்கள் (06.07.15 முதல் 01.08.16 வரை)

## சிம்மம்



இதுவரை சிம்மம் ராசிக்கு 12இல் இருந்த குரு இப்பொழுது உங்கள் ஜென்ம ராசிக்குள் வருகிறார். ஜென்ம இராமர் வனத்தில் சீதையை சிறை வைத்தது என்பது பாடல். அதனால் நமக்கு கஷ்டம் என்பது அர்த்தமல்ல. உங்கள் ராசிக்கு 5க்கும், 8க்கும் உரியவர் குரு பகவான். 5ஆம் இடம் என்பது மனது, இதயம், திட்டம், எண்ணம், மகிழ்ச்சி, குரு உபதேசம் ஆகியவற்றை குறிக்கும் இடம். ஏற்கனவே 12இல் வந்தபொழுது இராவணன் முடியற்று வீழ்ந்தது என்பது பாடல். 5க்கும், 8க்கும் உடைய குரு பகவான் 12இல் மறைந்து கெட்டவன் கெட கிட்டிடும் ராஜயோகம் என்ற அடிப்படையில் அதர்மத்துக்கு தலை குனிந்துவிட்டார். விதிவசத்தால் வன வாசம்போனவர்கள் எல்லாம் நல்லவர் களாக காட்சிதந்தார்கள். குரு 5ம் பார்வை யாக உங்கள் ராசிக்கு 5மிடத்தை பார்ப்பப தால் திருமணமான தம்பதியினருக்கு புத்திரபாக்கியம் கிட்டும். தாய்வழியில் தன வரவுவரும். எடுத்த காரியங்கள் வெற்றிபெறும். குரு 7ஆம் பார்வையாக உங்கள் ராசிக்கு 7மிடத்தை பார்ப்பதால் வியாபாரம், கூட்டுத்தொழில், நண்பர்கள் மூலம் நல்ல உறவு ஏற்படும். 7மிடம் என்பது 10மிடத்திற்கு 10மிடம் ஆகும். அதனால் தொழில் முன்னேற்றம் மற்றும் திருமண சுபகாரியங்கள் கைகூடும். குரு உங்கள் ராசிக்கு 9மிடத்தை 9ம் பார்வையாக பார்ப்பதால் தெய்வ அனுகூலம் கிட்டும். வெற்றி தேடி வரும். வெளியூர் பயணம் அனுகூலம் ஆதாயம் தரும். குடும்பத்தில் சுபகாரியங்கள் நடக்கும்.

## கன்னி



இதுவரை இலாப ஸ்தானத்தில் சஞ்சரித்த குரு பகவான் நீங்கள் நினைத்ததை விட ஏற்றம்கொடுத்து இருப்பார் இப்பொழுது 1 2ம் பாவமான விரய ஸ்தானத்தில் சஞ்சரிக்க உள்ளார். வாய்மையுற்றிட இராவணன் முடி பன்னி ரெண்டில் வீழ்ந்ததும் என்பது பாடல். கோட்சாரத்தில் குரு ராசிக்கு 12 ல் சஞ்ச ரிக்கும் காலத்தில் மாரக பயமும், பதவி இழத்தலும் ஏற்படும் என்பது பொதுவிதி. இருப்பினும் கன்னி. மிதுனம் ஆகிய வீடுகளுக்கு பாதகாதபதி குரு அதனால் கெட்ட இடத்திற்கு குரு வரும் காலம் கெட்டவன் கெட்டிட கிட்டிடும் ராஜ யோகம் என்ற அடிப்படையில் இந்த குரு பெயர்ச்சி மிகவும் நன்மையை செய்யும். உங்கள் ராசிக்கு 6ஆம் பாவத்தை குரு பார்ப்பதால் கடன்சுமை குறையும். நோய் நொடி நீங்கும். தொழில் அபிவிருத்தி உண்டாகும். வரவேண்டிய தொகைகள் வந்துசேரும். உங்கள் ராசிக்கு 8ம் பாவத்தை குரு பார்ப்பதால் வழக்கு வெற்றிகள் சாதகமாகும். பயம் நீங்கும். எதிர்பாராதவகையில் பணவரவு வரும். காலங்கள் மாறும் காட்சிகள் மாறும். வேண் டுவது பொறுமை வேண்டாதது கோபம்.

## துலாம்



*இதுவரை உங்கள் ராசிக்கு 10ம் பாவத்தில் சஞ்சாரம் செய்த குரு பகவான் இப்பொழுது உங்கள் ராசிக்கு 11ம் வீடான இலாப ஸ்தானமான சிம்மத்தில் சஞ்சரிக்க உள்ளார். 11ம் பாவம் என்பது மூத்த சகோதரர்கள், வித்தை, லாபம், நட்பு, மன ஆசைகள் நிறைவேறுதல் ஆகியவற்றை குறிக்கும் இடமாகும். உங்கள் ராசிக்கு 11ம் பாவத்தில் குரு வரும்பொழுது முழுமையான யோகத்தைச் செய்யும் என்பது பழமையான ஜோதிட நூல்களில் சொல்லப்பட்டுள்ளது. உங்கள் ராசிக்கு 3க்கும் 6க்கும் உடைய குரு பகவான் உங்கள் ராசிநாதன் சுக்கிரனுக்கு பகை கிரகமாக இருந்தாலும் குருவின் வீட்டில் தான் சுக்கிரன் உச்ச அந்தஸ்து பெறுகி றார். உங்கள் ராசிக்கு 3ம் பாவத்தை குரு 5ஆம் பார்வையாக பார்ப்பதால் வீரம், துணிவு, துணைவர் பலம், ஆயுட்பலம், எல்லா காரியங்களிலும் வெற்றி பெற செய்வார். தேவ குரு ராசிக்கு 11ம் பாவத்தில்வந்தால் செல்வம் சீர் குதிரை வெண்குடை தீவர்த்தி தருமமும் தானமும்



உண்டு. தாய், தந்தை துணையுமுண்டு. குரு 7ம் பார்வையாக உங்கள் ராசிக்கு 5ஆம் மிடத்தை பார்ப்பதால் உங்களுடைய எண்ணங்கள் யாவும் நிறைவேறும். திட்டங்கள், ஆசைகள் கனவுகள் எல்லாம் நிறைவேறும். குழந்தைகள் இல்லாதவர்களுக்கு புத்திரபாக்கியம் கிட்டும். உங்கள் ராசிக்கு 7ம் மிடத்தை 9ம் பார்வையாக குரு பார்ப்பாதல் இது வ்ரை தடைப்பட்ட திருமணம் போன்ற சுப காரியங்கள் இனிதே நடைபெறும்.

## விருச்சிகம்



*இதுவரை உங்கள் ராசிக்கு 9ல் இருந்த குரு இப்பொழுது உங்கள் ராசிக்கு 10ம் இடத்துக்கு மாற உள்ளார். 9மிடம் என்பது யோக ஸ்தானம். 10ம் இடம் சுமாரான இடம்தான். பத்தாமிடத்து குரு ஈசனார் ஒரு பத்திலே தலையோட்டிலே இரந்துண்டது என்பது பாடல். கடந்த காலத்தில் குரு 9ல் நல்ல இடத்திலிருந்து நன்மைகளை அடைந்தவர்கள் பத்தில் குரு மற்றும் ஜென்ம சனி ஆகியவற்றால் கைக்கு எட்டியது வாய்க்கு எட்டாத கதையாக கடன் படும் நிலையும், இதுவரை ஏழரை சனி குரு பார்வையில் இருந்ததால் தலைக்கு வந்தது எல்லாம் தலைப்பாகையோட சென்றது. குரு பகவான் 5ம் பார்வையாக 2மிடமான வாக்கு வித்தை குடும்ப ஸ்தானத்தை பார்க்கப்போவதால் சொன்ன சொல்லை காப்பாற்றலாம். குடும்பத்தில் சந்தோஷ ங்களைப் பார்க்கலாம். குடும்ப தேவைக்காக புதிய பொருட்களை வாங்கலாம். வீட்டில் திருமணம்போன்ற சுபகாரியங்களை நடத்தலாம். உங்கள் ராசிக்கு 4ம் வீட்டை 7ம் குரு பார்வையாக பார்ப்பதால் தாயார் வகையில் அனுகூலம் பெறலாம். பூமி, வீடு, வாகன ஸ்தானத்தை பார்ப்பதால் அவற்றில் விருத்தி, அபிவிருத்தி, நல்ல பலன்களை காணலாம். உடல்நிலையில் நல்ல ஆரோக்கியம் உண்டாகும் நன்மதிப்பு கூடும். நோய், நொடிகள் குணமாகும். இதுவரை பணத்துக்கு வீண் வட்டி கட்டியவர்கள் எல்லாம் அசலை முழுமையாக அடைத்து விடலாம். எந்த காரியத்தையும் ஒரு முறை க்கு பல முறை யோசித்து செய்யுங்கள். ஏழரை சனி நடப்பதால் யாருக்கும் ஜாமீன் போடாதீர்கள். பத்தில் உள்ள குரு பதவியை ஒன்றும் நாசம் செய்யமாட்டார் கவலைப்படவேண்டாம். நன்மையே நடக்கும்.

## தனுசு



* இது வரை உங்கள் ராசிக்கு 8ல் இருந்த குரு இப்பொழுது ராசிக்கு 9ம் இடத்திற்கு மாற இருக்கிறார். உங்கள் ராசி நாதனான குருவே உங்கள் ராசியை பார்க்கிறார். அது மிகவும் நல்லது. அகப்பட்டவனுக்கு அஷ்டமத்தில் சனி, ஓடிப்போனவனுக்கு ஒன்பதில் குரு என்பார்கள். ஏற்கனவே ராசிக்கு 8ல் குரு இருந்த காலம் ராசிநாதனே அஷ்டமத்தில் மறைந்ததால் சிலருக்கு விபத்து வைத்திய செலவு, வேலையில் பிரச்சினை,ஓ ய்வு ஒழிச்சல் இல்லாத உழைப்பு, உழைத்தும் பெருமையில்லை, எதிர்பார்த்த காரியங்கள் கைகூடாமை போன்ற தீய பலன்களைத் தந்து ஏமாற்றங்களை தந்தது. 9இல் இடத்து குரு கஷ்டங்களை போக்குவார். கண்ணீரைத் துடைப்பார் ஆறுதலை தருவார். குருவருளும் திருவருளும் வழி நடத்தும். கும்பிடப்போன தெய்வம் ஏதிரே வந்து உதவிசெய்யும். உங்கள் ராசி நாதன் குரு 5ம் பார்வையாக உங்கள் ராசியை பார்க்கப்போவதால் எடுத்த காரியங்கள் வெற்றிபெறும். கண்டபடி கை நீட்டிய இடமெல்லாம் கடனை வாங்கி அசலும் அடைக்கமுடியாமல் வட்டியும் கட்டமுடியாமல் தலைகுனிந்தவர்கள் எல்லாம் இனி தலைநிமிர்ந்து நடக்கலாம். தைரியத்தையும், தன்னம்பிக்கை தந்து வளமான வாழ்வு உண்டு. குரு தன் 9ம் பார்வையாக உங்கள் ராசிக்கு 5ம் மிடத்தை பார்க்கப் போவதால் உங்கள் கஷ்ட நிலை கள் மாறும் பொருளாதார நெருக்கடி நீங்கும். உழைப்புக்கு ஏற்ற வருமானம் கிடைக்கும். உங்களை அலட்சியபடுத்தியவர் கள் எல்லாம் வலிய வந்து நலம் விசாரிப்பார் கள். தங்கள் சுயநலத்திற்க்காக சில சுயநலவாதிகள் உங்களை நாடி வருவார் கள். ஏழரை சனி நடப்பதால் இருக்கிற உத்தியோகத்தில் கவனம் தேவை கொள்ளுங்கள். புதிய முயற்சிகளை தள்ளிப் போடுங்கள். கூட்டுத்தொழிலில் கவனமாக இருங்கள். உங்களுடைய முயற்சிகள் வெற்றிபெறுவதற்கு காலதாமதம் ஆகலாம். ஆனால் அவை அனைத்தும் வெற்றி பெரும்.

## மகரம்



*கடந்த ஒரு வரு டமாக உங்கள் ராசிக்கு 7ம் இடத்தில் இருந்து நற்பலன்களைக் கொடுத்துக் கொண்டி ருந்த குரு பகவான் இப்பொழுது ராசிக்கு 8ம் இடமான விபத்து, கண்டம் அபகீர்த்தி, அவமானம், கௌரவப் போராட்டம், விரக்தி, மனக் கஷ்டம், மன சஞ்சலம் என்ற இடத்தில் சஞ்சரிக்க உள்ளார். உங்கள் ராசிக்கு 7ம் இடத்தில் குரு வந்தபொழுது பெரும் மாற்றங்களை நல்லவிதமாக சந்தித்தவர்கள்தான் அதிகம். உங்கள் ராசிக்கு 3 க்கும் 12 க்கும் உரிய வரான குரு பகவான் 3,6,8,12, இல் வரும் பொழுது முழுமையான யோகத்தை செய்வார். உங்கள் ராசிக்கு 8ல் வரும் குரு தன்னுடைய 5ம் பார்வையாக ராசிக்கு 12ம் இடத்தை பார்க்கப்போவதால் வெளி நாடு சம்பந்தப்பட்ட வேலைவாய்ப்பு, பொருள்வரவு, நிம்மதியான தூக்கம், சுபகாரியங்கள் போன்ற நல்ல பலன்கள் நடைபெறும். உங்கள் ராசிக்கு தன ஸ்தான மான 2ம் பாவத்தை குரு பார்ப்பாதல் இது வரை கொடுத்ததை வாங்க முடியவில்லை. வாங்கியதை கொடுக்க முடியவில்லை என்ற நிலை மாறி வாக்கு நாணயத்தை காப்பாற்றிவிடலாம். எதிர்பாராதவிதமாக பணம், காசு கையில் புரளும். தேடிவந்து உதவிசெய்வார்கள். பணம் இருந்தாலே நிம்மதியும் மக்களும் நண்பர்களும் கூடி விடுவார்கள் அல்லவா? அதனால் எதையும் நீங்கள் தேடி போகவேண்டாம். எல்லாம் உங்களை தேடிவரும். குருவின் பார்வை உங்கள் ராசிக்கு 4ம் இடமான பூமி, வீடு, வாகனம், சுகம், கல்வி ஆகிய காரகத்துவம் உள்ள இடத்தை பார்ப்பதால் இடம் வாங்குதல், புது வீடு குடிபோகுதல், புதிய வாகனம் வாங்குதல் போன்ற சுபச் செலவு-கள் ஏற்படும் இந்த குருப்பெயர்ச்சியால் நீங்கள் பட்டத்தை இழக்கப்போவதும் இல்லை பதவியையும் இழக்கப்போவதும் இல்லை கௌரவம் அந்தஸ்து உயரும். ஆடி மாதத்திற்கு மேல் உங்கள் ராசி நாதன் சனி பகவான் உங்கள் ஜென்ம ராசியை பார்க்கப்போவாதல் 8ம் இடத்து குருவால் பாதகமில்லை கவலைப்பட வேண்டாம். பொதுவாக ராசியதிபதி, லக்னாதிபதி ராசி, மற்றும் லக்னத்தை பார்த்தால் கோசார கிரகங்களால் எந்த பாதிப்பும் வராது என்பது தொன்மை யான ஜோதிட நூல்களின் விதி. எனவே நற்பலன்களை அதிகமாக எதிர்பார்க்கலாம்.

## கும்பம்



* இது வரை உங்கள் ராசிக்கு 6 ம் இடத்தில் இருந்த குரு பகவான் ராசிக்கு ஏழாம் வீட்டில் சஞ்சரிக்க உள்ளார். இது குருவுக்கு மிகவும் நல்ல இடம். உங்கள் ராசிக்கு 2க்கும் 11க்கும் உடைய குரு உங்கள் ராசியை பார்ப்பது புகழ் அந்தஸ்து. கௌரவம். தொழில், நண்பர்கள்வகையில் அனுகூலம். ஆதாயத்தையும் தரும். இது வரை 6ல் குரு உச்சமாக இருந்ததால் கடன், போட்டி, பொறாமை, எதிரி, நோய், வைத்திய செலவு, பல பிரச்சினைகள் என்று உங்களை தாக்கியது. இனி அந்த நிலைகள் மாறி எல்லா விசயங்களும் சாதகமாகும். கல்யாண வயதில் உள்ள ஆண் பெண்களுக்கு திருமணம் கை கூடிவரும். மேலும் நின்றுபோன திருமணங்கள் இனி சுபமாக நடைபெறும். திருமண வாழ்க்கையில் விவாகரத்து பெற்ற ஆண், பெண்களுக்கு மறுமணம் நடைபெறும். நம்பிக்கையிழந்து வாழ்க்கையை ஓட்டியவர்களுக்கு எல்லாம் இனி எல்லாமும் சாத்தியம்தான் என்ற நம்பிக்கையை இந்த குருப்பெயர்ச்சி கொடுக்கும். நல்லதே நடக்கும் கடவுளை நம்புங்கள்.

## மீனம்



* உங்கள் ராசி நாதன் குருபகவான் இதுவரை 5ம் இடத்தில் இருந்து உங்கள் ராசியை பார்த்து கொண்டு இருந்தார். அதனால் கௌரவத்துக்கு பங்கம் இல்லாமல் வாழ்க்கை ஓடி இருக்கும். இந்த குருப்பெயர்ச்சி உங்கள் ராசிக்கு 6 ம் பாவமான எதிரிகள், கடன்கள், நோய்கள், துன்பம், பயம், தண்டனை ஆகிய காரகத்துவங்களைக் குறிக்கும் ஸ்தானத்தில் ராசி நாதன் வரும் பொது எதிரிகளின் தொல்லை நீங்கும், கடன்கள் திரும்பச் செலுத்தும் நிலை உருவாகும். பலவித நோய்களால் ஏற்பட்ட தொந்தரவுகள் நீங்கும். குரு 5 ம் பார்வையாக உங்கள் ராசிக்கு 10 மிடத்தை பார்க்கப்போவதால் செய் தொழில் முன்னேற்றம் கொடுக்கும். வியாபாரம் விருத்தி அடைந்து பெயர், புகழ், அந்தஸ்து அதிகரிக்கும். குரு 7ஆம் பார்வையாக ராசிக்கு 12ஆம் பாவத்தை பார்க்கப்போவதால் வீண் விரயங்கள் குறையும்.


சுபச்செலவுகள் செய்யப்போதுமான அளவு பணவரவு கிடைக்கும். புனித யாத்திரை செல்லும் நிலை உருவாகும். குரு 9ம் பார்வையாக ராசிக்கு 2 ம் இடத்தை பார்க்கப்போவதால் வாக்கு வன்மை அதிகரிக்கும். அவரவர்கள் ஜாதகத்தில் கிரகங்களின் அமைப்பிற்கு தக்கவாறும் தற்சமயம் நடைபெறும் தசா-புத்திக்கு தக்கவாறும் உள்ள பலன்களே நடைபெறும். பொதுவாக எல்லா ராசி அன்பர்களும் குருப்பெயர்ச்சிக்கு பரிகார மாக வியாழன் கிழமைதோறும் தட்சிணாமூர்த்திக்கு மஞ்சள் வஸ்திரம், கொண்டைக்கடலை மாலை சாற்றி, நெய் தீபம் ஏற்றி வழிபட்டுவந்தால் நல்ல பலன்கள் விரைவாகவும் அதிகமாகவும் நடைபெற உதவும். மேலும் தீய பலன்கள் பெரும் பாதிப்பு தராமல் காப்பாற்றிக் கொள்ள உதவும்.



Dr. சி.யமுனாநந்தா

# நீர் வெறுப்பு நோய்





நீர் வெறுப்பு நோய் எமது சமூகத்தில் உருப்பெருக்கம் அடையும் உயிர்க்கொல்லியாக மாறுபட்ட பரிமாணத்தில் உருவெடுத்துள்ளது. பொதுவான சுகநலப் பிரச்சினையான நாய். பூனை போன்ற செல்லப்பிராணிகளின் தீண்டல்களின் பாதிப்பினை இக்கட்டுரை விளங்குகின்றது. இந்நோய் தொடர்பான விழிப்புணர்வினை மக்கள் அறியவேண்டியது அவசியமாகிறது.

## 02. நீர் வெறுப்பு நோயினைக் கடத்தக்கூடிய விலங்குகள்

| வீட்டு விலங்குகள் | வீடு அல்லது வெளி விலங்குகள் . | காட்டு விலங்குகள் |
|---|---|---|
| நாய் | மாடு | நரி |
| பூனை | எருமை | ஓநாய் |
| | ஆடு | குரங்கு |
| | செம்மறி ஆடு | கீரி |
| | பன்றி | கரடி |
| | குதிரை | |
| | ஒட்டகம் | |

1. நகரங்களில் ஏற்படும் நீர் வெறுப்பு நோய். இது விசர் நாய்க்கடிகளாலும், அரிதாகப் பூனைகளினாலும் ஏற்படும்.

2. காட்டு நீர் வெறுப்பு நோய். காட்டு எலிகள், ஓநாய்கள், கீரி, வெளவால் என்பனவற்றில் காட்டில் ஏற்படும்.

## 03. நீர் வெறுப்பு நோய்த் தொற்றுக்கு ஏதுவான நிகழ்வுகள்

நோயாளிகளை வைரஸ் தொற்றல் ஏதுநிலைக்கு ஏற்ப வகைப்படுத்தல்.

**1. தொற்றுக்கான பாரிய ஏதுநிலை**

- தனிமையான அல்லது பல கடிகாயங்கள் அவற்றில் இருந்து குருதி வரல், குறிப்பாக தலை, கழுத்து, முகம், நெஞ்சம், மேற்கை, உள்ளங்கை, விரல் நுனிகள், விதை, ஆண்குறி ஆகிய இடங்களில் கடித்தல்.
- பல கீறல் காயங்கள், குருதி வடிதலுடன் தலை, கழுத்து முகத்தில்.
- தனிமையான அல்லது பல ஆழமான காயங்கள் உடலின் எப்பாகத்திலும்.
- காட்டு மிருகங்களினால் கடிபட்டு குருதி வெளிவரல்.

## 04. நீர் வெறுப்பு நோய்த் தொற்றுகைக்கு ஏதுவான நிலைக்கு தடுப்பு சிகிச்சைகள்

**தொற்றுகைக்கு ஏதுவான சம்பவங்களின் வகைகள்**

| காயத்தின் வகை | சந்தர்ப்பம் | முகாமைத்துவம் |
|---|---|---|
| வகை I | தோல் சேதமடையாத நிலையில் தொடுகை பிராணிகளுக்கு உணவூட்டல் நக்கல். | சிகிச்சை தேவையில்லை. |
| வகை II | கீறல் இரத்தம் வராத காயம் *தனியான, மெல்லிய கடித்தல் அல்லது கீறல், குருதி வெளிவராமை, (கால்கள், கைகள், வயிறு, முதுகு) ஆகிய இடங்களில் * நகத்தினால் தோலில் கீறல்கள். * திறந்த காயத்தில் விலங்கின் உமிழ்நீர் சிந்துதல். * தனிமையான அல்லது பல கடிகள் அல்லது கீறல்கள், குருதிப்பெருக்கு இன்றி உடலின் எப்பாகத்திலும். * பாதிக்கப்பட்ட பசு அல்லது ஆட்டின் பாலை கொதிக்க வைக்காது குடித்தல். | தடுப்பூசி ARV ஏற்புத்தடுப்பு மருந்தும் வழங்கப்படும். (தொடரும்...) |

## கேரட் மருத்துவ பலன்கள்



கேரட்டை உணவில் எடுத்துக்கொள்பவர்களுக்கு கொழுப்புத் தொல்லையும், ஆண்மையின்மை பிரச்சினையும் வராது. கேரட்டில் உள்ள விற்றமின் "A"கண்பார்வைக்கு நல்லது. கேரட்டுக்கு நிறத்தை அதிலுள்ள பீட்டாகேரட்டின் என்ற அமிலம்தான் தருகிறது. அந்த பீட்டரகேரட்டின்தான் மனிதக் கண்களில் புரை வராமல் பாதுகாக்கிறது.

வயோதிகம் காரணமாக ஏற்படும் பார்வை குறைபாட்டைக்கூட பீட்டாகேரட்டின் தடுத்து நிறுத்துகிறது. பீட்டாகேரட்டின் மாத்திரைகள் எடுத்துக்கொண்டால்கூட அது கேரட்டைப் போல பலன் தருவதில்லை என்பதும் உண்மை.



# அலை அறிந்தது...



**தெற்குப்** பக்கம் சாலைச்சரிவில் இருந்து ஒரு அலங்காரப்பெட்டி ஏறி வந்தது. அந்தப் பக்கம் ஓடும் ஆற்றுக்குள் இருந்து நீரில் அது மிதந்து எழுவது போல தோன்றியது. அதன்பின் ஒரு தலை. அதன்பின் உடல். நான் இமைக் காமல் பார்த்துக்கொண்டிருந்தேன். நெடு நாட்கள் துவைத்து உலர்த்தி பழுப்பேறிய வெள்ளைத்துண்டு நிறத்தில் நரைத்த தலைமுடியும் தாடியும் முழங்கால்வரை சரிந்து காற்றில் ஆடிய நீலநிறமான பெரிய ஜிப்பாச்சட்டையுமாக ஒரு கிழவர் பெட்டியுடன் என்னை நோக்கிவந்தார். என்னைப் பார்த்து சிரித்து "யா ரஹ்மான்" புள்ளே, அம்மை இருக்காஹளா? கூப்பிடுங்க... கூப்பிடுங்கப்பா, ராசால்ல, சுல்தான்ல?" என்றார்.

நான் "எனக்கு சீனி முட்டாய் குடுப்பீங்களா?" என்றேன். நீளச்சட்டை போட்டபின் சீனிமிட்டாய் விற்கத்தானே வேண்டும்? "அய்யா அவுஹ தப்பா நினைச்சிட்டீகளே" நாம சீனி முட்டாயி விக்யலே. அத்தர் பன்னீர் செண்டு விக்கறோம் "அம்மைய கூப்பிடுங்க" என்றார். யோசித்தேன்... அவர் ஏழடி உயரம் இருந்தார். பெரிய மூக்கு பெரிய கண்கள் பெரிய கைகால்கள். நல்ல சிவப்பு நிறம். பெட்டிக்குள் இருந்து எடுத்த பழைய பட்டுமாதிரி ஒரு வழவழப்பு அவர் நெற்றியிலும் கன்னங்களிலும் இருந்தது.

அவர் தன் அலங்காரப்பெட்டியை தரையில்வைத்தார். அது விசித்திரமான பெட்டி. மரத்தாலான பெட்டிதான். அதன் மூடிமட்டும் வளைவாக மேலெழுந்து இருந்தது. பெட்டியின் மரப்பரப்பின்மீது பட்டுப்புடவையை வெட்டி ஒட்டியிருந்தார் கள். எங்கள் வீட்டிலேயே உள்ளே அதைப்போல ஒன்று இருந்தது. அதற்கு முருக்குப்பெட்டி என்று அம்மா பெயர் சொன்னாள். மென்மையான முருக்கு மரத்தால்செய்யப்பட்டது. எடை இருக்காது. வெளியே பட்டுப்புடைவையும் உள்ளே வெல்வெட் துணியும் ஒட்டப்பட்டு பளபளவென இருக்கும். அதற்குள்தான் இராமாயணம், மகாபாரதம், ஜாதகங்கள் எல்லாம் இருந்தன. இந்தப் பெட்டிமீது பட்டுப்புடைவை நன்றாக நரைத்திருந்தது. ஆங்காங்கே கிழிந்து உள்ளிருந்து மரம் தெரிந்தது.

அவர் பெட்டியை திறந்தார். உள்ளே நான் எதிர்பார்த்தது போலவே சிவந்த வெல்வெட். சிவப்பு நிறம் எனக்கு எப்போதுமே தின்பண்ட ஆசையை உருவாக்கிவிடும். என் மார்பில் எச்சில் குழாயாக வழியஆரம்பித்தது. வெல் வெட்டால் ஆன மூடியை விலக்கியதும் உள்ளே சிறிய அறைகளில் ஏராளமான சின்னச்சின்ன புட்டிகள். சிவப்பு, நீலம், பச்சை, மஞ்சள் ஒவ்வொன்றும் பெரிய சீனி மிட்டாய்போல ஒளிவிட்டது. அவர் சிவப்புநிற சீசாவை எடுத்து திறந்து ஒரு சொட்டு தன் சுட்டுவிரலில் எடுத்து என் வயிற்றில் தடவினார். எனக்கு ஜில்லிட்டது. வயிற்றை உக்கி சிரித்தேன்.

"புள்ள போயி அம்மைக்கிட்ட சொல்லணும்" ஒரு அத்தர் பாய் வந்திருக்காருன்னு சொல்லணும் "அத்தர் கபீர்னு சொல்லணும்" நான் தயக்கமாக உள்ளே சென்றேன். நான் உள்ளே செல்லும் கணங்களுக்குள் அவர் அப்படியே மாயமாக காற்றில் மறைந்துவிடுவார் என்று தோன்றியது. பின்னால் திரும்பிப் பார்த்துக்கொண்டே சென்றேன். உள்ளே சென்றதும்தான் என்னுடன் ஒரு விசித்திர மணமும் வருவதைக்கண்டேன். ரோஜா மலரின் மணம். ஆனால் வெறும் ரோஜா மணம் அல்ல. சங்கரி அக்காவுடன் நான் ஈஸ்வரியக்கா கல்யாணத்தன்று சேர்ந்து படுத்துக்கொண்டபோது அவள் கூந்தலில் இருந்துவந்த அதே மணம்.

கொல்லையில் குந்தி பானையைச் சாம்பலால் தேய்த்துக்கொண்டிருந்த அம்மா என்னைப் பார்த்ததும் "என்ன மறுபடியும் பசிக்க ஆரம்பிச்சிட்டுதாக்கும்" எல்லாம் எந்த பாதாளத்திலே போகுதுண்ணே தெரியலையே "என்றவள் மூக்கு விடைக்க சட்டென்று "அத்தர்பாய் வந்திருக்காரா?" என்று எழுந்து கையை வேட்டியிலேயே துடைத்தபின் முடியை கோதியபடி வேகமாக முன்வாசலுக்குச் சென்றாள். நான் பின்னால் ஓடினேன்.

"வாங்க பாய்" "என்றபடி அம்மா முன்பக்கம் வந்தபின் அவரைக் கண்டு நின்று "புது ஆளா?" என்றாள். "ஆமா, நாச்சியாரே". நம்மள் பேரு கபீர். காதர் பாயி போனமாசம் நெஞ்சடைச்சு மௌத்தாயிட்டான்..." என்றபின் "அத்தர் பன்னீர் செண்டு பாருங்க நாச்சியே" அசல் அரேபியா செண்டு பேர்சியா அத்தர்" என்றார்.

அம்மா சிரித்தபடி "காயப்பட்டிணம் பன்னீரு... அதையும் சொல்லவேண்டியது தானே" என்று அமர்ந்தாள். ஒவ்வொரு புட்டியாக எடுத்து முகர்ந்து பார்த்தாள்.

"புள்ளைக்கு என்ன வயசாகுது?" என்றார் கபீர் பாய். அம்மா "அது ஆகுது மூணு வயசு" மாந்தையன் மாதிரி எப்ப பாத்தாலும் முழிச்சிட்டு இருக்கான் பேச்சும் சரியா வரல்லை" இது என்னது? என்றாள்.

"நாச்சியே அது மல்லிகைசெண்டுல்லா." யாஸ்மின் செண்டு... அசல் சிங்கப்பூரு மேக்கு... "என்றபின்" சின்ன எஜமான் எளுத்துவாசனை உள்ளவராக்கும் பாத்துட்டே இருங்க என்றார்."

"என்னத்த வாசனையோ" மீன் மணத்த கேட்டா எங்க இருந்தாலும் பாய்ஞ்சு வந்திருவான் என்றாள் அம்மா. "கண்ணைப் பாத்தா தெரியுதே" கற்பூரக்கட்டியாக்கும். நாம பேசுறது செய்றது எல்லாம் அப்டியே உள்ள போகுது அல்லா கிருபை உள்ள பிள்ளைங்கள கண்ணப்பாத்தா தெரியும் பாத்துக்கிடுங்க. கபீர் பாய் சொன்னார். "அய்யய்ய, சீசாவ அப்டியே கவுத்துப் பர்த்தாக்க நான் எங்க போயி ஏவாரம் பாக்குறது "நாச்சியாரே" இது எடுங்க" தாழம்பூவு" "தாழம்பூவு இங்கியே பூத்து கெடக்கே" பாரிஜாதம் உண்டா?"

"கல்யாண சௌகந்திகம் இருக்குல்லா. பண்டு மகாபாரதத்திலே பீமன் தேடிட்டு போனது, அது கொண்டாண்ணு கேப்பீஹ போலுக்கே" யா ரஹ்மான்... இத்தா மணம் இருக்கிற ஒண்ணும் உங்களுக்கு போதிக்கலையாக்கும்.''

"பட்டுசாறியிலே போட்டு வைக்கிறதுக் கில்லா.. "என்றபின் அம்மா இருபுட்டிகளை எடுத்தார்.

"இருக்கிறதுல மூத்தவ பேரென்ன?" என்றாள் அம்மா இன்னொரு புட்டியை எடுத்தபின் "அத வச்சுகிடுறேன்" இது வேண்டாம "ரெண்டும் இருக்கட்டும் நாச்சியே" மூத்தவ பேரு கதீஜா. இப்ப வயசு இருபத்தஞ்சாவது தரம் பாக்கணும். கையிலே ஓட்டமில்லே என்னண்ணு தரம் பாக்க?

"இருபத்தஞ்சு தானே" எனக்கே இருபத்தாறிலேதான் தரம் வந்தது ஒரு ஜாக்கெட்டு துணி இருக்கு கதிஜாவுக்கு குடுக்கவா? எனக்கு பாறசாலை அக்கா குடுத்தது. நான் இனிமே நிறமுள்ள துணி போடுறதில்லை அம்மா சிரித்தபடி "அதுக்கு வெலை இல்லை பாய்.. அது சும்மா" என்றாள்.

"எல்லாம் நாச்சியாரு அனுக்கிரக மாக்குமே.." என்றபின் அவர் பெட்டியை மூடினார். "இனிமே பொட்டிய திறந்து வைக்யப்பிடாது நாச்சியே" மாத்திகிட்டே இருப்பீஹ... பொட்டப்புத்தியில்லா? திண்ணையில் அமர்ந்தபின் "ஒரு கடுந்தேயிலை போடுங்க நாச்சியே" சீனி நிறைய போடுங்க..."

"நீங்க அரேபியாவிலே இருந்து வந்தீங்களா?" என்று அம்மா கேட்டாள்.

"ஆமா" நாங்கன்னா எங்க பூர்வீகம "ஒரு முந்நூறு வருசம் முன்னாடி. எல்லாத் துக்கும் எளுத்து ஆதாரம் இருக்கு. அரேபியா விலே. கெத்தாங்கிற ஊரிலே இருந்து ஒரு கப்பல் உருவிலே நாப்பது பேரு கௌம்பியிருக்காஹ. அவுஹ வந்து எறங்கின எடம் காயப்பட்டிணம் பக்கம் ஏறுவாடி. கப்பலிலே நெறைய சரக்கு கொண்டு வந்தாங்க"

"என்ன சரக்கு?" என்று அம்மா கேட்டாள். புட்டியை முகர்ந்தபின் "அந்த தாழம்பூவே எடுக்கவா?" என்றாள்

"நாச்சியே மூடின பெட்டிய திறக்கப் பிடாது பாத்துக்கிடுங்க.." என்றார் கபீர்பாய். "சரக்கு என்னான்னு கேட்டீஹன்னா பேரீச்சம்பழம். அத்தரு. அரபிப்பொன்னு" அதைவச்சுகிட்டு ஒரு பெரிய வங்களாவ கெட்டினாங்க அப்ப அங்க பெரிய பள்ளிவாசல் கெடையாது. எங்க பெரிய வாப்பா அவரு தொழுறதுக்குன்னு ஒரு கல்லுபள்ளி கெட்டினாரு அதை இப்பவும் பூனைக்கண்ணு மரக்காயர் பள்ளின்னுதான் சொல்றாக" அவருக்கு பூனைக்கண்ணா?"

"நல்லா கேட்டீஹ" நம்ம நாலு பொட்டைக் குட்டிகளுக்கும் பூனைக்கண்ணுதான் நாச்சியே" அதொரு அரேபிய அழகுல்லா" அம்மா உள்ளே சென்று கொஞ்சநேரத்தில் கறுப்பு டீயுடன் வந்தாள்.

நான் "எனக்கு கருப்பட்டி?" என்றேன்

"இந்த லெச்சணம்தான் பாயி எப்பவும். திங்கிறதுல்லாம வேற நினைப்பே இல்லை" என்றாள் அம்மா.

"இப்ப தீயி நாக்கிலே இருக்கு. இனி அந்த தீ கல்பிலே கேறும்... அப்பம் தம்பி வேற எங்கியோ போயிடுவாருல்ல" இன்'ா அல்லா" கபீர் பாய் டீயை ஊதி ஊதி குடித்தபோது மீசை நுனி பறந்ததை நான் கவனித்தேன்.

"உங்க கொள்ளுத்தாத்தா வேவாரமா பண்ணினாரு?" "ஆமா" கப்பலு ஏவாரம். அரேபியாவுக்கும் கொளும்புக்கும் எட்டு ஊரே அவரு சோத்தத்தான் திண்ணுதுன்னு சொல்லுவாஹ. "எங்க வாப்பா சின்னப் பிள்ளையா இருக்கிறப்ப பிளீமத் காரிலே தான் உஸ்கூல் போவாருண்ணு ஊரிலே பேச்சு உண்டு" பொண்ணுக நிக்கா ஹெல்லாம் தேர்த்திருவிழா மாதிரில்லா நடத்தினாரு அவங்க வாப்பா... அவரு காலத்திலேதான் பொன்னுக்கும் பொருளுக்கும் அளவே இல்லாம போச்சு எட்டு கப்பல் வச்சு ஏவாரம் பண்ணினாரு செவத்த மரைக்காயர்னா ஊரிலே பேரச் சொன்னாலே எந்திரிச்சு நின்னு போடுவானு ஹள்லா?

அம்மா வாய்மேல் கையை வைத்தாள்.

"பிறவு?"

"ரம்ஸான் சக்காத்துக்கு மட்டும் அந்தக் காலத்திலே அம்பதாயிரம், லெச்சம் ரூவாவரை செலவாக்குவாரு". நாலாயிரம் அஞ்சாயிரம் பேருக்கு பிரியாணி" பண குடிப்பொட்டலிலே இருந்து ஆட்டுமந்தைகள அப்படியே பட்டாளம் மாதிரி ஓட்டிட்டு வந்திருவாஹ. ராத்திரி முச்சூடும் சமையல். பிரியாணி மணம் அந்தால நாங்குனேரிக்கு அடிக்கும்லா? அவரு வங்களா நாலுமாடி. முற்றம் பள்ளிவாசல் மைதானத்தைவிட பெரிசு" நாலாம்மாடி உப்பரிக்கையிலே நிண்ணுட்டு ரூவாநோட்டா அள்ளி அள்ளி வீசிட்டே இருப்பாரு... கீழே ஏழைப்பாழைங்க வந்து ராத்திரிலேயே காத்து கிடப்பாங்க. ரூபாவ அவுஹ பாய்ஞ்சு அள்ளி அள்ளி சேப்பாங்க அந்தக் காலத்திலே அந்த ரம்சான் சக்காத்த வச்சுத்தான் எட்டு ஊரிலே சனங்க துணிமணி எடுக்கிற துன்னா பாத்துக்கிடுங்க.

"பகவானே" என்றாள் அம்மா "எல்லாம் அல்லாவோட வெளையாட்டு" கொதிச்ச பாலிலே தண்ணி விளுந்தமாதரி எல்லாம் அப்டியே போய்ட்டுது.. முப்பது வருசத்திலே வீடு வாசல் எல்லாம் போயிட்டுது கொளும்பு ஏவாரத்திலே பெரும் நட்டம் யுத்தம் வந்தப்ப எல்லாம் போச்சு அப்டியே எங்கள கூட்டிகிட்டு அப்பா பணகுடிக்கு வந்தாரு அங்கேருந்து இங்க எடலாக்குடி நம்ம பொளைப்பெல்லாம் இங்கதான்" ஆனாலும் அப்பப்ப ஏறுவாடி போயி நம்ம வாப்பா வங்களாவையும் பள்ளிவாசலையும் பாத்துட்டு வந்துடறது". அல்லாவை பாக்க முடியலேண்ணாலும் அல்லாவோட அடையாளங்கள பாக்குறது ஞானமாக்குமே... மொத்தம் பதினெட்டு ரூவா நாச்சியே"

"அய்யோ... பதினெட்டு ரூவாயா" எனக்கு வேண்டாம்.. இந்தா பாயி நீங்களே வச்சுக்குங்க"

"இது என்னா பேச்சு? வாங்கின மொதல திருப்பி எடுக்கவா" செரி 'பதினாறு... ரெண்டு ரூவா நஷ்டம் அல்லா கணக்கிலே"

"பதிமூணுண்ணா எடுப்பேன்.. இல்லேன்னா இந்தா இருக்கு"

"என்ன நாச்சியே... ஏவாரி வயித்துலே அடிக்கலாமா? செரி போட்டு... பதினஞ்சு ஒரு பைசா உங்கிளுக்கும் இல்ல எனக்கும் இல்ல"

அம்மா "பதிநாலு" என்றாள்

"புட்டிய குடுங்க நாச்சியே" நான் நாலூடு போயி பொழைக்கிற ஆளு".

"செரி பதினஞ்சு" என்றாள் அம்மா.

உள்ளிருந்து அம்மா பணம் எடுத்து வரும்போது கபீர் பாய் என்னிடம் "எல்லாம் ரிக்கார்டு பண்ணியாச்சா? உள்ள போட்டா புடிச்சு வைச்சாச்சா?" என்றார். நான் "எனக்கு சீனி முட்டாய்?" என்றேன். அம்மா பணத்தைக் கொடுத்து விட்டு "கதைய கேட்டா கஷ்டமா இருக்கு பாய்லட்சுமி போறதும் வாறதும் பெருமாளுக்கே தெரியாதுண்ணு சொல்லுவாங்க"

"அதிலே ஒரு இரகசியமும் இல்ல நாச்சியே" அலை மேலேறினா கீழிறங்கணும்னு அல்லாவோட ஆணை.. அதை மனுசன் மாத்த முடியுமா? கீழ எறங்குத நேரத்திலே நாம வந்து பொறந்தாச்சு. வரட்டுமா? என்றபடி பெட்டியை மூடி தலைமேல் ஏற்றினார்.

"இருந்தாலும் ஒரு காரணம் இருக்கணும்லா? தப்பு நம்மகிட்டதானே இருக்கணும்... ஆண்டவன் தப்பு செய்வானா?"

"காசு வந்தா அதுக்குண்டான தப்புகள செய்யாம இருப்போமா" அதானே மனுச கொணம்...

"என்ன தப்பு? உங்க அப்பா தாத்தாக்க அம்பிடு தானதர்மம் பண்ணியிருக்காங்க"

"நாச்சியே, சக்காத்த வாரி எறிஞ்சு குடுத்த பாவத்துக்கு இன்னும் எத்தன தலமொற கஷ்டப்படணுமோ, ஆருகண்டா?" யா ரஹ்மான் என்று நிமிர்ந்து "வாறேன் நாச்சியே! வாறேன் புள்ளை" என்று சென்றார். அலங்காரப் பெட்டி காற்றின் அலையில் செல்வது போல சென்றது.

நான் அம்மாவிடம் "எனக்கு கருப்பட்டி?" என்றேன்.

# வேற்றுக் கிரகவாசிகளின் கதை

**இந்த** பிரபஞ்சத்தில் பூமியன்றி, வேறு கோள்களில், உயிர்கள் இருக் கின்றனவா அல்லது நாம் மட்டும் இந்த பிரமாண்டத்தில் தனிமையில் இருக்கிறோமா என்ற கேள்வி அனைவரையும் கவர்ந்த ஒன்று.

பிரபஞ்சத்தில் உயிர்கள் இருக்கின்றன. அதுவும் பல கோள்களில் இருக்க வாய்ப்பு உள்ளது என்று அறிவியலாளர்கள் கூறுகின்றனர்.

சில நூறு ஆண்டுகளுக்கு முன் ஒரு கண்டத்தில் இருக்கும் மனிதன், மற்ற கண்டங்களில் மனிதர்கள் வாழ்வது தெரியாமல் இருந்தான். அதுபோல நாமும் இப்பொழுது மற்ற கோள்களில் வாழும் உயிர்களைப் பற்றி அறியாமல் வாழ்கிறோமோ?

நம் பூமியில் மட்டுமில்லாது மற்ற கோள்களிலும் உயிர்கள் இருக்கின்றன என்பதற்கு, அறிவியலாளர்கள் மிக எளிமையான ஒரு வாதத்தை முன் வைக் கின்றனர். 'மாவெடிப்பு (BIG BANG) நடந்தபோது இந்த பிரபஞ்சத்தில் ஒன்றுமே இல்லை. இந்த பூமியே இல்லை. ஹைட்ரோஜென் மற்றும் ஹீலியம் என்ற இரண்டு தனிமங்கள் மட்டும்தான் முதலில் தோன்றின. இந்த பிரபஞ்சத்தில் நாம் காணும் சகல நட்சத்திரங்களும், கோள்களும், அந்த ஹைட்ரோஜென் மற்றும் ஹீலியம் ஆகிய அடிப்படை தனிமங்கள் பல இரசாயன மாற்றங்கள் அடைந்து உண்டானவை. அப்படி அந்த இரண்டு தனிமங்களிலிருந்து உண்டான கோடான கோடி கோள்கள் அனைத்திலும் உயிர் உண்டாகி பரிணாம வளர்ச்சி அடைய முடியாமல், அவைகளில் ஒன்றான நம் கோளில் மட்டும்தான் அது சாத்திய மானது என்று கூறுவது தவறு' என்பதுதான் அந்த வாதம்.

நம் சூரிய மண்டலத்திலேயே, குறிப்பாக செவ்வாயிலும் மற்றும் சில கோள்களின் நிலவுகளிலுமே உயிரினங் கள் இருக்க அதிக வாய்ப்புண்டு என்ற முடிவுக்கு வருகின்றனர் அறிவியலாளர் கள். நம்முடைய சூரிய குடும்பத்திலேயே உயிர் இருக்க வாய்ப்பு உள்ளபோது பிரபஞ்சத்தின் மற்ற கோடான கோடி கோள்களில் சிலவற்றில் அது சாத்தியமாகாதா?

பல கோள்கள், அது சுற்றிவரும் நட்சத்திரங்களுக்கு அருகாமையில் இருந்தால் அதிக வெப்பத்தின் காரண- மாகவும், நட்சத்திரங்களிலிருந்து அதிக தொலைவில் இருந்தால் வெப்பம் இன்மை காரணமாகவும், உயிர் தோன்ற ஏதுவாக இல்லாமல் இருந்திருக்கலாம். சூரியனுக்கு அருகிலுள்ள புதன் சுமார் 450 டிகிரி செல்சியஸ் வெப்பத்தில் வாடிக்கொண்டு இருக்கின்றது. சூரியனிலிருந்து தொலைவில் உள்ள கோள்களும், அதன் நிலவுகளும் வெப்பமே இல்லாமல் இருக்கின்றன. அல்லது கோள்கள், வியாழன் போல வாயுக்கோள்களாகவும், பல, செவ்வாய் போல காந்தப்புலன் இன்மை, காற்று மண்டலம் இன்மை போன்ற பல காரணங் களினால் உயிர்தோன்றி வளர்ச்சி அடையாமல் போயிருக்கலாம். அவை போக இன்னும் பல்லாயிரக்கணக்கான கோடி கோள்கள் இருக்கின்றனவே... உயிர்தோன்றி வளர, அவை ஏதுவானதல்லவா?

நம் சூரிய குடும்பத்தில் ரவுடிகள் போல சுற்றிவரும் பாறைகளிலும் (asteroid), வால் நட்சத்திரங்களிலும் (comets) உயிர் உண்டாவதற்கான அடிப்படை இரசாயன மூலக்கூறுகள் காணப்படுவது பிரபஞ்சத்தில் உயிர் இருப்பதற்கு ஒரு சான்று என கொள்ளலாம். நம் கோளுக்கு பிரபஞ்சத்திலிருந்து, இந்த வகையான சூரிய குடும்பத்தைச் சுற்றிவரும் பாறைகளின் மூலமும், உயிர் கள் வந்திருக்க வாய்ப்புகள் அதிகம் உள்ளன என்று அறிவியலாளர்கள் கருதுகின்றனர்.

### நம்பவே முடியாத இடத்தில் உயிர்கள்

1977 இல் கடலுக்கு அடியில் சுமார் 7000 அடி ஆழத்தில் வெப்ப நீர் உற்றுக் களை கண்டுபிடித்தனர். 400 டிகிரி C என்ற வெப்பநிலை கொண்ட அந்த நீரூற்றுக்கள் கடலின் தரைமட்டத்தில், பூமிக்குள்ளே உள்ள எரிமலை குழம்பு களினால் சூடாக்கப்பட்டு வெளியே வேகமாக வருகின்றன. பல நச்சு இரசாயனங்கள் நிறைந்த இந்த நீரூற்றை ஆய்ந்த ஆய்வாளர்கள், ஒரு மிகப் பெரிய அதிசயத்தைக் கண்டனர். அங்கே பல உயிர்கள் அந்த இரசாயன பொருட்களையே உணவாக உண்டு.



சூரிய வெளிச்சம் சற்றும் இல்லாத அந்த இடத்தில் உயிர் வாழ்ந்துகொண்டு இருக்கின்றன.

உயிர்கள் வாழமுடியவே முடியாது என்று நினைத்த இடத்தில், உயிர்களைக் கண்ட அறிவியலாளர்கள் அப்போதுதான் உணர்ந்தார்கள், பிரபஞ்சத்தின் எந்த மோசமான இடத்திலும் உயிர்கள் வளர சாத்தியம் உண்டு என்று.

அதுமாத்திரமல்ல, உறைநிலைக்கு மிகக்குறைவான ஆர்க்டிக் துருவப் பிரதேசங்களிலும், மிக அமிலத்தன்மை கொண்ட இடங்களிலும், உயிர்கள் வாழ்வதைக் கண்ட அறிவியலாளர்கள், பிரபஞ்சத்தில் உயிர்கள் வேறு கோள் களில் இருக்கின்றனவா என்ற கேள்விக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டனர். ஆதாரம் கிடைப்பதுதான் இனி நடக்கவேண்டியது.

### பிரபஞ்சத்தில் உயிர்களைத் தேடலாமா?

பிரபஞ்சத்தில் உயிர்களை மூன்று வகையாகப் பிரிக்கலாம். முதலாவது, பரிணாம வளர்ச்சி அடையாத பக்ரீரியா போன்ற உயிரினங்கள். இரண்டாவது, மனிதனைப் போன்ற அறிவுஜீவிகள். மூன்றாவது மனிதனைவிட அதிக அறிவியல் வளர்ச்சி கண்ட உயிர்கள். அவர்களுக்கு நாம் 'சூப்பர் மனிதர்கள்' என்று பெயர் கொடுப்போம். இரண்டாவது வகை, மூன்றாவது வகை உயிர்கள் உருவத்தில் மனிதர்களைப்போல இருப்பார்கள் என்று கற்பனை செய்து கொள்ளவேண்டாம். சில திரைப்படங்களில் அவர்களது உருவங்களை கற்பனை செய்து சித்தரித்திருப்பார்கள். அதை விட மோசமான உருவமாக இருந்தாலும் ஆச்சரியப்படவேண்டாம்.

கதாநாயகர்கள் போல நல்ல அழகான உருவத்தையே எதிர்பார்க்கும் மனிதர்கள், உருவத்தில் மோசமாகவும், அறிவில் சிறந்தவர்களான அவர்களைக் காண நேர்ந்தால், திரும்பிக்கூட பார்க்காமல் சென்றுவிடுவார்களோ?

முதலாவது வகையான பக்ரீரியா போன்ற ஆரம்பகட்ட உயிரினங்கள் பல கோள்களிலும் இருக்கும் என்பதில் எள்ளளவும் ஐயப்பாடு இல்லை. நம் கேள்வியெல்லாம் மனிதன்போன்ற வளர்ச்சியடைந்த உயிர்களும், அதனிலும் அதிக வளர்ச்சிகண்ட சூப்பர் மனிதர் களும் உள்ளனரா? உண்டு என்றால் அவர்கள் நம்மை ஏன் நம்மை தொடர்பு கொள்ளவில்லை என்பதுதான். அதற் கான காரணத்தை விவாதிக்கத்தான் இந்த கட்டுரை.

அண்டத்தில் அறிவுஜீவிகளை தேடும் பணியானது, செட்டி ( SETI - SEARCH FOR EXTRA TERRESTRIAL INTELLIGENCE ) என்ற அமைப்பினால் பிரபஞ்சத்தில் எங்கிருந்தாவது செயற்கை ரேடியோ கதிரலைகள் பூமிக்கு வருகின்றனவா என்று கவனிப்பதுதான். செயற்கை ரேடியோ அலைகள் அறிவுஜீவிகளால் தான் உருவாக்கமுடியும். பிரபஞ்சத்தில் இருந்து பல காரணங்களினால் இயற்கையாக ரேடியோ கதிரலைகள் பூமிக்கு வரும். ஆனால் வேற்று கோள் அறிவுஜீவிகள் செயற்கையாக உண்டாக் கிடும் கதிரலைகளை அறிவியலாளர்கள் பிரித்து அறியமுடியும். அவ்வாறு செய்தி கள் வந்தால் அதுதான் வேற்றுக்கோளில் நம்மைப் போன்ற அறிவுஜீவிகள் வாழ் வதற்கு அடையாளமாகும். இதற்காக அதிநவீன ரேடியோ தொலைநோக்கி களை உபயோகித்து இரவு பகல் என்று பாராமல் வருடம்முழுவதும் வானத்தை ஆராய்ந்துகொண்டிருக்கின்றனர்.

### இதுவரை ஏன் நம்மை தொடர்பு கொள்ளவில்லை?

1930 ஆம் ஆண்டுகளில் நாம் பூமியில் உபயோகிக்க ஆரம்பித்த ரேடியோ அலை கள், நம் பூமியில் பயணிப்பதுபோன்று நம் பூமியைவிட்டு பிரபஞ்சத்திலும் பயணம் செய்ய ஆரம்பித்துள்ளன. நாம் அந்த அலைகளை வேற்றுக்கிரக மனிதர் களைச் சென்றடையும் நோக்கத்துடன் அனுப்பவில்லை. நம் தேவைக்குத்தான் ஒலிபரப்பானது. 1930லிருந்து 2012 வரை, சுமார் எண்பது ஆண்டுகள், இவை நம்மை விட்டு ஒளியின் வேகத்தில் அதாவது வினாடிக்கு மூன்று லட்சம் கிலோ மீற்றர் என்ற வேகத்தில் பயணம் செய்துள்ளன. வேற்று கோளில் வாழும் அறிவுஜீவிகள் சுமார் 80 ஒளியாண்டு கள் என்ற தொலைவுக்குள் இருந்தால், அன்று நம்மிடமிருந்து சென்ற அந்த அலைகள், இப்போது அவர்களை சென்றடைந்திருக்கும். அவர்களால் இப்போது நம் ஒலிபரப்பை கேட்க முடியும். இப்போதுதான் கேட்கமுடியும் என்பதை கருத்தில் கொள்ளவேண்டும்.

நம்மிடமிருந்து சென்ற அலைகள், நாம் அண்டத்தின் இந்தப் பகுதியில் உள்ள பூமியில் இருப்பதை அவர் களுக்கு அடையாளம்காட்டி கொடுக்கும்.

இந்த பூமியில் அறிவுஜீவிகள் இருப் பதைப் புரிந்துகொண்டு அவர்கள் ரேடியோ அலைகள்மூலம் உடனே செய்தி அனுப்பினால் அது நம்மை வந்தடைய இன்னும் எண்பது வருடங்களாகும்.

அவர்கள் வாழும் கோள் ஒருக்கால் 200 ஒளியாண்டுகள் தொலைவில் இருந்தால் நம்மிடமிருந்து சென்ற கதிரலைகள் அவர்களைப் போய்ச்சேர இன்னும் 120 வருடங்களாகும் . (ஏற்கனவே எண்பது ஆண்டுகள் அலைகள் பயணம் செய்தாயிற்று அல்லவா). அதை வாங்கிய பின் அவர்கள் நமக்குப் பதில் அனுப்பினால் அது நம்மை வந்துசேர மீண்டும் 200 ஆண்டுகளாகும்.

ஆயிரம் ஒளி ஆண்டுகள் தொலை வில் இருந்தால் நமக்குப் பதில்வர சுமார் இன்னும் இரண்டாயிரம் ஆண்டுகளாகும்.

நாம் வேற்றுக்கோள் வாசிகளை தொடர்பு செய்யமுடியாமல் போனதற்கு, நம் கோளுக்கும் மற்ற கோள்களுக்கும் உள்ள பென்னம்பெரும் தொலைவுகள் தான் முக்கிய காரணம் ஆகும்.

நூறு ஆண்டுகளுக்கு முன்பு, பூமியில் இருக்கும் நமக்கு, பிரபஞ் சத்திலிருந்து வரும் அலைகளை வாங்கி பதில் அனுப்பும் தொழில் நுட்பம் தெரியாது. அந்தக் காலத்தில் நமக்கு ஒரு செய்தி வந்திருந்தால் நாம் அதை தவறவிட்டிருக்கவும் வாய்ப்புண்டு.

அதேபோல , ஒருக்கால் நம்மிடம் இருந்து சென்ற அந்த அலைகளைப் பெற்று அதைப் புரிந்துகொள்ளும் அறிவியல் தெரியவில்லை என்றால், அவர்களுக்கு நாம் இங்கிருப்பது தெரியாமல் போய்விடும்.

### எப்போது வேண்டுமானாலும் செய்தி வந்துசேரலாம்

நாற்பது ஒளியாண்டுகள் தொலை வில் உள்ள ஒரு கோளில் அறிவுஜீவிகள் இருக்கிறார்கள் எனக் கொள்வோம். நம்மிடமிருந்து எண்பது ஆண்டு களுக்கு முன் சென்ற அலைகள் நாற்பது ஆண்டுகளுக்கு முன் அவர் களைச் சென்று அடைந்திருக்கும். அவர்கள் அதைக் கேட்டு பதில் அனுப்பியிருந்தால் நாற்பது ஆண்டுகள் பயணம் செய்து பூமிக்கு அது வந்து சேரும் நேரமாகிவிட்டது. எப்போது வேண்டுமானாலும் செய்தி வரலாம்.

(தொடரும்...)





# புண்

சோழ மண்மீது அடிக்கடி
படையெடுத்து திருவிழா
கொண்டாடியது பல்லவ நாடு!

எங்கள் தேசத்தின் திரு உருவை
பங்கம் செய்வது
திருவிழா அவர்களுக்கு!

தாயினும் மேலான தாயக பூமியில்
நாயிலும் கேடாக நம்மை ஆளவோ
பேயிலும் கொடிய பல்லவர்
புகுந்தனர்?

சோழ மண்ணை துகிலுரிய
வந்தவர்கள் கோயில்
கட்டுகிறார்களாம்!

சோழ நாடெங்கும் கோபம்
கொழுந்து விட்டெரிந்தது!
உச்சிச் சூரியனாக
உயர்ந்தன முகங்கள்!

ராஜராஜ சோழன் மாண்டபின்னர்
சோழ நாடு சோர்ந்து போயிருந்தது
அந்த நேரம் பார்த்து பூனைகள்
புகுந்துவிட்டன!

சோழனின் வாரிசுகள்
சோடை போனதால்
கோலத் தமிழ் மண்ணில்
பீடைகள் பெருகின!

பல்லவனுக்கு முன்னால்
பல்லிளிக்க சிற்றரசர்
பல் தீட்டிக்கொண்டிருந்தனர்.!

பல்லவர்கள் பலசாலிகள்
கப்பம் கொடுத்தால்
குறுநிலம் ஆள
குறுக்கே நில்லார்கள்!

சிற்றரசர்கள் சிலர் சிறுமதி
உரைத்தனர்! பல்லவ படையையும்
பல்லவ மன்னனையும் போற்றிப்
புகழ்வதில் போட்டி முற்றியது!

"பல்லவ மன்னன் நல்லவன்
வல்லவன்! கள்ளம்
கபடமில்லாதவன்!"
உள்ளத்தில் பள்ளம்
உள்ளவர்கள் புகழ்ந்தனர்!

மன்னன் நல்லவன் என்று
புகழ்ந்தால்தானே மக்கள் தங்களை
இகழமாட்டார்கள்
என்பதால் புகழ்ந்தனர்!

மன்னன் மாணிக்கம்
என்பது மெய்யானால்
மண்ணை ஆக்கிரமித்தது
மன்னனின் மறுபிறவியோ!
இளைஞர்கள் கொதித்தனர்
எதிரியையும் புகழலாம்
ஆனால் கண்ணில் ஒற்றி
காலில் விழக்கூடாது!
எதிர்த்துக் கிளர்ந்தனர்.
போரிடத் துணிந்தனர்.

நீங்கள் எதிர்த்தால்
வீழுமோ பல்லவம்?
வாருங்கள் வாழலாம்

வளம் உண்டு!
மங்கையில் புரளலாம்!
மதுவில் நீந்தலாம்!
கொங்கைகள் தழுவி
பொங்கிப் பூரிக்கலாம்.

சிற்றரசர்கள் அழைப்பு விடுத்தனர்!
தாயை துகிலுரிபவன்
பலசாலி என்பதால்
தடுக்காதிருப்பவர் நீங்களா?

எதிர்த்தால் பயன் இல்லை
என்பதால் ஒதுங்கி
தாயைத் தாரை வார்ப்பவர்
மானமுள்ள மனிதரா?

இன்று எதிர்ப்பது
தோல்வியிலும் முடியலாம்!
என்றோ ஒருநாள் வெற்றிவசப்படும்.

சிற்றரசர்கள் வேட்டை நடத்தினர்!
சோழ இளைஞர்கள்
செத்து வீழ்ந்தனர்.

பல்லவ மன்னா உன் பலம் உயர்ந்தது!
எம் பலம் அழித்தோம்

உம் பலம் காக்க!
ஓடோடி உரைத்தனர்.

பல்லவன் நகைத்தான்.
"உங்கள்மீது உங்கள்
மக்களே வெறுப்பாயுள்ளனர்!
அதனால் உங்கள் தலைகள்
உடன் சீவப்படும்!"

சிற்றரசர்கள் திகைத்தனர்.
மன்னா இது துரோகம்
மன்னா இது அநியாயம்!

மன்னன் இகழ்ச்சியாக
நோக்கினான்
உங்கள் மண்ணுக்கு
நீங்கள் செய்த துரோகத்தைவிட
இது ஒன்றும் அதிகமில்லை!
உங்கள் மக்களுக்கு நீங்கள்
செய்த அநியாயத்தை விட
இது ஒன்றும் பெரியதுமில்லை!

என்ன துரோகம்?
என்னைப் புகழ்ந்தீர்களே
அது ஒன்று போதாதா?
என்னை நானறிவேன் அதனால்
உங்கள் பொய் அறிவேன்!

இறுதியாய் ஆணையிட்டான்
இவர்கள் கண்களைப் பிடுங்கி
கழுகுக்குப் போடுங்கள்

கண்களுக்கு அழகு
கண்ணோட்டம்! நல்ல
கண்ணோட்டம் இல்லாத
உங்கள் கண்கள் புண்கள்!
இருந்தென்ன இலாபம்
எடுத்தெறியுங்கள்!
சிற்றரசர்கள் மூர்ச்சையாகினர்!

**"கண்ணிற்கு அணிகலம் கண்ணோட்டம்
அஃதின்றேல்
புண்ணென்று உணரப்படும்!"**

*அதிகாரம்: 58 - பாடல்: 575*



## சிந்தியா பதில்

**✪ சிந்தியா! மகிந்தவின் மீள் வருகை எவ்வாறிருக்கப்போகிறது?**

**எஸ்.அஸ்மிதன், மன்னார்.**

மகிந்த ராஜபக்ச மீண்டும் அரசியலுக்கு வரப்போகின்றார் என்பதை ஐக்கிய தேசியக் கட்சியும் அவரது அரசியல் எதிராளிகளும் ஒரு நடுக்கத்தோடு கண்டபடி விமர்சிக்கின்றார்கள். முன்னர் ஜனாதிபதியாக இருந்த ஒருவர் மீண்டும் அரசியலுக்கு வரமுடியாது என்று சட்டம் ஏதாவது இருந்தால் அதை தவறு என்று குறிப்பிடலாம். அவர்தான் தேர்தலில் போட்டியிட்டு மக்களின் அங்கீகாரத்தைப் பெறப்போவதாக கூறுகின்றார்.

அவர் பிரதமராவதும், மீண்டும் தோற்றுப்போவதும் மக்களின் தீர்ப்பிலேயே தங்கியுள்ளது. ஆகவே மகிந்த பிழையாக ஆட்சிசெய்தார் என்றுகூறும் நல்லாட்சி செய்தவர்கள் தீர்ப்பை மக்களிடம் விட்டுவிடவேண்டியதுதானே.

**✪ கூட்டமைப்பு வரும் தேர்தலிலும் சர்வதேசத்தை காட்டி குறளிவித்தை காட்டுமா?**

**இ.கவிதாஞ்சலி, விசுவமடு.**

தேர்தல் அறிவிக்கப்பட்டபோது நீங்கள் இந்தக் கேள்வியை எழுதி அனுப்பி இருக்கின்றீர்கள். இப்போது நிலைமை எல்லாம் மாறிவிட்டது. சிலகாலம் தமக்கும் ஆசனங்களை பங்கிட்டுக்கொள்வதில் இரவிரவாக முட்டிமோதிக்கொண்டார்கள். இப்போது அந்த குடுமிச் சண்டை முடிவுக்கு வந்துள்ளது. அதிலும் தமிழரசுக் கட்சிக்குத் தான் வெற்றி கிடைத்துள்ளது. கடந்த ஆறாம் திகதி கூட்டமைப்பின் தலைவர் சம்மந்தன் ஒரு செய்தியாளர் சந்திப்பில் உரையாற்றும்போது, நாட்டில் நல்ல அரசியல் மாற்றம் ஏற்பட்டிருந்தாலென்ன, சர்வதேச சமூகம் உன்னிப்பாக பார்த்துக் கொண்டிருந்தால் என்ன? கூட்டமைப்பை தமிழ் மக்கள் பேரம்பேசும் சக்தியாக வெற்றிபெறச் செய்யவேண்டும் என்று கூறியதாக செய்திகள் வெளியாகின.

அப்படியென்றால் தமிழ் மக்கள் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்த, சர்வதேச சமூகம் தமிழ் மக்களை உன்னிப்பாக பார்த்துக் கொண்டிருக்கின்றது என்ற நாடகம் கூட்டமைப்பின் நடிகர் திலகங்களால் ஆயிரத்து ஓராவது தடவையாக இம்முறையும் அரங்கேற்றப்படவுள்ளது.

**✪ என்ன சிந்தியா! கிணற்றுக்குள் விழுந்த குழந்தையை பிள்ளையாரும், சரஸ்வதியும் காப்பாற்றினராமே?**

**வ.கவிந்தா, பளை.**

அப்படியொரு செய்தியை நானும் படித்தேன். மகிழ்ச்சிதான். நீண்டகாலமாக அழிவுகள் நிறைந்த பாதாளத்துக்குள் விழுந்து கிடக்கும் தமிழ் மக்களைக் காப்பாற்ற எந்தவொரு சாமியும் இதுவரை வரவில்லையே. ஒவ்வொருவராக கிணற்றுக்குள் விழுந்தால்தான் சாமிகள் காப்பாற்ற வருவார்களோ தெரியவில்லையே.

**✪ முஸ்லிம் நாடுகளை குறிவைத்து அவர்களை அகதிகளாக்கின்றதே. மற்றைய நாடுகள்?**

**எம்.ஜாவிதா, வலஸ்முல்ல.**

அமெரிக்கா போன்ற நாடுகளே இஸ்லாமிய நாடுகளில் பயங்கரவாதிகளையும், தீவிரவாதிகளையும் வளர்த்து விடுகின்றார்கள். அவர்களுக்குள் சண்டைகளை தோற்றுவித்து பின்னர் ஒரு குழுவை பயங்கரவாதிகள் என்று கூறுகின்றார்கள். இன்னொரு குழுவினரை அரச ஆதரவு போராளிகள் என்று உதவுகின்றார்கள். அடுத்த யுத்தத்தில் அரச ஆதரவு போராளிகளாக இருந்தவர்கள் தீவிரவாதிகளாகிவிடுவார்கள் புதிய குழுக்களை வளர்த்துவிடுவார்கள். இந்த ஆயுத விற்பனை சந்தையை முடிவுக்கு கொண்டுவருவதற்கு அனைத்து இஸ்லாமிய நாடுகளும் பொதுவான செயல்திட்டமொன்றை முன்னெடுக்க வேண்டும். இல்லாவிட்டால் இதுவே தொடர்கதையாக இருக்கும்.

**✪ இந்தியா முன்னணி வீரர்களைத் தவிர்த்து சிம்பாப்வே சென்றிருக்கின்றது. இது ஆரோக்கியமானதா?**

**எஸ்.சைந்தன், யாழ்ப்பாணம்.**

பங்களாதேசுடனான டெஸ்ட் போட்டிகளில் இந்திய அணியினர் மோசமான தோல்வியைச் சந்தித்தார்கள். அதன் பின்னர் அணியின் தலைவர் டோனி அதற்கு தகுதியில்லாதவர் என்ற அளவுக்கு இந்திய அணியினர் மீதான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன. அதைத் தொடர்ந்து இந்திய கிரிக்கெட் அணிக்கு அனுபவம் இல்லாத புதிய தலைவர் ஒருவரை கிரிக்கெட் சபை தெரிவுசெய்தது.

இதனால் இந்திய கிரிக்கெட் அணியின் மூத்தவீரர்கள் அதிருப்தி அடைந்துள்ளனர். இந்த சிக்கலைத் தொடர்ந்தே புதிய தலைமையின்கீழ் இந்திய அணியினர் சிம்பாப்வே சென்றிருக்கின்றார்கள்.



**✪ பாபநாசம் கமலுக்கு கிடைத்த வெற்றியா?**

**ந.சேரன், வவுனியா.**

தன் குடும்பம், தன் பிள்ளைகள் என்று வாழும் சராசரியான தந்தை சுயம்புலிங்கம் (கமல்) கேபிள் ரீவி சேர்வீஸ் செய்துவருகின்றார். அவருக்கு இரண்டு பெண் பிள்ளைகள். இருவரும் அப்பா செல்லம். அவர்களில் மூத்தமகள் பாடசாலை டூர் போன இடத்தில் அவர் குளிப்பதை ஒரு பொலிஸ்காரரின் மகன் செல்போனில் படம் பிடித்துவிட்டு பின்னர் அவளை அடைய மிரட்டுகின்றான்.

அதை தடுக்கத் தாயான கௌதமி நடத்தும் போராட்டத்தில் அந்த பொலிஸ்காரனின் மகன் மரணமாகின்றான். படிக்காத சுயம்புலிங்கம் இந்தச் சிக்கலில் இருந்து எப்படி குடும்பத்தை காப்பாற்றுகின்றார் என்பதுதான் கதை. குடும்பத்துக்கு உத்தமனாகவும், பொலிசாருக்கு வில்லனாகவும் கமல் வாழ்ந்திருக்கின்றார். குடும்பத்தோடு பார்க்கக்கூடிய இயல்பான படம். பாபநாசம் உண்மையில் உத்தமவில்லன்.

# காதிலை பூதந்தசாமி

**வணக்கமுங்கோ. வரும் வரும் என்று எதிர்பார்க்கப்பட்ட பார்ளிமெண்ட் எலக்சன் வந்திட்டுது. போன தேர்தலில ஊர்ப்பக்கம் வந்துபோன நம்முடைய அரசியல் தலைவர்களும் தலையைக் கட்டத் தொடங்கியிருக்கினம். கொஞ்சநாளைக்கு முன்னம்வரை வாகனத்தில போகேக்க கண்ணாடியைக்கூட கொஞ்சம் கீழாக இறக்கிவிட்டு பார்த்துக்கொண்டு போகாத தலைவர்கள் இப்போது தெருவிலே முன்னுக்கும் பின்னுக்குமாக ஓடுறாங்கள். ஆனால் அரசியல் தலைவரின்ர உள்நோக்கத்தை புரிந்துகொண்ட ஊர் நாய்கள் அவரை கண்ட இடத்தில இருந்து அவர் நடக்கும் தெருவெங்கும் குலைச்சுக்கொண்டு திரியுதுகள்.**

யாழ்ப்பாணத்துக்கு எண்டு ஒரு அமைச்சர் இருக்கின்றார். அவரை இரவு பகல் என்ற நேரகாலம் இல்லாமல் போய்ச் சந்திக்கவும், தங்களுடைய தேவைகளையும் பிரச்சனைகளையும் பேசித் தீர்த்துக் கொள்ளவும் முடியும் என்ற உரிமையோடு மக்கள் இருந்தார்கள்.

யாழ்ப்பாண மக்களின் இந்த கௌரவத்தையும் கூட்டமைப்பினர் கெடுத்துப் போட்டினம். ஆட்சி மாற்றம் நடந்தபோது தங்களுக்கும் அமைச்சுப் பதவிவேண்டாம், அந்த முன்னாள் அமைச்சருக்கும் அமைச்சுப் பொறுப்புக் கொடுக்கவேண்டாம் என்று நந்தி மாதிரி தேசிய நிறைவேற்றுச் சபையில இருந்திச்சினமுங்கோ.

கூட்டமைப்பினரின் இந்த செயலை யாழ்ப்பாண மக்கள் வைக்கோல் பட்டறை நாய்க்கதையை அடிக்கடி சொல்லுவின முங்கோ. எந்த முகூர்த்தத்தில அந்த உவமைக்கதையை சொல்லிச்சினமோ தெரியல்லையுங்கோ.

கூட்டமைப்புக்காரர் கலைக்கப்பட்ட தற்காலிக ஆட்சியில அப்படியே நடந்து கொண்டிச்சினமுங்கோ. இப்ப எலக்சன் அறிவிக்கப்பட்டதும் ஜனாதிபதி சரியில்லை, பிரதமர் ஏமாற்றப் பார்க்கின்றார், எண்டு புதுக்கதையை சொல்லிக்கொண்டு வேட்பாளர் பங்கீட்டில ரொம்பத் தீவிரமாக இரவு பகலாக ஈடுபட்டிருக்கினமுங்கோ.

கூட்டமைப்பின்ர மாகாண சபை மற்றும் பிரதேச சபைகளில உள்ள சில உறுப்பினர்கள் பெண்களிடம் பாலியல் இலஞ்சம் கேட்டார்கள் என்றும் சிலர் அதைப் பெற்றுக் கொண்டார்கள் என்றும் கடந்த காலத்தில பல செய்திகள் வெளிவந்தது.

பெண்கள் அமைப்புக்கள் கூட்டமைப்புக்கு எதிராக வீதியில் இறங்கி எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் செய்ததையும் கூட்டமைப்பு தலைவர்களிடம் மகஜர் கையளித்ததையும் ஊடகங்கள் விலாவாரியாக வெளியிட்டு. வியாபாரம் செய்திச்சினம். அதையெல்லாம் கூட்டமைப்புக்காரரும், ஊடகக்காரரும் மறந்திருப்பினம். ஆனால் தமிழ் மக்கள் மறக்காமல்தான் இருக்கினமுங்கோ.

நல்லாட்சியில தமிழ் மக்களுக்கு எந்த நன்மையும் நடக்கவில்லை என்று இப்போது கூறும் கூட்டமைப்பினர், நல்லாட்சியில் பங்காளிகளாக இருந்துகொண்டு அதை பயனள்ளவகையில் அணுகாதது கூட்டமைப்பின் முட்டாள்தனம் என்பதை அவர்கள் மறந்துபோயிட்டினமுங்கோ.

தமிழ் மக்களின்ர மறதியையும் உணர்வையும் பயன்படுத்தி சாகும்வரைக்கும் பார்ளிமெண்டில பதவிச்சுகத்தோடு இருந்த விடலாம் என்று மீண்டும் போட்டியிடும் வாய்ப்புக்காக அலையினமுங்கோ.

இந்த பரபரப்புக்களையெல்லாம் கண்டு கொள்ளாதவரைப்போல் வடமாகாண முதலமைச்சர் மௌனமாகிட்டாருங்கோ. கூட்டமைப்பு பார்ளிமெண்ட் உறுப்பினர்கள் நல்லாட்சியில பெருந்தொகைப் பணத்தை சுருட்டியிருக்கினமெண்டு விக்கி ஐயா வெளியாள சொன்னதில இருந்து அவரைக் கண்டாலே கூட்டமைப்பாருக்கு பிடிக்கவில்லையாமுங்கோ.

அந்த சம்பவத்துக்குப் பிறகு கூட்டமைப்பின் தலைவர்கள் என்று கூறிக்கொள்ளும் பலர் விக்கி ஐயாவோடை நேரிலை மட்டுமில்லையுங்கோ. தொலைபேசியிலகூட கதைக்கிறதை நிறுத்திப்போட்டினமுங்கோ.

அந்த விரக்தியில விக்கி ஐயா பழையபடி பூஜை, பஜனை என்று முழுநாளும் சாமி அறைக்குள்ளேயே அடைஞ்சு கிடக்கிறாராமுங்கோ. அவரிடம் நாடாளுமன்றத் தேரதல் தொடர்பாகவோ, போட்டியிடுவது தொடர்பாகவோ கூட்டமைப்பின் தலைமையோ, ஏனைய குட்டித் தலைமைகளோ ஒரு வார்த்தைகூட கலந்தாலோசிக்கவில்லையாமுங்கோ.

முன்னாள் நீதிபதி ஒருவரை அரசியலுக்கு இழுத்துவிட்டவையே அவரை இப்போது ஓரங்கட்டிவிட்டிருக்கினமெண்டதுதான் ரொம்ப வேதனையாக இருக்குது எண்டு மாகாண சபை உறுப்பினர் சுகி ஊருக்குள்ள கூறிக்கொண்டு திரியிறாருங்கோ.

அதுமட்டுமில்லையுங்கோ மாவட்டத்துக்கு ஒரு பெண் வேட்பாளரை கூட்டமைப்பு பட்டியலிலை போட்டியிட அனுமதிக்க வேண்டும் என்று ஒரு திட்டத்தை முன்மொழிந்த போது கூட்டமைப்பின் பெருங்கட்சிக்காரர் கொதிச்சு எழும்பிட்டினமாமுங்கோ.

ஒருவேளை பெண்களுக்கு கூட்டமைப்புக்குள்ள பாதுகாப்பு இல்லை எண்ட காரணத்தினால்தான் அவை மறுத்திருப்பின மெண்டு வட்டுக்கோட்டை அக்காச்சி ஜோக்கடிக்கிறாவுங்கோ.


பாத்தியளோ தமிழ்த் தேசியத்தை விற்று பதவிக்கு வந்தவர்களாலை தமிழரின்ர தேசியத்துக்கும் பாதுகாப்பில்லை. தமிழ்ப் பெண்களுக்கும் பாதுகாப்பில்லை. உயிரோடு இருக்கும் தன்மானமுள்ள தமிழருக்கு இந்த அநியாயத்தைத் தட்டிக்கேட்க ஜோக்கியதை இல்லாமல் இருக்கினமுங்கோ.

ஆகையாலை செத்துப்போன தியாகிகள்தான் ஆவியாக வந்து இந்த தமிழ்த் தேசிய வியாபாரிகளை தண்டிக்க வேணுமுங்கோ. வித்தியாவின் ஆவி அந்த இடத்தில வந்து அழுகுதாம், ஆடு மாடெல்லாம் மிரண்டு ஓடுதாம் எண்டினமே அப்படியெண்டால் இந்த ஆவிகளும் வரலாம்தானே என்ன சொல்லுறியள்.

"யாவும் கலப்படமற்ற கற்பனை"

## வரலாறு படைத்த வல்லுநர்கள்

# மரண பயத்தை ஒழித்த மருத்துவர்



ரணங்கள் அழுகி விஷமடைவதைத் தடுக்க விட்டார் லிஸ்டர். அதை முழுவதுமாக அகற்ற மற்ற மருத்துவர்களும் இவருடைய உதாரணத்தைப் பின்பற்ற வேண்டும். நிதானமாக மிக்க சிரமத்தின்பேரில் வேறு விஷமுறிவுகளைக் காணுவதில் கவனம் செலுத்தலானார்.

மருத்துவத்துறை இவரது முடிவை ஆர்வமின்றி வரவேற்றது. ஒரு பாராட்டுக்கூட இல்லை. சேர்ஜனின் உலகம், மாற்றங்களை விரும்பாத ஒன்று. ஒப்பரேசனுக்குப் பயன்படும் ஆயுதங்கள், கட்டுப்போடப் பயன்படும் துணிகள், விரிப்புகள், போர்வைகள், சேர்ஜனின் கைகள் எல்லாமே அநேகமாக அசுத்தமானவையாக இருந்த ஒரு காலகட்டத்தின் உலகம் அது.

ஆனால் லிஸ்டர் தன் பணிகளை, ஆராய்ச்சிகளை, மாற்றங்களைத் தொடர்ந்தார். அவருடைய வோர்டில் தொத்து நோயினால் இறப்பு என்பது அரிதாகியது. கார்பலிக் அமிலத்தைத் தன் ஒப்பரேசன் தியேட்டரிலும் வோர்டிலும் ஸ்பிரே செய்து, கிருமிகளைக் கொல்லும் முறையைப் புகுத்தி செயற்படுத்தினார். மருத்துவரின் கரங்களும் ஆயுதங்களும் ஸ்டெரிலைஸ் செய்யப்படவேண்டும் என்று கட்டாயப்படுத்தினார்.

பாய்ஸ்ச்சர் குறிப்பிட்ட புளிக்கச்செய்யும் வாழும் கிருமிகளைக் கொல்லத் தனி மனிதனாக நின்றுபோரிட்டார். அவரது சகபாடிகள் அவரை, முட்டாள். அவரைப் பைத்தியம் என்று கேலி செய்தார்கள். ஆனால் அவரால் உயிர் பிழைத்தவர்கள், அவரைத் தெய்வமாகக் கருதி அன்பு செலுத்தினார்கள்.

(முற்றும்)

# இந்தவாரம் உங்கள் பலன்

(09.07.2015 தொடக்கம் 15.07.2015 வரை)

### மேடம்

பூர்வீகச் சொத்து சம்பந்தமாக வழக்கு விசயங்களில் எதிர்பார்த்த சாதகமான தீர்ப்புகள் கிடைக்கும். ஆலயத் தொண்டுகளிலும், பொது நலச் சேவைகளிலும் பிரியமுடன் ஈடுபட்டு நற் பெயர் எடுப்பீர்கள். உத்தியோகம் பார்ப்பவர்களுக்கு மேலதிகாரிகளுடன் மனக் கசப்புகளும் அவர்களால் பணி இட மாற்றமும் ஏற்படலாம். .தாய் வழி மாமன் மூலம் சில பிரச்சனைகள் வந்து சேரும்.சகோதர சகோதரிகளுடன் வீண் மன சஞ்சலங்களும் பிரச்சனைகளும் உருவாகும்.புதிய வீடு நிலம் வாங்குவதற்காக வங்கிகள் மூலமாக எதிர் பார்த்து இருந்த உதவித் தொகைகள் கிடைக்கும். பொதுவாக இது ஒரு நற் பலன் தரும் வாரமாகும்.

### துலாம்

சொத்து சம்பந்தமான வழக்கு விசயங்களில் பெரியவர்களின் உதவியால் நல்ல தீர்ப்புகள் கிடைக்கும். பொதுத்தொண்டுகளில் ஈடுபடுவோர்கள் மீது வீண் பழிச் சொல்லுக்கு ஆளாக இருப்பதால் கவனமுடன் செயற்படவும். யாத்திரையில் பெரிய மனிதர்கள், அரசியல்வாதிகள் மற்றும் உயரதிகாரிகளின் சந்திப்புக்களால் நன்மை அடைவீர்கள். உடல் நிலையில் கண், காதுகளில் கவனமுடன் இருந்து வரவும். நீண்டதூரப் பயணங்களைத் தள்ளிப்போடுதல் நல்லது. பெண்களால் தென் திசையில் இருந்து நல்ல செய்திகளுடன் பொருள் வரவுகள் உண்டாலாம். பொதுநலத் தொண்டுகளில் ஈடுபடுவோர்கள் மிகுந்த கவனமுடன் இருப்பது நல்லது.

### இடபம்

செய்தொழில் விசயங்களில் சற்று பொறுமையுடன் நடந்துகொள்வது நல்லது.நீண்ட காலமாகத் தடைப்பட்டு வந்த குலதெய்வ ஆலய வழிபாடுகளைச் செய்து வர எடுத்துக்கொண்ட முயற்சிகளில் வெற்றி பெறுவீர்கள். காதல் விசயங்களில் நல்ல செய்திகள் வந்துசேரும். உண்வு தானிய வியாபாரிகள் ஆகியோர்கள் நற்பலன் அடைவார்கள். வங்கிகளின் மூலம் எதிர்பார்த்து இருந்த பணம் கை வந்துசேரும். கணவன், மனைவி உறவுகள் சுமாராகக் காணப்படும். தந்தை, மகன் உறவுகளில் வெகுகாலமாக இருந்துவந்த பிரச்சினைகள் குறைந்து மனம் நிம்மதி அடைவீர்கள். கணவன், மனைவி உறவுகள் சுமாராகக் காணப்படும்.

### விருச்சிகம்

வேண்டாத விசயங்களில் தலையிட்டு வீண் சிக்கல்களில் மாட்டிக்கொண்டு மன நிம்மதியை இழக்காதீர்கள். குலதெய்வ ஆலய வழிபாடு செய்துவர எடுத்துக்கொண்ட முயற்சிகள் நிறைவேறும். நண்பர்களால் பொருள் நஷ்டமும் மனச்சஞ்சலமும் ஏற்படலாம். மாணவர்களுக்கு கல்விபயிலும் இடங்களில் அவப்பெயர்கள் வர இருப்பதால் எச்சரிக்கையுடன் கல்விபயிலுதல் நல்லது. வீடு மற்றும் தொழிற்சாலைகளைப் புதிய இடங்களுக்கு மாற்றுவதற்கான வாய்ப்புகள் உள்ளது. வராத நாட்பட்ட கடன்கொடுத்து இருந்த பணம் மற்றவர்களின் தலையிடுதலால் திரும்பக் கிடைக்கும். புதிய நண்பர்களின் சேர்க்கையால் மனமகிழ்ச்சி அடைவீர்கள்.

### மிதுனம்

மாமன்வழியின் மூலமாக எதிர்பாராத சில ஆதாயங்கள் அடைவீர்கள். மாணவர்களுக்கு கல்வியில் பரிசுகள் மற்றும் பாராட்டுக்களுடன் நல்ல மதிப்பெண்களையும் பெறுவார்கள். தாயின் உடல்நிலையில் இருந்து வந்த பாதிப்புகள் வெகுவாகக் குறைவதன்மூலம் மருத்துவச் செலவுகள் குறைய வாய்ப்பு உள்ளது. வெளிநாடு சென்றுவருவதற்கான முயற்சிகளில் மற்றவர்களிடம் இருந்து எதிர்பார்த்து இருந்த உதவிகள் கிடைக்கும். அண்டை அயல் வீட்டுக்காரர்களுடன் மிகக் கவனமாகப் பேசிப் பழகுதல் நல்லது. வெளிநாடு சென்றுவருவதற்கான புதிய முயற்சிகள் கைகூடும் காலமாகும்.

### தனுசு

வெகுகாலமாகக் காணாமற்போன பொருட்கள் மற்றும் நபர்கள் திரும்ப வீடு வந்துசேர வாய்ப்பு உள்ளது. சகோதர சகோதரகளின் திருமணம் போன்ற சுபகாரிய நிகழ்ச்சிகளுக்காக புதிய கடன்களை வாங்குவீர்கள். ஒரு சிலருக்குப் புதிய வீடு மாற்றம் ஏற்படலாம். நாள் வேலை இல்லாத படித்த இளைஞர்களுக்குப் புதிய வேலை வந்துசேரும் காலமாகும். வெகு காலமாகக் காணாமற்போன பொருட்கள் மற்றும் நபர்கள் திரும்ப வீடு வந்துசேர வாய்ப்பு உள்ளது. பழைய வழக்குகளில் சாதகமான நல்ல தீர்ப்புகள் கிடைக்க வாய்ப்பு உள்ளது. திருமணத்திற்காக புதிய கடன்களை வாங்குவீர்கள்.

### கடகம்

வெளிநாட்டில் வசிப்பவர்கள் தாய் நாடு சென்றுவர வாய்ப்பு உள்ள காலமாகும். தாயின் உடல்நிலையில் பாதிப்புகள் ஏற்பட்டு அவர்களால் மருத்துவச் செலவுகள் ஏற்படலாம். சமுதாய முன்னேற்றம் மற்றும் பொதுநலத் தொண்டுகளில் ஈடுபட்டு நற்பெயர் புகழ் அடைவீர்கள். காணாமற்போன பொட்கள் காவல்துறையினரின் உதவிகளால் திரும்பக் கிடைக்கும். தந்தையின் உடல்நிலையில் இருந்து வந்த பாதிப்புகள் சற்று குறையும். கணவன், மனைவி உறவுகள் நன்றாக இருக்கும். நீண்டகாலமாக வராமல் இருந்த கடன்கொடுத்த பணம் பொருட்கள் திரும்பக் கைக்கு வந்துசேரும்.

### மகரம்

யாத்திரையின் போது மிகுந்த கவனமுடன் சென்றுவருதல் சிறந்ததாகும். விடுபட்டுப் போன பழைய வழக்குகள் மீண்டும் தொடரும் காலமாகும். குடும்பச் சொத்துக்கில் இருந்துவந்த பிரச்சினைகள் இன்னும் சிறிது காலம் நீடிக்கும். வீடு மற்றும் வாகனங்களைப் பழுதுபார்த்தல்மூலம் புதிய கடன்கள் ஏற்படலாம். புதிய வீடு வாகனங்களை வாங்குவதற்கான முயற்சிகளில் இன்னும் சிறிது காலதாமதம் ஏற்படலாம். உத்தியோகத்துறையினருக்கு நினைத்த இடங்களில் பணி இடமாற்றமும் பதவி உயர்வுகளும் உண்டாகும். புதிய ஆடை மற்றும் ஆபரணங்களை வாங்க எண்ணிய எண்ணங்கள் நிறைவேறும்.

### சிங்கம்

உற்றார் உறவினர்களின் திடீர் வரவால் மனமகிழ்ச்சியும் பொருள்வரவும் உண்டாகும். நண்பர்களிடம் இருந்து எதிர் பார்த்து இருந்த பணஉதவிகள் கிடைக்கும். உடம்பில் வாயு மற்றும் காய்ச்சல் போன்ற உபாதைகள் வந்துபோகும். யாத்திரையின்போது வாகனங்களில் மிகுந்த கவனமுடன் பயணம் செய்துவரவும். மற்றவர்களை நம்பி பணம் மற்றும் பொருட்களை கடன் கொடுத்து ஏமாற்றம் அடையவேண்டாம். அரசியல்வாதிகளிடம் இருந்து எதிர்பார்த்த காரியங்கள் நிறைவேறும் காலமாகும். வீட்டைத் திருத்திக் கட்டி அலங்காரம் செய்வதில் மிகுந்த கவனம் செலுத்துவீர்கள். பழைய கடன்களை அடைத்துவிட்டுப் புதிய கடன்வாங்குவீர்கள்.

### கும்பம்

உடல்நிலையில் வாயு வாத சம்பந்தமான தொல்லைகள் வந்துபோகும். குழந்தைகளின் மனமகிழ்ச்சிக்காக நீண்டதூர உல்லாசப் பயணங்களை மேற்கொள்ளுவீர்கள். தந்தை, மகன் உறவுகளில் இருந்துவந்துள்ள மனக்கசப்புகள் குறைந்து ஒற்றுமையுடன் காணப்படுவார்கள். புதிய வீடு நிலம் போன்றவற்றை விலைக்கு வாங்கப்போட்ட திட்டம் நிறைவேறும் காலமாகும். வேலை இல்லாதவர்கள் புதிய வேலைவாய்ப்புகளுக்காக பணம் பொருட்களைக் கொடுத்து ஏமாற்றம் அடையவேண்டாம். புதிய கடன்கள் கொடுப்பதைத் தவிர்த்தல் நல்லதாகும். வரவேண்டிய பணம் கிடைக்க இன்னும் சற்று காலதாமதம் ஆகலாம்.

### கன்னி

நீண்டதூரப் பயணங்களின் மூலம் எதிர்பார்த்த காரியங்கள் நிறைவேறும் காலமாகும். வட்டித் தொழில் செய்வோர்கள் மிகவும் எச்சரிக்கையுடன் இருப்பது நல்லதாகும். விவசாயம் செய்வோர்கள் மிகுந்த கவனமுடன் இருப்பது நல்லது. தந்தைவழிப் பூர்வீகச் சொத்துக்கள் கைக்கு வந்துசேரும். உடம்பில் வாயு வயிறு போன்ற உபாதைகள் வந்துபோகலாம். வெளிநாட்டில் வசிப்பவர்கள் தாய்நாடு சென்று வருவார்கள். நண்பர்கள் உறவினர்களின் வீட்டுச் சுபகாரிய நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு மன மகிழ்ச்சி அடைவீர்கள். பூர்வீகச் சொத்துக்களில் இருந்துவந்த பிரச்சினைகள் தீர்ந்து சொத்துக்கள் வந்துசேரும்.

### மீனம்

பழைய வீடு மற்றும் வாகனங்களைப் புதுப்பித்தலுக்கான முயற்சிகளில் ஈடுபடுவீர்கள். ஆலய வழிபாடுகளுக்காக நீண்ட தூரப் பயணங்களை மேற்கொள்வதன்மூலம் மன நிம்மதி அடைவீர்கள். வெளிநாடுகள் சென்று வருதல் போன்ற விசயங்களில் கவனம் தேவை. தங்கம் வெள்ளி போன்ற உலோகப் பொருள் வியாபாரிகள், நெருப்பு இராணுவம், காவல்துறை சார்ந்தவர்கள், பூமி சம்பந்தமான நிலபுலன்களை வாங்குவோர் விற்போர்கள், தீயணைப்புத் துறைகளைச் சார்ந்தவர்கள், ஹோட்டல் தொழில் செய்வோர்கள், மசால் பவுடர் வியாபாரிகள், சிற்றுண்டி உணவுப் பொருட்களின் வியாபாரிகள் ஆகியோர்கள் நற்பலன்களை அடைவார்கள்.

Regd. as a News paper at the G.P.O.(QD/86/NEWS/2012)

## பாரம்பரியம்

மெக்சிக்கோவில் அதிக அறுவடைவேண்டி சான் பெட்ரோ நகர மேயர் பாரம்பரிய வழக்கப்படி முதலையைத் திருமணம் செய்துகொண்டார்.

தெற்கு மெக்சிக்கோவின் கடற்கரை நகரமான சான் பெட்ரோவில் அதிக மீனவர்கள் வசித்துவருகின்றனர். பெரும்பாலும் கடல் உணவு சார் தொழிலையே இந்நகர மக்கள் நம்பியிருக்கின்றனர்.

பழங்குடி மக்களான இவர்கள் ஒவ்வொரு ஆண்டும் தங்களுக்கு அதிக கடல் உணவுப் பொருட்கள் கிடைப்பதற்காக நகர மேயருக்கும் ஒரு முதலைக்கும் திருமணம் செய்துவைப்பது வழக்கம். இந்த ஆண்டும் வழக்கப்படி முதலை மணமகளை நகரமேயர் ஜோயல் திருமணம் செய்துகொண்டார்.

முன்னதாக அந்நகர பொதுமக்கள் மேளதாளத்துடன் முதலை மணமகளை ஊர்வலமாக எடுத்துச்சென்றனர்.





## கவர்ச்சி உணவகம்





சீனாவில் ஹோட்டல் ஒன்றில் வாடிக்கையாளர்களை கவர, உணவு பறிமாறும் ஊழியர்கள் கவர்ச்சி உடையில் பணிசெய்வது மிகுந்த வரவேற்பை பெற்றுள்ளது. சீனாவில் லியோனிங் மாகாணத்தில் உள்ள ஷென்யாங் நகரில் புதிதாக திறக்கப்பட்ட ஓட்டலில் வாடிக்கையாளர்களைக் கவர, நீச்சல் உடை அணிந்த அழகிகள் உணவு பறிமாற நியமிக்கப்பட்டுள்ளனர். குறித்த ஹோட்டலுக்கு சாப்பிட வந்தவர்கள், உணவுடன் இந்த கவர்ச்சி விருந்தையும் விரும்பியதாகவும் இதனால் ஹோட்டலுக்கு மிகுந்த வரவேற்பு கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் ஹோட்டல் நடத்தும் நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.

மேலும் கவர்ச்சியான கட்டழகு கொண்ட ஆண்களும் இப்பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

## ரயில் கார்



ரயில் தண்டவாளத்தில் பயணிக்கக் கூடிய வகை யிலான காரினைச் சொகுசு



கை இல்லாத பெண் காலால் விமானம் ஓட்டி சாதனை. பிறக்கும்போதே கைகள் இல்லாமல் பிறந்த அமெரிக்கப் பெண் கால்களால் விமானத்தை இயக்கி உலக சாதனை படைத்து பைலட்டுக்கான உரிமமும் பெற்றுள்ளார். அமெரிக்காவின் அரிசோனா மாகாணத்தைச் சேர்ந்தவர் ஜெசிகா காக்ஸ் (32). இவர் பிறவியிலேயே கைகள் இல்லாமல் பிறந்தார். கை மட்டுமே ஊனமான நிலையில், மனதில் தன்னம்பிக்கையோடு படித்து முடித்துள்ளார்.

கைகள் இல்லாமல் இருந்தாலும் மனதில் தன்னம்பிக்கை இருந்ததால், கால்களையோ கையாக மாற்றிக்கொண்டு, காலால் எழுதுவது, கணினியை இயக்குவது, தலையை சீவிக் கொள்வதுவரை எல்லாமே செய்ய பழகிக்கொண்டுள்ளார்.

தன்னைத்தானே பாதுகாத்துக்கொள்ள டேக் வான் டோ என்ற தற்காப்புக் கலைபயின்று 2 கறுப்பு பட்டைகளையும் பெற்றவர். நீச்சலிலும் முன்னணியில் திகழ்கிறார். கால்களால் கார் ஓட்டவும் பழகிக்கொண்டார். இந்த நிலையில்தான் அவருக்கு விமானம் ஓட்டவேண்டும் என்ற ஆசை பிறந்தது.





சீனாவில் ஹோட்டல் ஒன்றில் வாடிக்கையாளர்களை கவர, உணவு பறிமாறும் ஊழியர்கள் கவர்ச்சி உடையில் பணிசெய்வது மிகுந்த வரவேற்பை பெற்றுள்ளது. சீனாவில் லியோனிங் மாகாணத்தில் உள்ள ஷென்யாங் நகரில் புதிதாக திறக்கப்பட்ட ஓட்டலில் வாடிக்கையாளர்களைக் கவர, நீச்சல் உடை அணிந்த அழகிகள் உணவு பறிமாற நியமிக்கப்பட்டுள்ளனர். குறித்த ஹோட்டலுக்கு சாப்பிட வந்தவர்கள், உணவுடன் இந்த கவர்ச்சி விருந்தையும் விரும்பியதாகவும் இதனால் ஹோட்டலுக்கு மிகுந்த வரவேற்பு கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் ஹோட்டல் நடத்தும் நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.

மேலும் கவர்ச்சியான கட்டழகு கொண்ட ஆண்களும் இப்பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

## ரயில் கார்



ரயில் தண்டவாளத்தில் பயணிக்கக் கூடிய வகையிலான காரினைச் சொகுசு கார்களைத் தயாரிக்கும் Merced நிறுவனம் வடிவமைத்துள்ளது. நான்கு பேர் பயணிக்கக்கூடிய சிறிய ரயில்போன்று இருக்கும் இக்காருக்கு Smart for rail எனப் பெயரிடப்பட்டுள்ளது. இதில் தலா 80 கிலோக்கிராம் எடைகொண்ட நான்கு சில்லுகள் காணப்படுவதுடன் இவற்றில் ரயர் மற்றும் டியூப் இல்லாதவாறு முற்றிலும் இரும்பினால் உருவாக்கப்பட்டுள்ளன.

ஆறு மாத கடும் உழைப்பில் உருவாக்கப்பட்டுள்ள இக் காரானது எதிர்காலத்தில் இலகுவானதும் விரைவானது மான போக்குவரத்தில் பாரிய பங்களிப்பு வழங்குவதும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

கை இல்லாத பெண் காலால் விமானம் ஓட்டி சாதனை. பிறக்கும்போதே கைகள் இல்லாமல் பிறந்த அமெரிக்கப் பெண் கால்களால் விமானத்தை இயக்கி உலக சாதனை படைத்து பைலட்டுக்கான உரிமமும் பெற்றுள்ளார். அமெரிக்காவின் அரிசோனா மாகாணத்தைச் சேர்ந்தவர் ஜெசிகா காக்ஸ் (32). இவர் பிறவியிலேயே கைகள் இல்லாமல் பிறந்தார். கை மட்டுமே ஊனமான நிலையில், மனதில் தன்னம்பிக்கையோடு படித்து முடித்துள்ளார்.

கைகள் இல்லாமல் இருந்தாலும் மனதில் தன்னம்பிக்கை இருந்ததால், கால்களையே கையாக மாற்றிக்கொண்டு, காலால் எழுதுவது, கணினியை இயக்குவது, தலையை சீவிக் கொள்வதுவரை எல்லாமே செய்ய பழகிக்கொண்டுள்ளார்.

தன்னைத்தானே பாதுகாத்துக்கொள்ள டேக் வான் டோ என்ற தற்காப்புக் கலைபயின்று 2 கறுப்பு பட்டைகளையும் பெற்றவர். நீச்சலிலும் முன்னணியில் திகழ்கிறார். கால்களால் கார் ஓட்டவும் பழகிக்கொண்டார். இந்த நிலையில்தான் அவருக்கு விமானம் ஓட்டவேண்டும் என்ற ஆசை பிறந்தது. உடனடியாக அவர் டக்சன் நகரில் உள்ள விமான பயிற்சி மையத்திற்குச் சென்று தனது விருப்பத்தைக் கூறினார்.

கை இல்லாத பெண்ணால் எவ்வாறு விமானம் ஓட்ட முடியும் என்று வியந்த பயிற்சி நிறுவனம், அவர் தானே காரை ஓட்டிக் கொண்டுவந்தார் என்பதை அறிந்ததும் உடனடியாக அவருக்கு பயிற்சி அளிக்க முன்வந்தது. ஆனால் தற்போது இருக்கும் விமானங்கள் கால்களால் இயக்க வசதி இல்லாமல் இருந்ததால், 1945ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்ட குட்டி விமானத்தை ஜெசிகாவின் பயிற்சிக்கு பயன்படுத்த முடிவு செய்தனர்.

அதன்படி அந்த பழைய குட்டி விமானம் புதுப்பிக்கப்பட்டு ஜெசிகாவிற்கு கடந்த 3 ஆண்டுகளாக பயிற்சி அளிக்கப்பட்டது. பயிற்சி முடிந்து கடந்த வாரம்தான் அவருக்கு பைலட் உரிமம் வழங்கப்பட்டது.தற்போது ஆகாசத்தில் பறந்துகொண்டிருக்கிறார் ஜெசிகா காக்ஸ்.



## மனம் இருந்தால் மார்க்கம் உண்டு







இப்பத்திரிகை 373, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள அற்புதன் அச்சகத்தில் டீ.டீ என்டபிரைஸஸ் (பிரைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் ஜூலை 09 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

[illegible] News Paper in Sri lanka

இலவச இணைப்பு

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU


R.R.R Advertising

K.K.S வீதி இணுவில் எனும் முகவரியில் இயங்கிவந்த கிளை தற்போது இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதனை தெரிவிக்கின்றோம். 0785226818 எனும் இலக்கத்திற்கு தொடர்பு கொள்ளவும்.

முரசு - 05 திருவள்ளுவர் ஆண்டு 2046 ஆனி 24 வியாழக்கிழமை (09.07.2015) பக்கங்கள் IV ஓசை - 282

## கைதுகள் காரணமாக மக்கள் மத்தியில் குழப்பம்

### ஜனாதிபதிக்கு ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் கடிதம்



(கொழும்பு)

புனர்வாழ்வு பெறாதவர்கள் என்ற வகையில் முன்னாள் புலிகள் இயக்க உறுப்பினர்கள், அல்லது அவர்களுடன் சம்பந்தப்பட்டவர்கள் கைது செய்யப்படும் செயற்பாடுகள் அவ்வப்போது தொடர்ந்து இடம்பெறுகின்றன. இவ்வாறான கைதுகள் காரணமாக எமது மக்கள் மத்தியில் ஒருவிதமான குழப்பநிலை காணப்படுகின்றது என இவ்விடயம் தொடர்பில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு எழுதியுள்ள கடிதத்தில் சுட்டிக் காட்டியுள்ளார்.

மேலும் அக்கடிதத்தில், யுத்தம் முடிவுற்று நீண்ட

(IV) ஆம் பக்கம் பார்க்க

## இரு சுயேட்சைக் குழுக்கள் யாழில் கட்டுப்பணம்

நாடாளுமன்றத் தேர்தலில் யாழ் மாவட்டத்தில் போட்டியிடுவதற்காக நேற்று வரை ஆறு அரசியல் கட்சிகள் வேட்பு மனுத் தாக்கல் செய்வதற்கான விண்ணப்பப் படிவங்களை பெற்றுள்ளதுடன் மேலும், இரண்டு சுயேட்சை குழுக்கள் கட்டுப்பணத்தை செலுத்தியுள்ளதாக யாழ். மாவட்ட உதவித் தேர்தல் பணிமனை தகவல்கள் தெரிவிக்கின்றன.

எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள நாடாளுமன்ற தேர்தலில் போட்டியிடுவதற்காக வேட்பு மனுத்தாக்கல் செய்யும் கால எல்லை எதிர்வரும் 13 ஆம் திகதி நண்பகலுடன் முடிவடைகின்றது.

இந்தநிலையில் யாழ். தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடுவதற்காக ஆறு அரசியல் கட்சிகள் வேட்பு மனுத் தாக்கல் செய்வதற்கான விண்ணப்பப்படிவங்களை உதவித் தேர்தல் ஆணையாளர் பணிமனையில் பெற்றுள்ளன.

### வடமாகாண தேர்தல் களத்தில்

# கூட்டமைப்புக்கு எதிராக முத்தரப்பு கூட்டணி

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிரான முத்தரப்பு கூட்டணி ஒன்றை உருவாக்கும் முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் கொள்கை ரீதியான முரண்பாட்டை வெளிப்படுத்தி வரும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து போட்டியிட முனைந்து, அதற்கான வாய்ப்பு மறுக்கப்பட்ட ஜனநாயக போராளிகள் கட்சி மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் வேட்பாளர் பட்டியலில் இடமளிக்கப்படாத அதிருப்தியாளர்களைக் கொண்டே இந்த புதிய கூட்டணியை உருவாக்கும் முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

நாடாளுமன்றத் தேர்தலில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் போட்டியிட விண்ணப்பித்து, அதன் தலைமையால் நிராகரிக்கப்பட்ட வடக்கு மாகாணசபை உறுப்பினர் அனந்தி சசிதரனுடனும் இது தொடர்பாக கலந்துரையாடல்கள் நடத்தப்படுவதாகவும் கூறப்படுகிறது.

அதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் நடத்திய பேச்சுக்கள் தோல்வியடைந்த பின்னர், அடுத்த கட்டம் குறித்து ஜனநாயக போராளிகள் கட்சி இன்னமும் தமது நிலைப்பாட்டை அதிகாரபூர்வமாக வெளியிடவில்லை.

அதேவேளை, தமக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில்

(IV) ஆம் பக்கம் பார்க்க

## குருநாகல் மாவட்டத்தில் மகிந்த போட்டி

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ எதிர்வரும் பொதுத் தேர்தலில் குருநாகல் மாவட்டத்தில் போட்டியிட உள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

ஊவா பரணகம தொகுதி அமைப்பாளர் கூட்டத்தில் பங்கேற்ற போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷ நிச்சயமாக குருநாகல் மாவட்டத்தில் போட்டியிடுவார். நாளை வேட்பு மனுவில் கையொப்பமிடப்படும்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தொடர்பில் சில ஊடகங்கள் பிழையான தகவல்களை வெளியிட்டு வருவதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

## ஆகஸ்ட் 5,6 இல் தபால்மூல வாக்களிப்பு

(கொழும்பு)

நாடாளுமன்றத் தேர்தலில், அஞ்சல் மூல வாக்களிப்பு வரும் ஆகஸ்ட் மாதம் 5ஆம், 6ஆம். திகதிகளில் நடைபெறும் என்று தேர்தல்கள் திணைக்களம் நேற்று அறிவித்துள்ளது.

அதேவேளை, பாடசாலை ஆசிரியர்கள் எதிர்வரும் ஆகஸ்ட் 3 ஆம் திகதி அஞ்சல்மூலம் வாக்களிப்பை மேற்கொள்ளலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் பணிகளில் ஈடுபடும் அரச பணியாளர்கள் மற்றும் முப்படையினர், பொலிஸார் அஞ்சல் மூலம் வாக்களிக்க முடியும்.

அதற்கான விண்ணப்பங்களை தேர்தல் திணைக்களம் ஏற்கனவே கோரியிருப்பது குறிப்பிடத்தக்கது.

## கூட்டமைப்பிற்கு பங்கம் விளைவிக்கிறார் அனந்தி

### மாவை சீற்றம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண சபை உறுப்பினர் அனந்தி சசிதரன் எம்முடன் தொடர்ந்து இணைந்து செயற்படுவார் என்ற நம்பிக்கையில் அவர் மீது இதுவரை ஒழுக்க நடவடிக்கை எடுக்கப்படவிலலை. ஆனால் அவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும், அதன் உறுப்பினர்களுக்கும் பங்கம் விளைவிக்கும் வகையில் செயற்பட்டு வருகிறார் என இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம், மாட்டீன் வீதியிலுள்ள இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், அனந்தியை தமிழரசுக் கட்சியினூடாக மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட நாமே அனு

(IV) ஆம் பக்கம் பார்க்க

## இளம் பெண் வன்புணர்வு வழக்கில் இராணுவ வீரருக்கு பிடியாணை

(யாழ்ப்பாணம்)

கடந்த 2010 ஆம் ஆண்டு கிளிநொச்சியில் இளம்பெண் ஒருவர் பாலியல் வல்லுறவு செய்யப்பட்டதாகக் கூறப்படும் வழக்கில் குற்றஞ் சாட்டப்பட்டுள்ள 4 இராணுவ வீரர்களில் தலைமறைவாகியுள்ள இராணுவ வீரர் ஒருவருக்கு எதிராக யாழ். மேல் நீதிமன்றம் பிடியாணை உத்தரவு பிறப்பித்துள்ளது.

இந்த வழக்கின் நான்காவது எதிரியாகிய இராணுவ வீரர் தலைமறைவாகி வெளிநாட்டுக்கு ஓடியிருந்தால், சர்வதேச பொலிஸார் மூலமாக அவரைக் கைது செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியன்

(IV) ஆம் பக்கம் பார்க்க

## உயர்தரப் பரீட்சை அனுமதிப் பத்திரங்கள்

(கொழும்பு)

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் தோற்றும் பரீட்சார்த்திகளுக்கான அனுமதிப் பத்திரங்கள் தபால் மூலம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

மேலும், அனுமதிப்பத்திரங்கள் கிடைத்தவுடன் அவற்றை பரீட்சார்த்திகளுக்கு விநியோகிக்குமாறு பாடசாலை அதிபர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் டபிள்யூ.எம்.என். ஜே.புஸ்பகுமார தெரிவித்துள்ளார்.


அத்துடன் பரீட்சார்த்திகளின் நலன் கருதி உயர்தரப் பரீட்சை அனுமதிப் பத்திரங்களில் புதிதாக மூன்று பிரிவுகள் உள்ள

(IV) ஆம் பக்கம் பார்க்க

# நாடாளுமன்றத் தேர்தலில் வெல்பவர்கள் மக்களாகவே இருக்கவேண்டும்

## முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மு. சந்திரகுமார் தெரிவிப்பு





(இயக்கச்சி)

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றிபெறுபவர்கள் மக்களாக இருக்கவேண்டுமே தவிர தனி மனிதர்களின் வெற்றியாக அமையக்கூடாது என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் இயக்கச்சி கொற்றாண்டார் குளம் பகுதி மக்களுடன் கலந்துரையாடும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார் அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

முள்ளிவாய்க்கால் அவலங்களைத் தொடர்ந்து எமது மக்கள் நலன்புரி நிலையங்களில் வாழ்ந்த காலத்தில் அங்கு அவர்கள் பட்ட துயரங்களையும் இன்னல்களையும் நாம் பார்த்தோம் எனவே எமது மக்களின் துயரங்களை தீர்ப்பதற்காக மிகக் கடுமையாக உழைக்க வேண்டும் என நான் அன்று தீர்மானித்தேன் அதைத் தொடர்ந்து மக்களால் 2010 ஆம் ஆண்டு எனக்கு வழங்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி எனது மக்களுக்கு என்னால் இயலுமானவரை சேவையாற்றியிருக்கின்றேன். இருப்பினும் மக்களின் அனைத்து தேவைகளையும் நிவர்த்தி செய்து விட்டதாகவோ மக்களின் பிரச்சினைகள் அனைத்திற்கும் தீர்வு காணப்பட்டு விட்டதாகவோ நான் கருதவில்லை. இன்றும் மக்கள் பல தேவைகளுடன் வாழ்ந்துகொண்டிருக்கின்ற நிலைமையினை நாம் பார்க்கின்றோம். அவை அனைத்தையும் குறிப்பிட்ட காலத்திற்குள் நிறைவேற்ற முடியவில்லையே என நாம் ஆதங்கப்படுகின்றோம். எனவே தொடர்ந்து வரும் காலங்களிலும் மக்களுக்கான பணியை முன்னெடுக்க வேண்டிய கடப்பாடு எமக்குண்டு.

ஏனெனில் வேறு எந்த நாடாளுமன்ற உறுப்பினர்களும் கடந்த காலங்களில் துயரப்பட்ட எமது மக்களுக்கு ஆறுதலளிக்க முன்வரவில்லை அவர்கள் ஏதோ ஒருவகையில் மக்களின் வாக்குகளைப் பெற்றுக்கொண்டு அரியாசனம் ஏறிக் கொண்டார்களே தவிர மக்களின் துயர் துடைக்க முன்வரவில்லை. இன்று ஏற்படுத்தப்பட்டிருக்கின்ற மக்களின் முன்னேற்றங்களில் எவ்வித பங்களிப்பையும் அவர்கள் மேற்கொள்ளவில்லை என்பதை மக்களே நன்கு அறிவர். ஏனெனில் நாம் தனித்து நின்று பல சாவால்களையும் எதிர்கொண்டு மேற்கொண்டு வந்த வேலைத் திட்டங்களோடு அவர்களும் இணைந்து மக்களுக்கான பணியை முன்னெடுத்திருப்பார்களேயானால் இன்று மேலுமொரு முன்னேற்றத்தை மக்கள் எட்டியிருப்பார்கள் எனத் தெரிவித்ததோடு,

எனவே மக்கள் தமக்காக சேவையாற்றுகின்றவர்களை இனம்கண்டு வாக்களிக்க வேண்டும். அதாவது மக்கள் தமது வெற்றிக்காக வாக்களிக்க வேண்டும் எனவும் குறிப்பிட்டதோடு,

நாம் எமது மக்கள் தமது சொந்தமண்ணில் வாழ்ந்து கொண்டு எமது இனத்தின் கலை கலாசார பாரம்பரியங்களைப்பேணி தாய்மொழியையும் பாதுகாக்கின்ற செயற்பாடுகளையே முன்னெடுத்து வருகின்றோம். எனவே மக்கள் எதிர்வரும் தேர்தல் காலத்தில் மிகத் தெளிவாக சிந்திக்கவேண்டியவர்களாக உள்ளனர் இதில் மக்கள் தமது வெற்றிக்கே முன்னுரிமைவழங்கவேண்டும் அதற்காக மக்களுக்காக சேவையாற்றக்கூடியவர்களைத் தெரிவு செய்ய வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இக்கலந்துரையாடலில் பச்சிலைப்பள்ளி பிரதேசசபை உறுப்பினர் அன்ரன் அன்பழகன் மற்றும் கிராம மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகளும் மக்களும் கலந்துகொண்டனர்.

# றமழான் சிந்தனை



**எவர் றமழானில் நம்பிக்கையுடன் நன்மையை எதிர்பார்த்து தொழுது வணங்குகிறாரோ அவர் அதற்கு முன் செய்த பாவங்கள் மன்னிக்கப்படும்.**

**நூல் - புகாரி**

**ஸஹர் முடிவு அதிகாலை 4.28**
**நோன்பு திறக்கும் நேரம் மாலை 6.38**

(105)

# உள்ளூர் உற்பத்திகள் மூலம் உலகச் சந்தையை அடைந்தவர் நடராஜா

## இரங்கல் செய்தியில் வணிகர் கழகத் தலைவர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

ஐம்பது வருடங்களுக்கும் மேலாக எமது மண்ணில் அயராது உழைத்ததுடன் உள்ளூர் உற்பத்திகள் மூலம் சர்வதேச தரத்திற்குச் செல்ல முடியும் என்று நிரூபித்த உத்தமர் அண்ணா நடராஜா எம்மை விட்டு பிரிந்து விட்டார் எனும் செய்தி யாழ். வணிகர் கழகத்தை துயரடைய வைத்திருக்கிறது என வணிகர் கழகத் தலைவர் இ. ஜெயசேகரன் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சாதாரண துவிச்சக்கர வண்டியுடன் ஆரம்பித்த அவரது தொழில் முயற்சிகள் அவரது கடும் உழைப்பினால் போர்க்கால சூழல்களைக்கூட கடந்து நிலைத்து நின்றமையை அனைவருமே அறிவர். அவரது சலியாத உழைப்பு எம்மை மெய்சிலிக்கச் செய்தது. எம்மிடையே தொழில் துறைகளில் ஒரு வழிகாட்டியாக வாழ்ந்த அவர் பல நூற்றுக் கணக்கானவர்களுக்கு வேலை வாய்ப்புக்களை வழங்கியமை மட்டுமன்றி முழுக்க முழுக்க உள்ளூர் உற்பத்திகளுடன் சர்வதேச தரத்திற்கும் நாம் உயர முடியும் என நிரூபித்துள்ளார். ஒப்பாரும் மிக்காரும் இன்றி எமது மண்ணில் தொழில் துறையில் வெற்றிக் கொடி நாட்டிய அன்னார் போரினால் ஏதிலிகளாகிய பொதுமக்களுக்கும் ஆற்றிய பணிகளினால் எமது மண்ணே பெருமை அடைந்தது.

அன்னார் மறைந்தபோதும் அவரால் நிறுவப்பட்ட தொழில் துறைகள் மேலும் உன்னத வளர்ச்சி அடையும் என்று நம்புவதுடன் அன்னாரின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றோம் என அவ்விரங்கல் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சிறுகதைத் தொகுதி வெளியீடு

(யாழ்ப்பாணம்)

எழுத்தாளர் கே.ஆர்.டேவிட் எழுதிய "நீரில் கிழித்த கோடுகள்" சிறுகதைத் தொகுதி வெளியீட்டு விழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை 12ஆம் திகதி மாலை 3.00 மணிக்கு யாழ்.கே.கே.எஸ். வீதியில் அமைந்துள்ள (மனோகரா தியேட்டர் சந்தி) ஏ.எஸ். ஆர். கலாசார மண்டபத்தில் பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா தலைமையில் இடம்பெறவுள்ளது.

நூல் வெளியீட்டுரையை யாழ். கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் எம். இராசநாயகன், மதிப்பீட்டுரையை யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் ஈ.குமரன், ஆய்வுரையை யாழ். பல்கலைக்கழக சமூகவியற்றுறை சிரேஷ்ட விரிவுரையாளர் இ.இராஜேஸ்கண்ணன், சிறப்புரையை பேராசிரியர் என்.சண்முகலிங்கன் (யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர்) ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

நூலின் முதற்பிரதியை டாக்டர் திருமதி புஸ்பராணி லியோன், சிறப்புப் பிரதிகளை திருமதி சுபோதினி ஜனகன், திருமதி ஜாவண்யா ஜனார்த்தனன் ஆகியோர் பெற்றுக்கொள்ளவுள்ளனர். (105)




இலண்டனில் அண்மையில் இடம்பெற்ற ஐக்கிய இராச்சியத் தமிழ் பாடசாலைகளின் விளையாட்டுச் சங்கத்தின் 23ஆவது உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவத் துறை ஓய்வு நிலை பேராசிரியர் எம். நடராஜா சுந்தரம் உரையாற்றுவதையும், விளையாட்டு வீரர்கள் பரிசில்களைப் பெற்றுக்கொள்வதையும் காணலாம். (01)

# பாடசாலைகள் சுற்றுநிருபத்திற்கு மாறாக மாணவர்களை அதிகமாக சேர்க்கக்கூடாது

## யாழ். மத்திய கல்லூரி அதிபர் எழில்வேந்தன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். நகர பிரபல பாடசாலைகளில் கல்வி அமைச்சின் சுற்றுநிருபத்திற்கு மாறாக முறையற்ற விதத்தில் மேலதிக மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவதால் யாழ். மாவட்டத்தின் ஏனைய பாடசாலைகளின் மாணவர் எண்ணிக்கை குறைவடைந்து செல்வதுடன், கல்விச் செயற்பாட்டிலும் வீழ்ச்சி ஏற்பட்டு வருகின்றது என யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அதிபர் எஸ்.கே. எழில்வேந்தன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் மாணவர்களின் பெற்றோர்களுடனான சந்திப்பு நிகழ்வு நேற்று முன்தினம் கல்லூரியின் தம்பர் மண்டபத்தில் இடம்பெற்ற போது அந்நிகழ்வில் கலந்து கொண்டு உரை நிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்,

பிரபல பாடசாலைகளில் வரையறுக்கப்பட்ட அளவிற்கு அதிகமாக மாணவர்களினை சேர்த்துக்கொள்வதனால் எமது பாடசாலை பிரபல பாடசாலையாகவும் தேசியப் பாடசாலையாகவும் விளங்குகின்ற போதிலும் மாணவர்களின் எண்ணிக்கை குறைவடைந்து செல்கின்றது.

கடந்த வருடம் தரம் 1, தரம் 6 வகுப்புகளில் மாணவர்களின் விண்ணப்ப எண்ணிக்கை குறைவடைந்து காணப்பட்டது. இவ்வாறான செயற்பாடு எதிர்காலத்தில் தேசியப் பாடசாலையின் தரத்தினைக் குறைக்கும் செயற்பாடாகவே அமைகின்றது.

இவ்விடயம் தொடர்பாக வடமாகாண கல்வி அமைச்சுக்கும் கல்வித் திணைக்களத்திற்கும் பாதிக்கப்படுகின்ற பாடசாலை சமூகங்களினால் கோரிக்கைகள் விடுத்த போதிலும் இதுவரை எவ்வித நடவடிக்கைகளையும் வடமாகாண கல்வி அமைச்சு எடுக்கவில்லை.

குறித்த பாடசாலைகளுக்காக மாணவர்கள் எண்ணிக்கை வரையறுக்கப்படவேண்டும். மேலதிகமாக அனுமதியின்றி சேர்கப்படும் பாடசாலைகள் மீது உடன் நடவடிக்கையினை மேற்கொண்டு மேலதிக மாணவர்களை வெளியேற்றி வேறுபாடசாலைகளில் கற்பதற்கு சந்தர்ப்பம் வழங்க வேண்டும்.

அனைத்துப் பாடசாலைகளிலும் வளம் மிக்க தேர்ச்சி பெற்ற ஆசிரியர்கள் இருக்கிறார்கள். இக்கோரிக்கைக்கு அமைவாக தேவைக்கு மேலதிகமாக சேர்க்கப்படும் மாணவர்கள் இடைநிறுத்தப்பட வேண்டும்.

இவ்விடயம் தொடர்பாக எமது பாடசாலையின் பழைய மாணவனும் கல்வி அமைச்சின் ஆலோசகருமாகிய கலாநிதி எதிர்வீரசிங்கத்திடம் எடுத்துக் கூறிய போது இவ்விடயம் தொடர்பாக அமைச்சுக்கு எடுத்துக்கூறியதாகவும் இனிவரும் ஆண்டுகளில் நடைபெறாது என்றும் தெரிவித்திருந்தார்.

குறித்த பாடசாலை ஒன்றில் திணைக்களத்தின் அனுமதி இன்றி மாணவர்கள் மேலதிகமாக இணைத்துக்கொள்ளப் படுகின்றார்கள். திணைக்களம் இதனைத் தடைசெய்ய வேண்டும். இதன் காரணமாக நகரத்தில் உள்ள ஏனைய பிரபல பாடசாலைகளின் மாணவர்களின் எண்ணிக்கையும் சடுதியாக குறைவடைந்து கொண்டு செல்கின்றது.

மாணவர் கல்வி கற்பதற்கான போதிய வளங்கள் நிறைந்து காணப்படுகின்றன. எமது பாடசாலையில் நான்கு வகுப்பறைகளில் அனுமதிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை குறைவடைந்து காணப்படுகின்றது.


இது தொடர்பாக கடந்த வருடம் வடமாகாண கல்வி அமைச்சுடன் தொடர்பு கொண்ட போது இது தங்களுடைய கட்டுப்பாட்டை மீறியதாக காணப்படுகின்றது எனத் தெரிவித்திருந்தார்கள்.

புதிய கல்வி அமைச்சின் செயலாளர் இவ்விடயம் தொடர்பாக தீர்வு காண்பார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

குறித்த பாடசாலையொன்று புலமைப்பரிசில் வகுப்புக்களில் தேவைக்கு மேலதிகமாக மாணவர்களினை அனுதியின்றி இணைத்துக் கொண்டுள்ளமையினால் எமது பாடசாலைகள் போன்று பிற பாடசாலைகளிலும் புலமைப்பரிசில் மாணவர்களின் எண்ணிக்கை குறைவடைகின்றது.

இது தொடர்பாக வடமாகாண கல்வியமைச்சு நடவடிக்கை எடுக்க வேண்டும். ஒரு வகுப்பில் கற்கும் மாணவர்களின் எண்ணிக்கை வரையறுக்கப்படவேண்டும். தேவைக்கு மேலதிகமாக பாடசாலை வளங்களுக்கு மேலதிகமாக அனுமதியின்றி மாணவர்களினை இணைத்துக்கொள்ளும் செய்ற்பாடு உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். எனவும் தெரிவித்தர். (63)


# இரத்ததான நிகழ்வு



கிளிநொச்சி மாவட்ட செயலக ஊழியர்களினால் இரத்ததான முகாம் ஒன்று நேற்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

கிளிநொச்சி மாவட்ட செயலக கட்டடத் தொகுதியில் இரத்ததான முகாமில் அதிகளவான ஊழியர்கள் பங்கு கொண்டு இரத்ததானம் மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும். (29)

# இருவரைக் காணவில்லை



கடந்த ஒரு வருடமாக உடுவில் மானிப்பாய் வீதியில் வசிக்கும் இளம் குடும்பஸ்தரான பிறேம்குமார் நிந்துஜன் (வயது - 30) மற்றும் அவருடைய மகன் நிந்துஜன் தரணிகன் (வயது - 3) ஆகியோர் காணாமற் போயுள்ளார்கள்.

இவர்கள் காணாமற் போனமை சம்பந்தமாக சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் அவருடைய மனைவியினால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. ஆனாலும் இது வரையில் இவர் சம்பந்தமான எந்தவொரு தகவலும் இது வரையில் கிடைக்கப் பெறாத நிலையில் இவர்கள் சம்பந்தமான விபரங்களை தந்துதவும்படி சுன்னாகம் பொலிஸாரினால் பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இவர்கள் சம்பந்தமான தகவல் தெரிந்தவர்கள் சுன்னாகம் பொலிஸ் நிலைய தொலைபேசி இலக்கம் 0212240323 அல்லது பொறுப்பதிகாரி 0774673943 தொலைபேசியுடனோ தொடர்பு கொள்ளும்படி வேண்டப்பட்டுள்ளது.


# இலவச வைத்திய முகாம்

சர்வதேச லயன்ஸ் கழகம் மற்றும் சங்கானை லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம், வேலணைப் பகுதிகளில் இல்வச மருத்துவ முகாம் ஒன்றினை நாளை காலை 9.00 மணி தொடக்கம் மதியம் 1.00 மணி வரை வேலணை துறையூர் ஐயனார் சனசமூக நிலையத்தில் நடாத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தீவக பிராந்திய சுகாதார மருத்துவப் பணிப்பாளர் லயன். டாக்டர் குணதாசனின் விசேட வழிகாட்டலில் சங்கானை லயன்ஸ் கழகத்தின் இயக்குநர் லயன் டாக்டர் க.ஜெயச்சந்திரமூர்த்தி மேற்பார்வையில் இடம்பெறும் இந்த மருத்துவ முகாமில் வேலணைப் பிரதேச மருத்துவர்கள், குறிப்பாக யாழ்ப்பாணம் சித்த மருத்துவபீடத்தின் மருத்துவப் பயிற்சிகளை நிறைவு செய்த மருத்துவர்கள் எனப் பலரும் கலந்து கொள்கின்றனர்.

இந்த இலவச மருத்துவ முகாமில் நீரிழிவு நோய் தொடர்பான பரிசோதனை, தோல், சுவாசம் சம்பந்தமான சிகிச்சைகள், முடி உதிர்தல், போன்ற பல்வேறு நோய்களுக்கான சிகிச்சைகள் இடம்பெறும் என சங்கானை லயன்ஸ் கழகத்தின் தலைவர் லயன் ஜெ.றஜீவன் அறிவித்துள்ளார். (05)

# கிளிநொச்சியில் கண்காட்சி



(கிளிநொச்சி)

தமிழர்களின் பாரம்பரிய விவசாயப் பொருட்களை காட்சிப் படுத்தும் பொருட்டு நேற்று கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் பாரம்பரிய விவசாய பொருட்கள் சில கையளிக்கப்பட்டன.

குறித்த நிகழ்வு மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது. குறித்த பொருட்கள் மாவட்ட மரபுரிமைகள் கலைக்கூடத்தில் காட்சிக்காக வைக்கப்படவுள்ளது. கிளிநொச்சி மாவட்டத்தில் தமிழர்களின் மரபுரிமைகளை வெளிக்காட்டும் வகையில் மாவட்ட செயலகத்தில் உருவாக்கப்பட்ட மாவட்ட மரபுரிமைகள் கலைக்கூடத்தில், கிளிநொச்சி மாவட்டத்தின் அடையாளச் சின்னங்கள், பாரம்பரிய பொருட்கள், தொல்பொருள் எச்சங்கள் காட்சிப்படுத்தும் வகையில் குறித்த மரபுரிமைகள் கலைக்கூடம் அமைக்கப்பட்டுள்ளது.

இக்கலைக்கூடம் மாணவர்கள், ஆர்வலர்கள் பார்வையிடக் கூடிய வகையில் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (29)

# கிளிநொச்சியில் நீர் விநியோகத் திட்டம் ஓராண்டு கடந்தும் நிறைவடையவில்லை

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையால் 1,620 மில்லியன் ரூபா செலவில் ஆரம்பிக்கப்பட்ட குடிநீர் விநியோகத்திட்டம் கடந்த ஆண்டு பூர்த்தி செய்யப்பட வேண்டிய நிலையில் இன்னும் பூர்த்தி செய்யப்படவில்லை.

இத்திட்டம் கரைச்சி, கண்டாவளை பிரதேச செயலகங்களின் 20 கிராம சேவகர் பிரிவுகளின் கீழ் உள்ள 40,000 மக்கள் சுத்தமான குடிநீரைப் பெறுவதற்காக ஆரம்பிக்கப்பட்டது.

இது தொடர்பாக நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையினரை தொடர்பு கொண்டு கேட்ட போது,

கரைச்சி இரத்தினபுரம் பகுதியிலும், கண்டாவளை குமரபுரம் பகுதியிலும் இரண்டு பாரிய நீர்த் தாங்கிகள் அமைக்கும் பணிகள் பூர்த்தியடைந்துள்ளன. அதே போன்று நீர் சுத்திகரிப்பு நிலைய பணிகளும் பூர்த்தியடைந்துள்ளன. எனினும் குழாய் பொருத்தும் பணிகள் பூர்த்தியடையவில்லை என்றனர்.

ஏனெனில், வெடிபொருட்களின் அபாயம் காணப்படுகிறது. வெடிபொருட்கள் இன்னமும் முழுமையாக அகற்றப்படாமையால் குழாய் பொருத்தும் பணிகளை பூர்த்தி செய்யமுடியவில்லை. ஏற்கனவே குழாய் பொருத்தும் நடவடிக்கையில் ஈடுபட்ட போது கிளிநொச்சி பொலிஸ் நிலையத்துக்கு முன்னுள்ள பகுதியிலும், பரந்தன் கரடிப்போக்கு சந்தியிலும் வெடி பொருட்கள் மீட்கப்பட்டன.

ஜப்பான் மற்றும் அரசாங்கத்தின் நிதியுதவியுடன் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதுடன், இத்திட்டத்துக்காக ஒதுக்கப்பட்ட நிதி திரும்பிச் செல்லவில்லை எனவும் வெடி பொருட்களின் அச்சம் தீர்க்கப்பட்டால் பணிகள் பூர்த்திசெய்யப்படும் எனவும் தெரிவித்தனர்.

# வளப்பற்றாக்குறைகளுடன் மாங்குளம் வைத்தியசாலை

முல்லைத்தீவு, மாங்குளம் வைத்தியசாலை பெரும் வளப்பற்றாக்குறையுடன் இயங்கி வருவதாகவும் வைத்தியசாலையின் தேவைகளைப் பூர்த்தி செய்து மக்களின் பிரச்சினைக்கு தீர்வு பெற்றுத்தருமாறு உரிய அதிகாரிகளிடம், பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள மாங்குளம் ஆதார வைத்தியசாலையானது முல்லைத்தீவு மாவட்டத்தின் பிரதான வைத்தியசாலையாக காணப்படுகின்றது.

ஒலுமடு, பெரியபுளியங்குளம், அம்பகாமம், புலுமச்சிநாதகுளம், மாங்குளம், கருப்பட்டமுறிப்பு, மேளிவனம், கற்கிடங்கு, கிழவன் குளம், பனிக்கன்குளம், கொம்டி;வைத்தகுளம், பாலைப்பாணி, வன்னிவிளாங்குளம் உள்ளிட்ட கிராமங்களைச் சேர்ந்த சுமார் பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள், தங்களது மருத்துவ தேவைகளை இவ்வைத்தியசாலையினூடாகவே நிறைவு செய்கின்றனர்.

இவ்வைத்தியசாலை அவசர சிகிச்சைப்பிரிவு, மகப்பேற்று விடுதி, ஆய்வுகூட வசதிகள் எவையும் இல்லாதிருப்பதால்இப்பகுதி மக்கள் தமக்கான மருத்துவ தேவையை நிறைவு செய்வதற்கு வவுனியா அல்லது கிளிநொச்சி வைத்தியசாலைகளுக்கு செல்ல வேண்டிய நிலை காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# உயர் நீதிமன்ற நீதிபதிக்கு சாதகமாக கல்கிசை மாஜிஸ்ட்ரேட் செயற்பட்டார்

## சட்டமா அதிபர் நீதிமன்றில் தெரிவிப்பு

(கொழும்பு)

பணிப்பெண்ணை தாக்கியதாக குற்றம்சாட்டப்பட்டுள்ள உச்சநீதிமன்ற நீதிபதி சரத் டி ஆப்ருவுக்கு பிணை வழங்கும் போது, கல்கிசை மாஜிஸ்ட்ரேட் ஆப்ருவுக்கு சாதகமாகச் செயற்பட்டுள்ளதாக சட்ட மா அதிபர் நேற்று உச்ச நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

தனக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டு வரும் பொலிஸ் விசாரணைகளைத் தடைசெய்யக் கோரி, நீதிபதி சரத் ஆப்ரு சமர்ப்பித்துள்ள அடிப்படை உரிமை மீறல் மனு நேற்று உச்ச நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்த போது, அரச தரப்பு வழக்கறிஞர் இதனைத் தெரிவித்தார்.

மேலும், நீதிபதி ஆப்ரு சம்பந்தமாக கல்கிசை மாஜிஸ்ட்ரேட் நேற்று முன்தினம் வழங்கிய உத்தரவுகள் சட்டத்திற்கு மாறானதென்றும் சட்ட மா அதிபர் கூறினார்.

இவ்வாறான செயல்களின் மூலம் தவறுசெய்யும் நீதிபதிகளுக்கு சட்டத்தின் முன் விசேட சலுகைகள் வழங்கப்படுகிறது என்ற தவறான உணர்வு மக்களுக்கு ஏற்படுவதற்கு வாய்ப்புக்கள் இருப்பதாகவும் அரச தரப்பு வழக்கறிஞர் தெரிவித்தார்.

எனவே, கல்கிசை மாஜிஸ்ட்ரேட் நீதிமன்றத்தில் இருக்கும் நீதிபதி ஆப்ருவிற்கு எதிரான வழக்கின் ஆவணங்களைக் கோரிப்பெற்று, விசாரணை மேற்கொள்ள வேண்டுமென உச்ச நீதிமன்றத்திடம் அரசுத் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோள் விடுத்தார்.

அந்த வேண்டுகோளை ஏற்றுக் கொண்ட நீதிபதிகள், கல்கிசை மஜிஸ்ட்ரேட் நீதிமன்ற விசாரணைகளின் பதிவுகளை உச்ச நீதிமன்றத்திடம் சமர்ப்பிக்குமாறு அந்த நீதிமன்றத்தின் பதிவாளருக்கு உத்தரவிட்டனர். அதன் பின்னர் வழக்கு விசாரணைகளை எதிர்வரும் 14ஆம் திகதி வரை ஒத்திவைத்த நீதிபதிகள், அன்றைய தினம் இந்த வழக்கை விசாரணை செய்வதற்கு நீதிபதிகளின் குழுவொன்றை நியமிக்குமாறு தலைமை நீதிபதியிடம் வேண்டுகோள் விடுத்தனர்.

# பந்து தாக்கி லண்டனில் மரணமான பாவலனின் உடலை கொண்டுவர ஏற்பாடு

கிரிக்கெட் போட்டியின் போது பந்து தாக்கியதில் லண்டனில் மரணமான யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பத்மநாதன் பாவலனின் பூதவுடலை இலங்கைக்கு கொண்டுவருவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எதிர்வரும் வாரத்தில் அவரது பூதவுடலை யாழ்ப்பாணம் - பருத்தித்துறையிலுள்ள அவரது இல்லத்துக்கு எடுத்து வருவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவரது உறவினர்கள் தெரிவித்தனர்.

லண்டன் சர்ரே பகுதியிலுள்ள ரீகிரியேஷன் மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை பிரித்தானிய தமிழர் கிரிக்கெட் சம்மேளனம் நடாத்திய கிரிக்கெட் போட்டித் தொடரில், மானிப்பாய் பரிஷ் விளை யாட்டுக் கழக அணியில்பாவலன் பங்கேற்றிருந்தார். பாவலன் பெற்ற கிண்ணங்கள் மற்றும் பதக்கங்கள் எதிரணியினர் வீசிய பந்து அவரது நெஞ்சுப் பகுதியைத் தாக்கியதால் அவ்விடத்திலேயே அவர் உயிரிழந்தார். பாவலனைக் காப்பாற்ற மைதானத்துக்கு விரைந்த மருத்துவர்கள் கடுமையாக முயற்சிகள் எடுத்த போதும் அவை பலனளிக்கவில்லை.

உயிரிழந்த பத்மநாதன் பாவலன் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் பழையமாணவர் ஆவார். அவர் 2001ஆம் ஆண்டு முதல் 2009ஆம் ஆண்டு வரை ஹாட்லிக் கல்லூரியில் கல்வி பயின்றுள்ளார். உயர்தரத்தில் கணித்துறையில் கல்வி பயின்றார். பாடசாலைக் காலத்தில் கிரிக்கெட் அணியிலும், சதுரங்க அணியிலும் பங்கேற்று பாடசாலைக்கு பல வெற்றிகளைத் பெற்றுக் கொடுத்துள்ளார்.

இவரது காலத்தில் சதுரங்க போட்டியில் நாட்டப்பட்ட வெற்றி இன்று வரை முறியடிக்கப்படவில்லை என பாசாலையின் அதிபர் தர்மலிங்கம் முகுந்தன் தெரிவிக்கின்றார். பாடசாலை கல்விக்குப் பினனர் பாவலன் 2010 இல் லண்டனுக்குச் சென்றார். அவரது தந்தையார் 1997 இல் நோய் காரணமாக உயிரிழந்திருந்தார். தாயாரும் ஒரு சகோதரியும், ஒரு சகோதரனும் பருத்தித்துறையில் வசித்து வருகின்றனர்

# கடற்பாசி வளர்ப்பு அறிமுக விழா

(வேலணை)

கடற்பாசி வளர்ப்புத் திட்ட அறிமுக விழா இன்றைய தினம் காலை 10.00 மணியளவில் நயினாதீவில் அமைந்துள்ள பொது நோக்கு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இவ் அறிமுகவிழாவில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ப. செ சந்தில்நந்தன் கலந்து கொள்வதோடு, சிறப்பு விருந்தினர்களாக இலங்கைக்கான யூ.எனி.டி.பி. நிறுவனத்தினது திட்ட உதவிப் பணிப்பாளர் இரசேந்திரகுமார், கணேசர கலந்து கொள்கின்றனர். மற்றும் யாழ். செயலகத்தைச் சேர்ந்த திட்டப் பணிப்பாளர் இ. மோகனேஸ்வரன் எனப் பலரும் கலந்து கொள்ளவுள்ளனர். மேற்படி இவ் அறிமுக விழாவில் வைத்து கடற்பாசி வளர்ப்புக்கான உள்ளீட்டுகள் அனைத்தும் பயனாளிகளுக்கு வழங்கப்படவுள்ளனர். (05)

# விளக்க மறியல்

யாழ்ப்பாணம் நீதிமன்றக் கட்டடத் தொகுதி மீதான தாக்குலுடன் சம்பந்தப்பட்ட மற்றொரு சந்தேகநபரை எதிர்வரும் 10ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு யாழ். நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. பெரியவிளான், இளவாலையைச் சொந்த முகவரியாகவும், ஏழாலை வடக்கு, ஏழாலையை தற்காலிக முகவரியாகவும் கொண்ட ஒருவரே இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். காணொளி ஆதாரங்களுடன் குறித்த சந்தேக நபரைக் கைதுசெய்துள்ளனர் என யாழ்ப்பாணம் பொலிஸார் நீதிமன்றில் தெரிவித்துள்ளனர்.

அதற்கமைய குறித்த சந்தேக நபரை எதிர்வரும் 10 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் பெ.சிவகுமார் உத்தரவிட்டுள்ளார். இதேவேளை, யாழ். நீதிவான் நீதிமன்றில் குறித்த வழக்குத் தொடர்பாக நாளை 10ஆம் திகதி 37 சந்தேக நபர்கள் முற்படுத்தப்படவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

### உயர்தரப்...

டக்கப்பட்டுள்ளன.

இதற்கமைய பரீட்சார்த்திகளின் தேசிய அடையாள அட்டை இலக்கம், பாடப் பிரிவு மற்றும் பரீட்சை நிலைய இலக்கம் என்பன அனுமதிப் பத்திரத்தில் புதிதாக உள்ளடக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை ஆகஸ்ட் மாதம் 4 ஆம் திகதி தொடக்கம் 13 ஆம் திகதி வரையும் தொடர்ந்து ஆகஸ்ட் 24ஆம் திகதி தொடக்கம் செப்ரெம்பர் 8 ஆம் திகதி வரையும் நடைபெறவுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இம்முறை பரீட்சையில் மூன்று இலட்சத்து ஒன்பதா யிரத்து 69 பேர் தோற்ற வுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

### கூட்டமைப்புக்கு...

போட்டியிட வாய்ப்பு மறுக்கப்பட்டு விட்டதை வடக்கு மாகாணசபை உறுப்பினர் அனந்தி சசிதரன் உறுதிப்படுத்தியுள்ளார்.

தமிழரசுக் கட்சியின் சார்பில் போட்டியிட அனுமதி கிடைக்காத நிலையில், யாழ். மாவட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சிக்கு ஒதுக்கப்பட்ட இரண்டு இடங்களில் ஒன்றை வழங்க முன்வந்த போதும், அதற்கும் மாவை சேனாதிராசா தடை ஏற்படுத்தி விட்டதாக அனந்தி குற்றம்சாட்டியுள்ளார்.

எனினும், அவர் தாம் நாடாளுமன்றத் தேர்தலில் வேறு கட்சி சார்பில் போட்டியிடுவாரா என்பது குறித்து அதிகாரபூர்வமாக எந்தக் கருத்தையும் வெளியிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

### கைதுகள்...

காலம் கடந்த நிலையில் இவ்வாறான கைதுகள் இடம்பெறும் போது எமது மக்கள் மத்தியிலே ஏற்படக்கூடிய பதற்றம், சந்தேகம், அச்சம் என்பன தங்களால் பெரு முயற்சியுடன் கட்டியெழுப்பப்பட்டு வரும் தேசிய நல்லிணக்க முயற்சியில் பாரிய இடைவெளியை உருவாக்கும் வகையில் அமைந்து விடுகின்றன.

ஒருகாலத்தில் நானும் அரசியல் கைதியாக சிறைவாசம் அனுபவித்தவன் என்ற வகையில், எனக்கேற்பட்ட கசப்பான அனுபவங்கள், அவநம்பிக்கைகள் என்பன இன்னொருவருக்கும் ஏற்பட்டு விடக்கூடாது என்ற நோக்கிலேயே இவ்விடயத்தை தங்களுக்கு முன்வைக்கின்றேன்.

எனவே, எமது மக்கள் நிம்மதியானதும், கௌரவமானதுமான ஒரு வாழ்க்கையை எதிர்நோக்கி செல்கின்ற வேளையில் இவ்வாறான கைதுகளால் எமது மக்களிடையே பல்வேறு ஐயப்பாடுகள் ஏற்படுவது இயல்பானதே.

எனவே இவ்விடயம் தொடர்பில் உரிய அவதானஞ் செலுத்தி உகந்ததொரு ஏற்பாட்டினை தாங்கள் எடுப்பீர்கள் என தான் நம்புவதாக தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

### கூட்டமைப்பிற்கு பங்கம்...

மதித்தோம். அதன்படி அவர் எமது செயற்குழு கூட்டத்திலும் பங்கேற்று வந்தார்.

இந்நிலையில், அவர் கட்சித் தீர்மானங்களை எதிர்த்தும் கூட்டமைப்பிற்கும், அதன் உறுப்பினர்களுக்கும் எதிரான வகையில் உள்ளூர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிப்பது மட்டுமின்றி, சர்வதேச ரீதியிலும் கருத்து வெளியிட்டு வருகிறார்.

அது மட்டுமின்றி யாழில் காணாமற் போனோர் தொடர்பில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டமொன்றின் போது அங்கு சுமந்திரனின் கொடும்பாவி எரிக்கப்பட்டது. அந்த செயலுக்கும் அனந்திக்கும் தொடர்பு இருப்பதாகவும் குற்றச்சாட்டு தெரிவிக்கப்பட்டது.

இவ்வாறு ஒரே கட்சியில் இருந்து கொண்டு, அக்கட்சியின் ஒரு உறுப்பினருக்கும், கூட்டமைப்பிற்கும் எதிராக செயற்பட்டது தொடர்பிலும், அனந்திக்கு எதிராக பல்வேறு குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன. அதனையடுத்து அவரை இடைநிறுத்தவும், விசாரிக்கவும் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டதே தவிர அவரை கட்சியிலிருந்து நீக்கவில்லை.

அத்துடன், அவர் மீது ஒழுக்க நடவடிக்கை மேற்கொள்ளாது ஒற்றுமையாக செயற்பட காலஅவகாசம் வழங்கப்பட்டுள்ளது. ஆனால் அவர் இதுவரை பொதுத் தேர்தலில் போட்டியிடுவதற்கான விண்ணப்பத்தையேனும் சமர்ப்பிக்கவில்லை. எமக்கு நூற்றுக்கும் அதிகமான விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. ஆனால், அனந்தியின் விண்ணப்பம் இதுவரை கிடைக்கப்பெறவில்லை. இந்நிலையில், அவர் தன்னை பொதுத் தேர்தலில் போட்டியிட அனுமதிக்கவில்லை என்று கூறுவது நியாயமற்றதாகும்.

நாங்கள் அமைச்சரவையில் சேர்ந்து கொள்வோம் என்ற கருத்துக்கு இடமில்லை. சென்ற ஆட்சி மாற்றத்தின் போது கூட அந்தக் கோரிக்கை எம்மிடம் விடுக்கப்பட்டது. இனப்பிரச்சினைக்கு தீர்வு தான் எமது நோக்கு என அன்றே நாம் தெரிவித்திருந்தோம்.

தேசிய அரசு அமைப்பதற்கு தமிழ் மக்களின் ஆதரவை பெற வேண்டிய நிலை ஏற்படும் சந்தர்ப்பத்தின் போதுதான். நாங்கள் இனப்பிரச்சினைக்கு தீர்வு, அகதி வாழ்வுக்கு தீர்வு, நிலப் பிரச்சினைக்கு தீர்வு மீள்குடியேற்ற பிரச்சனை, சிறையில் உள்ளவர்களை விடுவித்தல் போன்ற பிரச்சினைகளுக்கு ஒரு தீர்வை எட்டுவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள முடியும்.

வடக்கு, கிழக்கு தவிர்ந்த ஏனைய இடங்களிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தேர்தலில் போட்டியிட வேண்டும் என்ற கோரிக்கை எம்மிடம் முன்வைக்கப்பட்டுள்ளது. அது தொடர்பில் மனோகணேசன் தலைமையிலான கூட்டமைப்புடன் நாங்கள் பேச்சுக்கள் நடாத்தியுள்ளோம். ஏனெனில் அவர்கள் எமது நட்பு சக்தி என்றார்.

கொழும்பு, கம்பஹா மற்றும் புத்தளம் போன்ற இடங்களில் நாங்கள் போட்டியிட்டால் கணிசமான வாக்குகளை பெறலாம். கொழும்பில் போட்டியிட்டால் எமக்கு நிச்சயம் ஒரு ஆசனம் கிடைக்கும். மலையக மக்களின் பிரதிநிதிகள் தங்களுடைய வேட்பாளர்களை நிறுத்துகின்ற போது அவர்களுடன் பேசி ஒரு முடிவை எடுக்க தீர்மானித்துள்ளோம். சுமந்திரன் மற்றும் செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் கொழும்பில் சந்தித்து அது தொடர்பில் பேச்சுக்களை நடாத்தியுள்ளனர் எனத் தெரிவித்தார்.

### இளம் பெண்...

உத்தரவிட்டுள்ளார்.

இந்தப் பாலியல் வல்லுறவு வழக்கில் எதிரிகளாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ள 4 இராணுவ வீரர்களில் 3 பேர் வழக்கு விசாரணைகளில் ஆஜராகி வருகின்றனர். நான்காவது எதிரி இல்லாமலேயே வழக்கு விசாரணைகள் நடைபெற்று வருகின்றன.

இந்த வழக்கு, நேற்று முன்தினம் விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டபோது, இராணுவ பொலிஸ் அதிகாரி வழக்குத் தொடுனர் தரப்பில் சாட்சியமளித்தார். இதேநேரம் வழக்குத் தொடுனர் தரப்பு வழக்கை முடிவுறுத்துவதாக அரச சட்டத்தரணி திருமதி நளினி சுபாகரன் மன்றில் தெரிவித்தார்

அப்போது நான்காவது எதிரி நீதிமன்றத்தில் ஆஜராகியிருக்கவில்லை. அவரது சார்பில் சட்டத்தரணி எவரும் முன்னிலையாகியிருக்கவில்லை. இதனையடுத்து நான்காவது எதிரியாகிய அந்த இராணுவ வீரரை உடனடியாகக் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜராக்குமாறு நீதிபதி இளஞ்செழியன் பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

அந்த எதிரி, வெளிநாட்டுக்கு ஓடியிருந்தால், சர்வதேச பொலிஸாரின் உதவியைப் பெற்று அவர்கள் மூலமாக அவரைக் கைது செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் நீதிபதி தமது பிடியாணை கட்டளையில் உத்தரவிட்டுள்ளார்.

இந்தப் பிடியாணை தொடர்பாக பொலிஸ் மா அதிபர், இராணுவத் தளபதி ஆகியோருக்கும் உடனடியாக அறிவிக்குமாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

எதிரி தரப்பு சாட்சிகளை அழைப்பதற்காக வழக்கை நீதிபதி எதிர்வரும் 27 ஆம் திகதிக்கு ஒத்திவைத்துள்ளார்.

இப்பத்திரிகை இல: 373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2015 யூலை 9ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.